பிழைக்கும் வழி

வித்யா விஹாரிணியும் சேர்ந்தது.

PRACTICAL LIFE.

WITH WHICH IS INCORPORATED THE VIDYA VIHARINI.

ஜி. எ. வைத்தியராமன், பி. எ.,
பத்திராதிபர்

G. A. VaidyaRaman, B. A.
EDITOR.

புஸ்தகம் 4. Vol. 4. — பரீதாபிஞூ மார்கழிமீ, DECEMBER 1912. — ஸஞ்சிகை 12 No. 12

Practical Life.

A popular illustrated Tamil monthly magazine of general information and instruction devoted largely to agriculture, trade, industry, citizenship and popular, scientific and technical education.

RATES OF SUBSCRIPTION POST FREE.

	Inland. Rs. A. P.		*Foreign.* Rs. A. P.
Per annum ...	4 0 0	... ...	6 0 0
Single copy ...	0 6 0	... ...	0 8 0
Sample copy ...	0 2 0	... ...	0 3 0

RATES OF ADVERTISEMENT.

1 Page	... 5 0 0	per month.
½ do	... 2 8 0	do
¼ do	... 1 4 0	do

The above rates are all *net* and subject to no discount whatever. Orders should be accompanied with advance.

Notice to Contributors:—The Editor solicits contributions on subjects relating specially to agriculture, trade, industry and popular, scientific and technical education. Articles intended for the journal should be written in plain colloquial Tamil on one side of the paper only and on half margin. All articles which may be accepted will be paid for on publication. It will be understood that the publishers may at their discretion republish in book form articles which have been paid for at the time of publication in the journal.

No money should be paid to any Agent. All remittances and letters should be addressed to the Publishers, Messrs. G. A. VaidyaRaman & Co., 3 &4, Sunkurama Chetty Street, Georgetown, Madras.

பிழைக்கும் வழி.

முக்கியமாய் விவஸாயம், வியாபாரம், கைத்தொழில், ப்ரஜா லக்ஷணம், வித்யா விஷயங்கள் அடங்கிய ஸகலருக்கும் உபயோகமான ஒருமாஸாந்தரத் தமிழ்ப் பத்ரிகை.

தபாற்கூலி உள்பட சந்தா விவரம்.

	உள் நாடு.		அந்நிய நாடு.
வருஷம் 1 க்கு ...	4 0 0	...	6 0 0
தனிப்பிரதி ...	0 6 0	...	0 8 0
மாதிரி காபி ...	0 2 0	...	0 3 0

சந்தாப்பணத்தை ஒரு ஏஜெண்டினிடத்திலும் கொடுக்கக்கூடாது. ஸகல பணத்தையும் எங்களுக்கு நேரில் அனுப்பிவிடவேண்டும்.

விளம்பர விகிதங்கள்.

1 பக்கத்திற்கு	மாஸம்	ஒன்றுக்கு	5 0 0
½ பக்கத்திற்கு	,,	,,	2 8 0
¼ பக்கத்திற்கு	,,	,,	1 4 0

வியாசம்எழுதுகிறவர்கள்கவனிக்கவேண்டியவை

விவஸாயம், வியாபாரம், கைத்தொழில் விஷயங்களைப்பற்றி வியாஸங்கள் தேவை. அவைகள் ஒப்புகொள்ளப்பட்டால் பிரசுரமானதும், எழுதினவர்களுக்கு தக்க ஸம்பாவனைசெய்யப்படும். ஒவ்வொரு வியாஸத்தையும் கடுதாசியின் ஒரேபக்கத்தில் ஒருபாதியை விட்டு மறுபாதியில் மட்டும் எழுதவேண்டும். பேசும் தமிழ்தான் தேவை. கடினமான தமிழ் உதவாது.

இந்தப் பத்ரிகையில் பிரசுரமாகும் வியாஸங்களுக்காக கிருபர்களுக்கு ஸம்பாவனை செய்திருக்கும் பக்ஷத்தில், அந்த வியாஸங்களை நாங்கள் எங்கள் இஷ்டப்படி எந்த விதம் வேணுமானாலும் மறுபடி பிரசுரிக்க அதிகாரமுண்டு என்பதை கிருப நேயக்கள் அறியவேணும்.

ஜி. எ. வைத்தியராமன் அண்டு கம்பெனி,
3 & 4, சுங்குராம செட்டித் தெருவு, ஜார்ஜ் டவுன், மதராஸ்.

SPECIAL ARTICLES.

விசேஷ வ்யாஸங்கள்.

PAPER TOWELS AND CUPS,

BY

S. GANAPATI SUBRAMANIAM, M.A., L.T.,
Sub-Assistant Inspector of Schools, Mannargudi.

காகித கைக்குட்டைகளும், கிண்ணங்களும்.

நம்முடைய தேசத்தில் ஸ்திரீகளானாலும் ஸரி, புருஷர்களானாலும் ஸரி, எப்போதாவது கையை அலம்பினல், தாங்கள் உடுத்திக்கொண்டிருக்கும் வஸ்த்ரங்களில் கையைத்துடைத்துக் கொள்வது ஸாதாரண வழக்கமாயிருக்கிறது. உடம்பு ஜாஸ்தியாய் வியர்வைவிடும் போது அநேகம் பேர்கள் தாங்கள் கட்டியிருக்கும் வஸ்திரத்தினலேயே வியர்வையைத் துடைத்துவிடுகிறார்கள். அடுப்பங்கரையிலிருந்து வேலை செய்யும் ஸ்திரீகள் தங்கள் வியர்வையைத் துடைக்க தங்களுடைய புடவையையே உபயோகிக்கிறார்கள். ஆனல் இப்போது நாகரீகம் பரவப் பரவ ஜனங்கள் புதிய முறைகளை அனுஸரித்து வருகிறார்கள். அநேகமாய் உத்யோகஸ்தர்களும், வேறு சில இங்கிலீஷ் படித்தவர்களும் கைக்குட்டைகளை வைத்துக்கொண்டு தங்கள் கைகளையும், முகங்களையும் துடைத்துக்கொள்ளுகிறார்கள். இந்த நாகரீகம் நம் தேசத்து வைதிக ப்ராமணர்களிடத்தும் இங்லீஷ் தோரணை வருமுன்னமே இருந்திருப்பதை நாம் பார்க்கலாம். அவர்கள் பஞ்சகச்ச யோகவேஷ்டியோடு ஒருசிறு துண்டு வேஷ்டியும் வைத்திருப்பார்கள். இத்துண்டை அடிக்கடி கைகால்கள் அலம்பும்போது அவைகளை துடைக்க உபயோகிப்பார்கள். மேலே சொன்ன நாகரீகம் புருஷர்களோடு மட்டில் நிற்கவில்லை. அநேகம் வீடுகளில் ஸ்திரீகளும் சிறு குட்டைகளை அடுப்பங்கரைகளிலும் வெளியில் போகும்போதும் உபயோகிக்கிறார்கள், இந்தமாதிரியான வழக்கம் நல்லவழக்கந்தான். ஏனென்றால் தங்கள் தேகத்திலுள்ள அழுக்கும், கைகால்களைக் கழுவுவதனல் உண்டாகும் ஈரமும் அவர்கள் தரித்திருக்கும் வஸ்திரங்களில் தங்காமல் ஒரு சிறுகுட்டையிலேயே தங்குகிறது. ஆனல் இப்படிப்பட்ட கைகுட்டைகள் சீக்ரத்தில் அழுக்காகிவிடுவதால் அவைகளை அடிக்கடி தோய்ப்பதுமல்லாமல் வண்ணானுக்குப் போடவேண்டியுமிருக்கிறது. இதற்காக சில ப்ரதேசங்களில் துணிக்குட்டைகளை உபயோகிக்காமல் காகித கைக்குட்டைகளையே உபயோகிக்கிறார்கள். கடுதாசியினல் செய்யப்பட்ட குட்டைகளை உபயோகப்படுத்தி வருவதனல் உண்டாகும் ஸுகாதார நன்மைகளை முதல் முதல் அறிந்து அனுபோகத்துக்குக் கொண்டு வந்தவர்கள் அமெரிக்கர்களே. அந்த தேசத்தில், அநேகம் பள்ளிக்கூடங்களிலும், க்ளப்புகளிலும், இன்னும் இவை தவிர வேறு சில விடங்களிலும் இந்தக் கைக்குட்டைகள் ஏராளமாய் உபயோகப்பட்டு வருகின்றன. இந்தக் குட்டைகளையெல்லாம், ஒருதரம் உபயோகித்துவிட்டால், அவைகளைத் திரும்பி வைத்துக்கொள்வதில்லை. அவைகளைத் தூர எறிந்துவிடுவதாம். இந்த மாதிரியான குட்டைகளை உபயோகித்து வருவதினல் தோலைப்பற்றிய வியாதியும், கண்ணோயும் ஒருவரை விட்டு மற்றொருவருக்கு பரவாது என்று சில டாக்டர்கள் சொல்லுகிறார்கள். அங்கேசில மாஹாணங்களிலுள்ள வித்யாதிகாரிகள் எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் கடுதாசு கைக்குட்டைகளை உபயோகித்துக்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்களாம். இன்னுமொரு இடத்தில் ஒரு ஹைஸ்கூலில் கடுதாசு குட்டைகளை உபயோகப்

படுத்தும்படி உத்தரவாயிருக்கிறது. கனடா தேசத்திலுள்ள ஸ்கூல் போர்டானது காகித குட்டைகள் மாத்திரமல்லாமல், காகித கிண்ணங்களையும் ஸர்க்கார்ப் பள்ளிக்கூடங்களில் உபயோகிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நம்முடைய தேசத்தில் காகிதக் கிண்ணங்களை உபயோகிக்காத போனாலும், வாழையிலைக் கிண்ணங்களாகிய தொன்னைகளை உபயோகித்துவருகிறோம். காகிதக்கிண்ணங்களை ஒரு தரம் உபயோகித்தால் அதை எறிந்து விடுகிறார்கள். நம்முடைய தேசத்திலும் ஒருதரம் உபயோகித்த தொன்னையை எறிந்துவிடுகிறோம். ஆயினும் நாம் முக்யமாய் காகிதக் குட்டைகளையே கவனிப்போம். மேல் சொன்ன காகிதக் குட்டைகள் ம்ருதுவாயும், சிறியவையாயும், லகுவாய் ஈரத்தை இழுக்கும்படியாயும் ஈரம்பட்டால் கிழியாமலும் இருக்கின்றனவாம். இவைகள் தனித்தனியாயும் கிடைக்கும். அல்லது ஒரு பீஸாகவும் கிடைக்கும். பீஸிலிருந்து வேண்டியபோது கிழித்துக்கொள்ளலாம். வண்ணானுக்குப் போட்டால் ஒரு கைகுட்டைக்கு என்ன கூலிகொடுக்கவேண்டுமோ அதைக்கொண்டு ஸுமார் மூன்று காகிதக் குட்டைகள் வாங்கிவிடலாம். ஒரு ரூபாய்க்கு ஒருமுழநீளம், முக்கால்முழ அகலமுள்ள காகிதக் குட்டைகள் ஸுமார் 400 வாங்கலாமாம். காகிதக் கைகுட்டைகளை உபயோகிப்பதால் துணிக் கைக்குட்டைகளில் அழுக்கும் வியர்வையும் தங்குவதுபோல அதில் தங்க ஹேதுவில்லை. ஏனென்றால் ஒரு தரம் உபயோகித்தால் அதை எறிந்து விடுவதினால்தான். மேலும் ஒருதரம் உபயோகிக்கப்பட்ட துணிக் குட்டையை மறுபடியும் நாம் உபயோகிப்பது அவ்வளவு ச்லாக்கிய மல்ல. வேறு வழியில்லாமல் உபயோகிக்க வேண்டியிருக்கிறது. இவைகளின் உபயோகம் பரவினால், ஈரத்திற்கு பயப்பட்டு அடிக்கடி கைகால் கழுவாத ஜனங்களும், தங்களுடைய முகம், கால் கைகளைக் கழுவுவார்கள். எந்த வேலை செய்பவனுடைய கைகளிலும் அழுக்குப்படிந்திருக்கும். வேலை முடிந்ததும் கைகளையும், முகங்களையும் கழுவவேண்டும். மத்தியில் ஸாப்பிடும் ஸமயங்களிலும் கழுவிக்கொள்ளவேண்டும். மேலும் அப்பேர்பட்ட ஸந்தர்ப்பங்களில் இவைகள் உபயோகப்படும். ஸுகாதாரங்களை நன்றாய்க் கற்றுணர்ந்தவர்களும், ஒருவர் உபயோகித்த குட்டைகளையும், வேஷ்டிகளையும் சில ஸமயங்களில் உபயோகிக்கிறார்கள்.

ஜர்மெனி தேசமானது இது விஷயத்தில் நல்ல ஜாக்ரதையும் கவனமும் செலுத்தி வருகிறது. நல்ல காகித கைக்குட்டைகள் செய்பவர்களுக்கு மூன்று இனும் கொடுப்பதாக ப்ரசுரம் செய்திருக்கிறார்கள். அவைகளில் முதல் தரமான குட்டைகளை வாங்கி பள்ளிக்கூடங்கள், ரயில்வே ஸ்டேஷன்கள், ஹோட்டல் முதலிய விடங்களில் உபயோகிக்கப்போகிறார்கள். இங்கிலீஷ் தோரணையுள்ள அநேகம் க்ளப்புகளில் ஒரு தரம் உபயோகித்த துணியைத் தோய்த்து உலர்த்தாமல் காயப்போட்டு வைத்துவிடுகிறார்கள். அநேகம் ஆஸ்பத்திரிகளிலும் இதே மாதிரி நடந்து வருகிறது.

ஸமீபத்தில் லண்டன் நகரத்தில் நம்முடைய சக்ரவர்த்தி குழந்தைகளுக்கு தம்முடைய க்ரிஸ்டல் பாலெஸ்என்னும் அரணமனையில் விருந்து அளித்தார். அப்போது கடுதாசு கிண்ணங்களை உபயோகித்து பார்த்ததில் ஸௌகரியமாயிருந்ததாம். அமெரிக்கா தேசத்தில் ஒரு ரயிலில் ஒவ்வொரு கம்பார்ட் மெண்டிலும் இந்தக் கிண்ணங்களை வைத்திருக்கிறார்களாம் இவைகள் ஜனங்கள் ஸௌகர்யத்திற்காகவாம். கண்ணாடி மூடிபோட்ட ஒரு குழாயில் இவைகளை வைத்திருக்கிறார்கள். அந்த கிண்

ணங்களை கையால் எடுப்பதில்லை. யந்திர யுக்தியால் ஒரு கைபிடியை சுற்றினால் ஒவ்வொன்றொன்றாய் வெளிவருகிறதாம்.

இவைகளை உபயோகிப்பதனால் வியாதிகள் அதிகமாய்ப் பரவாததுமன்றி, வண்ணான் கூலியும் லாபமாகிறது. இங்கிலீஷ்காரர்கள் கடுதாசியினால், டேபிள்க்ளாத்தும், ப்ளேட்டுகளும், கிண்ணங்களும் செய்கிறார்கள். பேபர் புட்டிகளில் பால் அடைத்து வியாபாரஞ் செய்ய முயன்றதில் அதிக பயன்படவில்லையாம். வருஷா வருஷம் கடுதாசியின் இறக்குமதி ஜாஸ்தியாய்க்கொண்டே வருகிறது. இதைப் பார்த்து கடுதாசியை அநேக விதங்களில் உபயோகிக்கிறார்கள் என்றறியலாம்.

எஸ். கணபதிஸுப்ரமணியம்.

THE DAIRY.

BY

N. V. SUBRAMANIA SASTRY.

பால், தயிர், நெய் வ்யாபாரம்.

சில ஆண்டுகளுக்குமுன் அதாவது, 10-15 வருஷங்களுக்கு முன் நெல் முதலான ஒவ்வொரு ஸாமான்களுக்கிருந்த விலையையும், இப்பொழுது விற்கும் விலையையும் யோசித்துப் பார்த்தால் எல்லாம் தலைகீழாய் இருக்கிறதென்பது எல்லாருக்கும் தெரிந்ததுதான். முன் ஒருபடி ஒரு அணாவாயிருந்ததெல்லாம் இப்பொழுது இரண்டு மூன்று அணாவாயும், ஒருபலம் அரையணாவாயிருந்ததெல்லாம் இரண்டு அணாவாயும் இருப்பதை நாம் பார்க்கிறோம். நம்முடைய ஆஹாரத்தில் முக்யமான நெய்க்கு முன்னிருந்த விலையையும் இப்பொழுதிருக்கும் விலையையும் பார்த்தால், மலைக்கும் மடுவிற்குமுள்ள வித்யாஸம்போலிருக்கிறது. ரூபாய்க்கு நான்குசேர் விற்ற காலமெல்லாம் போய், இப்பொழுது ரூபாய்க்கு $2\frac{1}{2}$ சேர் அகப்படுவதுகூட வருத்தமாயிருக்கிறது. இப்படி ரூபாயைக் கொடுத்தாலுங்கூட நறுமணமுள்ள நெய்யைப் பார்ப்பதே அரிதாயிருக்கிறது. இந்த ஸமயத்தில் சிலர் பசும் நெய்யென்று எருமை நெய்யைக்கலந்து ரூபாய்க்கு இரண்டு சேராக விற்றுவிடுகிறார்கள். இப்பொழுதே சில ஏழைகள் நெய்க்குப் பதிலாக நல்லெண்ணெயை உபயோகிக்கிறார்கள். இவ்வளவு வறுமை ஏற்பட்டதற்குக் காரணமென்னவென்றால், மழையில்லாமல் நல்ல விளைவில்லை என்றும், நல்ல கறவை இல்லை என்றும், சொல்லக்கூடும். அப்படிச் சொல்வது அறிவில்லாமையைக் காட்டுமென்று உறுதியாய்ச் சொல்லுகிறேன். இப்பொழுது வருஷா வருஷம் போதுமான மழை பெய்யவில்லையா? ஆற்றிலும் ஸரியான காலத்தில் ஜலம் வரவில்லையா? ஒவ்வொரு ஊரிலும் உயர்ந்த மாடுகள் கறக்கவில்லையா? கால்நடைகளுக்குப் போதுமான ஆஹாரம் கிடைக்கவில்லையா? எல்லாமிருந்தபோதிலும், காலத்திற்குத் தகுந்தபடி ஸரியான வழியில் முயற்சி செய்யாமலிருக்கிற இவர்களின் சோம்பலே காரணமாகும்.

நெய்க்கு இவ்வளவு விலை அதிகப்படக் காரணமென்னவென்றால், நாகரிகம் அதிகமாக அதிகமாக எல்லாவற்றையும் கற்றுணர்ந்த அயல்நாட்டார்கள் கூட (க்ருதேந வர்த்ததே புத்தி) என்கிற வடமொழி வாக்யப்ரகாரம் நெய்யினால் புத்தி வளர்கிறதென்று அறிந்து, நெய்யை உபயோகிக்கத் தலைப்பட்டு விட்டார்கள். அதனால் இங்கிருந்து வெளிநாட்டிற்கு ஏராளமான நெய் அனுப்பப்படுகிறது. ஆகையால்தான் இங்கு விலையதிகமாகிக் கொண்டு வருகிறது.

ஆகையால் சில இடங்களில் ம்ருகங்களின் கொழுப்பைக் காய்ச்சி நெய்யுடன் சேர்த்து விற்கிறார்கள். இன்னும் சில நிபுணர்கள் இதுதான் ஸமயமென்று எண்ணி, பருத்திக்கொட்டை முதலான வித்துக்களினின்று நெய்

யெடுத்து லாபமடைய முயலுகிறார்கள். சில வெளிதேசங்களில், தேங்காயிலிருந்து வெண்ணெய் எடுக்க எத்தனிக்கிறார்கள். கூடிய சீக்ரத்தில் அவர்களுடைய முயற்சிகள் ஸபலமாய் நாமுமதை யனுபவிக்கலாம். இப்படி ஒவ்வொருவரும் அவரவர்களுடைய ஸாமர்த்யத்திற்குத் தகுந்தபடி தக்க ஸமயத்தை அறிந்து தகுந்த லாபத்தை ஸம்பாதிக்க எத்தனிக்கிறார்கள். அதைப்போல் நாமும் யந்த்ர ஸகாயம் ஒன்றுமில்லாவிட்டாலும் உயர்ந்த மாடுகளிலிருந்து இந்த லாபத்தை ஏகுவாய் அடையலாம். இப்பொழுது அநேக இடங்களில் அவரவர்கள் வீட்டுச்செலவிற்காக மட்டும் மட்டு விலையுள்ள மாடுகளை வைத்திருக்கிறார்களே ஒழிய, அதன் லாபத்தை அறிகிறார்கள் இல்லை. சிற்சில இடங்களில் மட்டும் மாட்டைக் கொண்டே ஜீவித்து வருகிறார்கள். இதன் லாபத்தைக் குறித்து இங்கு சுருக்கமாய் எழுதுவோம்.

ஸ்வல்ப தனமுள்ள ஏழைகள் அதிகப்பணம் வருமென்று வீணாசைகொண்டு, பணத்தை பண்டுகளிலும், கம்பெனிகளிலும், போடாமல் வேளைக்கு 10-சேர் கறவையுள்ளதாயும், அதிக மெதப்புள்ளதாயுமிருக்கிற நல்ல ஜாதி மாடுகளை வாங்கலாம். அவ்வித மாடுகள் ஸுமார் எழுபது எண்பது ரூபாய்க்குக் கிடைக்கும். ஆனால் சிலர், மாட்டில் அவ்வளவு ரூபாயைப் போடுவார்களா, மாட்டோடு பாடுபட யாரால் முடியும் என்று சொல்வார்கள். அப்படிச் சொல்லுகிறவர்கள் 20,25-க்கு மாட்டை வாங்கிவிட்டு நல்ல கறவை இல்லாததால், கஷ்டப்பட்டு இதையும் அப்படியே எண்ணுகிறார்கள். அப்படி எண்ணுவது மிகவும் பிசகு. ஒரு கஷ்டமுமில்லாமல் இதில் அடையும் லாபத்தைப்பாருங்கள்.

இப்படிப்பட்ட மாடுகளுக்கு ஒரு மாஸத்திற்கு எட்டுக்கட்டு வைக்கோலுக்கு ரூ 1-0-0. புல்லுக்கட்டு தினம் ஒன்றுக்கு $1\frac{1}{2}$-அணாவாக ஒரு மாஸத்திற்கு ரூ 2-10-0. தவிடு வேளைக்குக் குருணியாக தினம் இரண்டு வேளை வீதம் மாஸம் 5-கலத்திற்கு ரூ 2-0-0. பிண்ணாக்கு தினம் இரண்டு சேராக மாஸத்திற்கு $1\frac{1}{2}$ மணுவிற்கு ரூ 1-8-0. பருத்திக்கொட்டை $1\frac{1}{2}$மணுவிற்கு ரூ 1-8-0. தொட்டிக்காக தேங்காய்ப் பிண்ணாக்கு முதலானவற்றிற்கு 9-அணா. ஆக மொத்தம் ரூ 9-6-0. இது கொடுக்கும் பாலோ வேளைக்குப் பத்துச்சேராக, இரண்டு வேளைக்கும் 20-சேர். இந்த இருபது சேருக்கும் ஸகஜமாய் $1\frac{1}{4}$-சேர் நெய் எடுக்கலாம். இந்தப் பாலின் தயிர் சேர் காலணாவாக 20 சேருக்கும் 5-அணா தாராளமாய்க் கிடைக்கும். இப்படி தினம் ஒன்றுக்கு ஐந்து அணாவாக ஒரு மாஸத்திற்கு ரூ. 9-6-0. தினம் ஒன்றுக்கு நெய் $1\frac{1}{4}$-சேராக ஒரு மாஸத்திற்கு $37\frac{1}{2}$-சேர். இந்த $37\frac{1}{2}$-க்கும் கால க்ரயப்படி ரூபாய்க்கு $2\frac{1}{2}$ சேராக, 15 ரூ ஆகிறது. மாட்டின் மொத்த வரும்படி 24-ரூபா 6-அணா. இதில் மாட்டின் செலவு ரூ 9-6-0 போக பாக்கி 15 ரூபாய் வரும்படியாகிறது. இப்படி மாஸம் 15-ரூ வரும்படி என்றால் அதன் மகிமையை அவரவர்களே அறிவார்கள்.

இப்படிப்பட்ட மாடுகள் ஸகஜமாய் 18-மாஸம் வரையில் கறக்கும். இரண்டு வருஷங்கூட கறப்பதுண்டு. இப்படி எல்லாச் செலவும் போக 15 ரூபாய் ஸ்வல்ப தனத்தைக்கொண்டே ஸம்பாதிக்கலாம். இப்படி ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு மாடு இருக்குமானால் எவ்வளவு நன்மையா யிருக்குமென்பதை அவரவர்களே அறியவேண்டும். அன்றியும், அதிலுற்பத்தியாகும் கன்றுகளை நன்றாய் வளர்த்துவந்தால் நாம் போட்ட முதலை அவைகளே கொடுத்துவிடும். ஆகையால் இவ்வளவுலாபமுள்ள இத்தொழிலை ஏழைகள் கைக்கொள்வார்களேயானால்

சீக்கிரத்தில் முன்னுக்கு வருவார்க ளென்பதில் கொஞ்சமேனும் ஐயமில்லை.

இதற்கு உதாரணமாய் தஞ்சாவூருக்கடுத்த திருவையாற்றில் காப்பி க்ளப் வைத்திருக்கும் ராமானுஜாசாரியரிடம் ஒரு மாடு இருக்கிறது. அந்த மாட்டின் விலை 60 ரூபாய் வரையிலும் இப்பொழுது கேட்கப்படுகிறது. அதினுடைய மெதப்பின் மதிப்பு ஒரு சேருக்கு மேலாகவே இருக்கிறது. ஆனலவர் அப்பாலைக் காய்ச்சிக் கடைந்து தயிர் நெய்யாக வ்யாபாரம் செய்கிறதில்லை. பாலாகவே க்ளப்பிற்கு உபயோகப்படுத்திக்கொள்ளுகிருர். அப்படியானுலும் லாபத்திற்குக் குறைவில்லை. ஷை யூரிலேயே ராமச்சந்த்ர ராவ் என்பவரிடத்தில் ஒரு உயர்ந்த பசு இருக்கிறது. அது வேளைக்கு10-12 சேர் கறக்கிறது. இதைக்காட்டிலும் உயர்ந்த பசுக்களும் எருமைகளுங்கூட இருக்கின்றன. அப்பேர்ப்பட்ட மாடுகளை நாம் போஷித்து வந்தால் அதிக லாபத்தை அடைவோமென்பதில் ஸந்தேகமே இல்லை. இவ்வித லாபத்தை மாடுகளில்லாத இடங்களில், வெள்ளாடு வைத்திருப்பவர்கள் அடைகிருர்கள். மாட்டின்பாலைவிட ஆட்டின் பால் அதிக ஸத்துள்ளதாகையால், அதற்கு விலையும் அதிகமுண்டு. இவ்வித லாபத்தை ஆட்டினின்றும் லகுவாய் அடையலாம். வடதேசங்களில் 4-5 சேர் கறக்கக்கூடிய ஆடுகளும் இருக்கிறதாகச் சொல்லுகிருர்கள்.

இவ்வாறு கால்நடைகளின் அபிவ்ருத்தி இல்லாமலிருப்பதே நமது நாட்டிற்கு ஒரு பெருங் குறையென்று தேசாபிமானிகள் எண்ணுகிருர்கள். இவ்வாறு செய்தால் கால்நடைகள் அபிவ்ருத்தியாவதுடன், நல்ல லாபத்தை அண்டவார்களென் றெண்ணி ப்ரிய முள்ள "பிழைக்கும் வழி"யைப் படிக்கும் நேயர்களுக்கு இதையறிவிக்கலானேன்.

என், வி, ஸுப்ரமண்ய சாஸ்த்ரீ.

DR. NAIR'S ADDRESS.

டாக்டர் நாயரின் ப்ரஸங்கம்.

போன மாஸத்தில் பட்டுக்கோட்டையில் நடந்த தஞ்சாவூர் ஜில்லா கான்பரென்ஸில் அக்ராஸனதிபதியாயிருந்த டாக்டர் நாயர் செய்த ப்ரஸங்கத்தில் அவர் தஞ்சாவூர் ஜில்லாவின் நீர்ப்பாசனத்தைப்பற்றிச் சொன்னதை போன மாஸத்து ஸஞ்சிகையில் ப்ரசுரித்தோம். இன்னும், வேலையாட்கள் அக்கரைச் சீமைக்குபபோதல், கல்வி, ஸ்தல சுய ஆட்சி, இவைகளைப்பற்றி டாக்டர் நாயர் பேசியதைச் சுருக்கி கீழே எழுதுகிருேம்.

வேலையாட்கள் அக்கரைச் சீமைகளுக்குப் போதல்.

தஞ்சாவூர் ஜில்லாவிலிருந்து வேலையாட்கள் அக்கரைச் சீமைகளுக்கு போவது பொருளாதார நிலைமையை உத்தேசித்து மிகவும் கெடுதலானது. தேசம் முழுவதும் ஜனங்கள் வெளி தேசங்களுக்குக் குடியேறிப் போகிருர்கள். அவர்களோடு தஞ்சாவூரார்களும் போகிருர்கள் என்பதல்ல. தஞ்சாவூர் ஜில்லா ஜனங்கள் வேறு நாடுகளுக்குக் குடியேறிப் போவது ஸாதாரணமானதல்ல. ஸென்ஸெஸ் ரிபோர்ட்டுகளிலிருந்து சில கணக்குகள் எடுத்துக் காட்டினுல் நன்ருய்த் தெரியவரும். தஞ்சாவூர் தென்னுற்காடு இந்த ஜில்லாக்களை உதாரணமாக எடுத்துக்கொள்ளுவோம். இந்த இரண்டு ஜில்லாக்களும் ரொம்பப் பக்கமாயிருப்பவைகள். அவைகளின் ஜனத்தொகை அநேகமாய் ஸமமாகவே இருக்கிறது. தஞ்சாவூர் ஜில்லாவில் 23,62,689 ஜனங்கள் இருக்கிருர்கள். தென்னுற்காட்டிலும் 23,62,566 பேர் இருக்கிருர்கள். இரண்டிற்கும் உள்ள வித்யாஸம் 123 பேர்தான். சில வருஷங்களுக்கு முன்னுல் இவைகளின் ஜனத்தொகை எப்படி இருந்தது என்று பார்ப்போம்.

	1911-ம் ௵	1901.	1891.
தஞ்சாவூர்.	2,3,62,689,	22,45,029,	22,28,114
தென்னாற்காடு.	2,3,62,566,	21,05,809,	19,57,448.

இதனால் என்ன தெரிகிறது? தஞ்சாவூர் ஜில்லா ஜனத்தொகை, 1891-ம் வருஷ ஸென்ஸெஸில், 1,17,660 பேர் அதிகமாயும், அடுத்த ஸென்ஸஸில், 16,914 பேர் அதிகமாயும், 1911-ம்வருஷ ஸென்ஸஸில் 1,34,575 பேர் அதிகமாயும் வ்ருத்தியாயிருக்கிறது. தென்னாற்காட்டின் ஜனத்தொகையோ 1891-ம் வருஷ ஸென்ஸஸில் 2,56,757 பேரும், அடுத்த ஸென்ஸஸில், 141,361, பேரும், 1911 ம் வருஷ ஸென்ஸஸில் 4,05,118 பேரும் அதிகமாய் வ்ருத்தியாயிருக்கிறது. இந்த இரண்டு ஜில்லாக்களின் நிலைமையும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாயிருக்க, ஒரு ஜில்லாவில் ஜனத்தொகை ரொம்ப அதிகரித்தும் மற்றொரு ஜில்லாவில் அப்படி ரொம்ப அதிகரிக்காமலும் இருக்கிறது. அதனால் என்ன தெரிகிறது? ஜனத்தொகை ரொம்ப அதிகரிக்கும் ஜில்லாவில் குடிகள் வெளிநாடுகளுக்குப் போகாதபடி சில தடங்கல்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று சொல்லவேண்டியிருக்கிறது.

ஜனத்தொகை அதிகமானதை இன்னம் ஆராய்ந்துப் பார்ப்பதால் இந்த விஷயம் நன்ருய் விளங்கும். 1891-லிருந்து 1901-வரையில் உள்ள கணக்குகளை எடுத்துக்கொள்வோம். தென்னாற்காட்டில் ஆண்கள் 70,000 பேர் அதிகமானார்கள். தஞ்சாவூரிலோ ஆண்கள் 78 பேர் தான் அதிகமானார்கள். இப்படி தஞ்சாவூரில் ஜனத்தொகை மிகவும் கொஞ்சமாய் அதிகரித்தது புருஷர்களில்தான். அதிலும் எத்தனை வயதில் ஜனங்கள் எவ்வளவு பேர் அதிகரித்திருக்கிறார்கள் என்று கணக்குகளைப் பார்த்தால் வயது வந்த ஆண்கள்தான் குறைவடைந்திருக்கும் என்று தெரியும். இப்படி ஜனங்களின் தொகை கொஞ்சமாய் வ்ருத்தியாவது க்ராமங்களில்தான் என்பதல்ல. சென்னை ராஜதானியில் 50,000-த்துக்கு மேற்பட்ட ஜனத்தொகையுடைய பட்டணங்களெல்லாம் 3, 4, ஸென்ஸஸ் கணக்குகளின் படி ஜனத்தொகையில் அதிகரித்திருக்கின்றன. 1891-ம் வருஷத்து ஸென்ஸஸில் தஞ்சாவூரும், 1901-ம் வருஷத்து ஸென்ஸஸில் நாகப்பட்டணமும், 1911-ம் வருஷத்து ஸென்ஸஸில் சேலமும் இப்படி அதிகரிக்கவில்லை. இந்த விஷயங்களை யெல்லாம் கவனித்துப் பார்க்கும்போது தஞ்சாவூரிலுள்ள வயதுவந்த ஆண்கள் வெளிநாடு செல்வதாகத் தெரிகிறது. மேலும் அவர்கள் இப்படிச் செல்வது ராஜதானி முழுவதும் ஜனங்கள் வெளியேறுவதைப்போன்றதல்ல. இந்த ஜில்லாவில் பொருளாதார ஸம்பந்தமான சில காரணங்களால் இப்படி ஜனங்கள் வெளிநாடுகளுக்குப் போகிறார்கள் என்று தெரிகிறது.

இப்படி ஜனங்கள் வெளியேறுவதற்கு ஸரியான காரணம் என்னவென்றால், நீர்ப்பாசனமும், வடிகாலும், குறைப்பாடுள்ளனவாயிருப்பதால், விவஸாயம் ஸரியான நிலைமையில் இல்லாமலிருப்பதே. இப்படி ஜனங்கள் வெளியேறுவதை நிறுத்தவழி, நீர்ப்பாசனத்தையும் வடிகாலையும் ஸரியான நிலைமையில் வைத்து விவஸாயத்தை வ்ருத்தி செய்வதுதான்.

கல்வி

கல்வி விஷயத்தில் தஞ்சாவூர் ஜில்லாவையும் மற்ற ஜில்லாக்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தஞ்சாவூர் ஜில்லா நல்ல ஸ்திதியிலிருக்கிறதென்றே சொல்லலாம். இதனால் தஞ்சாவூர் ஜில்லாவைப்பற்றி ரொம்ப ப்ரமாதமாய் எண்ணிவிடக்கூடாது. இந்த ஜில்லாவில் 23,62,689 பேர் இருப்பதில் 2,64,485 பேரே எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அவர்களில், 22,526 பேர்தான் இங்கிலீஷ் கற்

றவர்கள். ஆகவே எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 20,98,204 பேர்கள் இருக்கிறார்கள். அதாவது 9-பேருக்கு 8-பேர் எழுதப்படிக்கத் தெரியாதவர்களா யிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இந்த ஜில்லா கல்வி அதிகம் பரவியிருக்கும் ஜில்லாக்களில் ஒன்றாம்! நம் தேசத்துப் பையன்களில் பெரும்பாலார் தரித்ரத்தோடும், கல்வி யறிவு இல்லாமலும் ஜீவனம் தொடங்க வேண்டியிருக்கிறது. இந்தப் பையன்களுடைய கஷ்டங்களில் ரொம்பவும் கெடுதலான கல்வி யறிவு இல்லாமையை இன்னம் நீக்காமலிருக்கிறோம். இந்தக் குறையை நீக்க மிஸ்டர் கோகலே கீழ்தரக்கல்வி மசோதா ஒன்று இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் கொண்டுவந்தார். அந்த மசோதா எவ்வளவோ ஸௌகர்யமானதா யிருந்தும் அது சட்டமாக்கப்படாமல் போயிற்று.

கீழ்தரக்கல்வி பரவச்செய்வது ராஜாங்கத்தாரின் பொறுப்பாகும். இது விஷயமாய் ஸ்தல ஸ்தாபனங்கள் (லோகல் போர்டு, முனிஸிபாலிடிகள்) இம்பீரியல் கவர்ன்மெண்டாரோடு சேர்ந்து ராஜாங்கத்தின் ப்ரதம கடமையைச் செலுத்தவேண்டும். ஜனங்களின் கல்வி யறிவு இல்லாமையைப் போக்குவதற்கும் குறைப்பதற்கும் க்ராமவாஸிகளும், பட்டணவாஸிகளும், நகர வாஸிகளும் ஒன்று சேர்ந்து உழைக்கவேண்டும். தஞ்சாவூர் ஜனங்கள், இந்தக் கார்யத்தில் முன் வருவார்களென்று தாம் நம்புவதாக டாக்டர் நாயர் சொன்னார்.

டாக்டர் நாயர் அவர்கள் வட ஆற்காடு டிஸ்ட்ரிக்ட் கான்பரென்ஸில் இது விஷயமாய் ஒருயோசனை சொன்னார். மடங்கள், தேவஸ்தானங்களில் வரும் வரும்படிகளில் அவ்வவைகளுக்குள்ள ந்யாயமான கார்யங்களுக்குச் செலவழிந்தது போக பாக்கிப் பணத்தை கீழ்தரக்கல்வியை வ்ருத்திசெய்ய செலவழிக்கலாம் என்றார். இதைத் தஞ்சாவூர் ஜில்லா ஜனங்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டும் என்று சொன்னார்.

ஸ்தல சுய ஆட்சி.

முனிஸிபல் ஸ்தாபனங்கள் லார்ட் மேயோ, லார்ட் ரிப்பன் இவர்களால் ஏற்படுத்தப்பட்டன. 1882-ம் வருஷத்தில் லார்டு ரிப்பன் அவர்களுடைய ஸ்தல சுய ஆட்சி தீர்மானத்தால்தான் ஸ்தல சுய ஆட்சி ஆரம்பமாயிற்று. சென்ற முப்பது வருஷங்களாக இந்த ராஜதானியில் முனிஸிபல் ஸ்தாபனங்கள் ரொம்பவும் அபிவ்ருத்தி யடைந்திருக்கின்றன. ஆனால் சிலர் நாம் முனிஸிபல் சுய ஆட்சிக்குத் தகுதியானவர்களென்று நாம் காட்டவில்லை என்று சொல்லுகிறார்கள். டிஸெண்ட்ரலைஸேஷன் கமிஷன் மெம்பர்கள் இது விஷயமாய்ச் சொல்லுவது:—முனிஸிபாலிடிகளும், டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் கார்யங்கள் செய்ய அதிக ஸ்வதந்திரம் பெறவேண்டும். வித்யாசாலைகளுடைய மானேஜ்மெண்டு அவர்கள் கையில் இருக்கவேண்டும் வித்யா சட்ட டிபார்ட்மெண்டு ரூல்களும் அவர்களை நிர்ப்பந்திக்கக்கூடாது. வரவு செலவு கணக்குகளில் அவர்களுக்கு அதிக ஸ்வதந்திரம் கொடுக்க வேண்டும்-என்று கமிஷன் மெம்பர்கள் அபிப்ராயப்பட்டிருக்கிறார்கள். முனிஸிபாலிடிகளுக்கு பணம் செலவிடுவதற்கு ஸ்வதந்த்ரம் இல்லாவிட்டால் அவைகள் வ்ருத்தியடையமாட்டா. ஸ்தல ஸ்தாபனங்கள் பிசகு செய்யுமோ என்று அவைகளைக் கங்காணிக்க ரொம்ப ஜாக்ரதை செய்தாலும் ஸ்தல சுய ஆட்சி என்பது வாஸ்தவமாய் ஏற்படாது. ஸ்தல ஸ்தாபனங்களை அதிகக் கட்டுப்பாட்டில் வைப்பதைவிட அவைகளுக்கு ஆலோசனை சொல்வது ரொம்பவும் உசிதமாகும்.

டிஸென்ட்ரலைஸேஷன்கமிஷனுடைய இந்த

ப்ரேரணைகள் அனுஷ்டானத்துக்கு வரும்படி செய்யும்போது ஸ்தல ஸ்தாபனங்களுக்கு ஒரு ஆலோசனை போர்டும் ஏற்படுத்தப் படவேண்டும். அந்த போர்டில் ஒரு தேர்ந்த ஸானிடரி இஞ்சினீயர், ஸுகாதார விஷயமாய் யோசனை சொல்ல தேர்ந்த ஒருவர், பினான்ஷியர் அதாவது வரவு செலவு விஷயங்களில் ஆலோசனை சொல்பவர் ஒருவர், ஆக மூன்று பேர்கள் இருக்கவேண்டும். இவர்கள் சேர்ந்த ஒரு போர்ட் சென்னை கவர்ன்மெண்டின் கீழ் நியமிக்கப்படவேண்டும். இவர்கள் எல்லாம் இங்கிலீஷ் முனிஸிபல் ஸ்தாபனங்களின் அனுபோகம் உள்ளவர்களாயிருக்கவேண்டும். முனிஸிபாலிடிகள் யோசனை கேட்டால் யாருடைய யோசனைவேண்டுமோ அவர் அந்தந்த முனிஸிபாலிடிகளுக்குப் போய் நன்றாய் ஸங்கதிகளை விசாரித்துத் தக்க யோசனை சொல்லவேண்டும். இவர்களுக்காக ஏற்படும் செலவை முனிஸிபாலிடிகளெல்லாம் சேர்ந்து ஏற்றுக்கொள்ளவேண்டும். முனிஸிபாலிடிகள் இவர்களுடைய யோசனைகளை இஷ்டப்பட்டால் எடுத்துக் கொள்ளலாம், இல்லாவிட்டால் தள்ளிவிடலாம்.

நாம் எல்லாரும் முனிஸிபல் விஷயங்களில் தேர்ந்தவர்களல்ல. மற்ற தேசங்களில் உள்ள முனிஸிபாலிடிகளுக்கு தவறுதல்கள் ஏற்படுவதுபோலவே நமக்கும் தவறுதல்கள் ஏற்படுகின்றன. தவறுதல் ஏற்பட்டால் தான் நமக்கு விஷயங்கள் நன்றாய் விளங்குகின்றன. நம்முடைய அத்ருஷ்டவசமாக நம்முடைய கவர்னர் ப்ரிட்டிஷ் தேசத்திலுள்ளபடி முனிஸிபல் விஷயங்களை நன்றாய் அறிந்தவராயிருக்கிறார். அவருடைய கருணையால், ஸ்தல சுய ஆட்சியில் வாஸ்தவமான அபிவ்ருத்தி ஏற்படுமென்று எண்ணுவதாகச் சொல்லி டாக்டர் நாயர் தமது ப்ரஸங்கத்தை முடித்தார்.

METHODS OF PUSHING TRADE.

வ்யாபாரத்தை அதிகப்படுத்தும் வழிகள்.

கடைகள் ஏற்படுத்தும் இடங்களை புத்திசூர்மையாய்த் தெரிந்தெடுக்கவேண்டும். நல்ல காப்பி ஹோடலுக்குப் பக்கத்தில் கடையை ஏற்படுத்தலாம். சிலர் கடையின் பக்கத்து இடத்தை வாடகைக்கு வாங்கி அதில் காப்பி ஹோடலை தாங்களே வைப்பார்கள். அல்லது காப்பி ஹோடல் வைப்பவனுக்கு வாடகைக்கு விடுவார்கள். ட்ராம்வண்டி போகிற பாதையாகவும் நிற்கிற இடமாகவும் பார்த்து கடையை ஏற்படுத்தலாம். இப்படிச் செய்வதில் முக்யமான லாபம் என்னவெனில், பஹிரங்கப்படுத்துவதற்கு துட்டு செலவில்லை. ட்ராம் வண்டியில் போகிறவர்கள் போகும்போதும் வரும்போதும் போர்டை வாசித்து அவர்களுக்கு பாடம் ஆகிவிடும்.

சில வ்யாபாரிகள் ஒரு யுக்தி செய்வார்கள். சீமையிலிருந்து சரக்கு வரப்போகிற தென்றும், வந்தவுடன் அந்தப்பெட்டிகள் இன்ன தினத்தில் இத்தனை மணிக்கு எல்லாருக்கும் முன்பாக உடைக்கப்படுமென்றும் விளம்பரம் செய்வார்கள்.

சரக்குகளை பண்டக சாலைகளில் செய்வது போல் படங்களை அச்சடித்து ப்ரசுரித்தல் பஹிரங்கம் செய்யும் முறைகளில் ச்லாகிக்கத்தக்க ஒரு முறை.

துட்டு இல்லாமல் பத்ரிகைகளில் ப்ரசுரம் செய்யும்படி செய்யலாம். அதற்கு மிகவும் யுக்தி வேண்டும். தன்னுடைய சரக்குகளைக் குறித்து யெழுதியனுப்பினால் பத்ரிகைக்காரர் பணமில்லாமல் ப்ரசுரம் செய்ய மாட்டார்கள். பொதுஜனத்திற்கு நன்மையான விஷயமாக யிருந்தால் ப்ரசுரம் செய்வார்கள். ஆகையால் அப்பேர்ப்பட்ட விஷயங்கள் வாஸ்தவத்தில் ஏற்படாவிடினும் தன்னுடைய யுக்தியினால்

செய்துகொள்ளவேண்டும். பெரியமனிதன் ஒருவன் வ்யாபாரத் தலைவனிடத்தில் வ்யாபார விஷயமாக ஸம்பாஷணை செய்தமாதிரி அந்த ஸம்பாஷணையை ப்ரசுரிக்கலாம்.

கடன்கொடுத்து வ்யாபாரம் செய்யும்முறை ஒன்று, கடன் கொடாமல் வ்யாபாரம் செய்யும்முறை வேறொன்று. இரண்டும் நேர் விரோதமானவைகள். கடன் கொடுத்து வ்யாபாரம் செய்தும் நல்ல ஸ்திதியில் வந்திருக்கிறார்கள். ரொக்க வ்யாபாரத்தில் பணம் ஸம்பாதித்தவர்களு மிருக்கிறார்கள். மிகுந்த விலையுள்ள சரக்குகளை மாதாந்தரத் தவணைக்கு விற்றால் வ்யாபாரம் ஜாஸ்தியாகும்.

RAISING JACK TREES.

BY

T. P. SUBBARAYAR.

பலாமரங்களைப் பயிர் செய்தல்.

கீழே காணும் மாதிரியாகப் பலாமரம் பயிர் செய்யப்படுவதை நாம் கண்டிருக்கும் அனுபவப்படி எழுதுவதை நம்மிலும் தெரிந்தவர்கள் ஹேளனம் செய்யார்களென்னும் தைர்யத்தோடு பலரும் தெரிந்துகொள்ள எழுதுகிறோம்.

முதிர்ந்த மரத்தின் முற்றிய பழத்துக்குள்ளிருக்கும் சுளைகளை யெடுத்து அதற்குள் இரண்டு பைமாதிரியான கவசத்தினுள்ளிருக்கிற கொட்டைகளை மேற்படி கவசத்தை யெடுக்காமலே முன்பே நல்ல எருவுடன் கலந்து கூடைகளில் நிரம்பியிருக்கும் மண்ணினுள் 3 அங்குல ஆழத்தில் சுளையிலிருந்து எடுத்த ஈரம் காய்வதற்குள் கொட்டைகளின் முளை வெளியே வருவது போன்றதை மேலே வைத்துத் தண்ணீர்விட்டுவரவேண்டும். இப்படி நாள்தோறும் ஈரம் காயாமல் ஸ்வல்பம் ஸூர்ய கிரணம் படக்கூடியவிடத்தில் வைத்திருக்கவேண்டும். ஒரு மாஸத்திற்குப் பிறகே முளை வெளியே தெரியவரும். அரை கஜம் உயரும்வரை கூடைகளிலேயே இருக்கவேண்டும். ஒரு கஜம் சுற்றளவுள்ள கூடையொன்றுக்கு 8, 10 விதைகளை நாற்றுகப் பரவலாம். அல்லது மூங்கில் பெட்டிகளில் இரண்டு விதைகள் வீதம் விதைகளை நட்டு வளர்க்கலாம். மூங்கில் பெட்டிகளின் சுற்றளவு 1 அடியும், உயரம் $1\frac{1}{2}$ அடியுமிருக்கலாம்.

நல்ல செவ்வல் கலந்த சரளை கலந்த பூமியான தோப்புசெய்ய உத்தேசித்திருக்கும் புன்செயில் 8 கஜங்களுக்கு ஒவ்வொரு குழி வீதம், கைகொள்ளும் அகலத்தில் கட்டப்பாரைபால் ஒரு கஜம் ஆழத்தில் தோண்டப்பட்டிருக்கும் குழிகளில்மடிந்த சருகுகளைக்கொஞ்சம் போட்டு அவைகளில் செடிகளை மேற்படி பெட்டிகளை விட்டெடுக்காமலே வைத்துச் சந்துகளுக்கு மண் போட்டுத் தண்ணீர்விட்டு வரவேண்டும். அதிகம் வெயில் படாமலிருக்க, செடிகளின்மேல் தென்னோலைக்கீற்றுக்குடலைகளைக் கொண்டு மூடி வைப்பது அவச்யம். 5, 6, அடி உயரும்வரை பலாச்செடிக்குச் சுற்றிலும் அரையடிப் புழக்கம் விட்டு, முட்களால் வளையமான வேலியிருக்க வேண்டியது மெத்த அவச்யமே. இல்லையேல் செடிகள் காற்றலைசைக்கப்பட்டு வேர் பூமிக்குள் பிடிப்புக் கொள்ளாமல் செடிகள் வாடிவிடும். கைநுழையும் குழியைவிடப் பெரிதான குழிகளைக் கெல்லி செடிகளை வைத்தால் அக்குழியின் சுற்றளவு பருமன் மரம் பருத்தமேலே காய்க்கு மென்பதற்காகத்தான் குழிகளின் சுற்றளவு சிறியதாக இருக்கவேண்டும். எப்படியானாலும் கன்றுகள் வைத்த 5, அல்லது 6 வருஷங்களுக்குள் மரங்கள் காய்க்காது. பூஸாரத்தால் செழித்து வளர்ந்திருக்கும் பலாமரங்கள் நாலாவது வருஷத்தில் காய்ப்பதுமுண்டு. 4, 5, அடி ஆழத்திற்குக் கீழ் நீரூற்றிருக்கும் சரள் கலந்த செம்மண்ணில் பலாமரங்கள் நன்றாய்க் காய்த்து விசேஷ ஆதா

யம் தரும். ஸ்வல்பக் காய்கள் காய்க்கும் மரங்களும் ரூபாய் 4, 5 தரும். நல்ல ஜாதிப் பழமுள்ளதான மரங்களுக்கு வருஷம் 1-க்கு 30 ரூபாய் வருகிறது.

இவ்விதம் காபந்தாக வைக்கப்பட்டிருக்கும் பலாத் தோப்புகள் 25 முதல் 30 வருஷங்கள் பலனைத் தந்துகொண்டிருக்கும். இனி பலனை யளியாதென்று நிச்சயமாகத் தெரிந்தபிறகு மரம் படா முன்பே மரத்தின் அடிவேரை மண் வெட்டியால் மரம் சேதமடையாதபடி வெட்டி வேலைக்கு உபயோகிக்கிறார்கள். மரப் பஞ்ச மில்லாத மலையாளத்தார் இவ்வளவு கவனமாய் மரங்களை சேதமின்றி வெட்டி யெடுக்கிற தில்லை. பலாமரங்கள் குடியானவர்களுக்கு பெரிய ஆஸ்தியே யாகும். பாடுபட்டால் வீணாகாது.

த. ப. ஸுப்பராயர்.



THE HON. RAO BAHADUR R. N. MUDHOLKAR, B.A., LL.B.

ஆனரபில் ராவ்பகதூர் ரங்கநாத நரஸிங்க மதோல்கார் பி.எ., எல். எல். பி.

ஆனரபில் மிஸ்டர் ஆர். என். மதோல்கார் இந்த வருஷத்துக் காங்க்ரெஸுக்கு ப்ரெஸி டெண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவர் மகாராஷ்ட்ர ஜாதியில் பிறந்தவர். அந்த ஜாதியில் பிறந்த மேன்மைபெற்ற ப்ரமுகர் களில் முதன்மையானவர்களுள் இவரும் ஒருவராவார். இவர் சென்ற 25 வருஷங்க ளாக ஜனஸமூக விஷயங்களில் ரொம்பவும் உழைத்துவருகிறார். ராஜரீக விஷயங்களிலா கட்டும், ஆசார சீர்திருத்த விஷயங்களி லாக ட்டும், இவர் ஊக்கம் குறையாமல் பாடுபட்டு வருகிறார். கைத்தொழில் அபிவ்ருத்தியில் இவ ருக்கு ரொம்ப அபிமானம் உண்டு. ஸ்வதேசி என்ற பேச்சு உண்டாவதற்கு முன்பே, ஸ்வ

தேச கைத்தொழில்களை ஆதரித்து வந்திருக்கிருர். தொழில் படிப்பு ஏற்படுவதற்காக பாடு பட்டு வந்திருக்கிருர். இவர் மத்ய மாகாணங்களில் இருந்தாலும், இவருடைய முயற்சிகள் அந்த ப்ரதேசத்தை மாத்திரம் சார்ந்தனவாக இல்லாமல் இந்திய ஜனஸமூக முயற்சிகளெல்லாவற்றிலும் முன்னின்று வருகிருர். நாஷனல் காங்க்ரெஸ், ஆசார சீர்திருத்த கான்பரென்ஸ், மதுவிலக்கு கான்பரென்ஸ், வித்யா கான்பரென்ஸ், கைத்தொழில் கான்பரென்ஸ், ஆகிய இவைகளில் இவர் உழைத்துவருகிருர். மேலும், கடைசியில் சொன்ன கைத்தொழில் கான்பரென்ஸுக்கு நாளது வரையில் ஸெக்ரெடரியாக இருந்து வருகிருர். இவர் இப்படி எல்லா விஷயங்களிலும் தேசத்தை முன்னுக்குக் கொண்டுவர மிகவும் பாடுபடுகிருர்.

மிஸ்டர் மதோல்கார் ப்ரபலமான மகாராஷ்ட்ர ப்ராம்மண வம்சத்தி லுதித்தவர். இவருடைய முன்னோர்கள் முதோல் ஸமஸ்தானத்துக்கு வக்கீல்களாயிருந்தவர்கள். இவருடைய தகப்பனர் காண்டீஷ் ஜில்லா கோர்ட்டில் ரிகார்டு கீபராயிருந்தார். மிஸ்டர் மதோல்கார் 1857-ம்௵ மேமீ 16௳ டேலியா என்னும் ஊரில் பிறந்தார். 1873-ம் வருஷத்தில் மெட்ரிகுலேஷன் பரீக்ஷையில் தேறி, பிறகு பம்மாய் எல்பின்ஸ்டன் காலேஜில் சேர்ந்து வாசித்து, 1877-ம் வருஷத்தில் பி. எ., பட்டம் பெற்ருர். அக்காலத்திலிருந்த காலேஜ் ப்ரின்ஸிபலாகிய மிஸ்டர் வோர்ட்ஸ் வொர்த் என்பர் இவரைப்பற்றி ரொம்பவும் ச்லாகித்துப் பேசியிருக்கிருர். "ஆரம்பத்திலேயே அவர் என் கவனத்தைக் கவர்ந்துவிட்டார். அவரைப்பற்றி அப்பொழுது நான் எதிர்பார்த்தவையெல்லாம்முழுவதும்நிறைவேறிவிட்டன. அவர் படிப்பில் ரொம்ப தேர்ச்சியுள்ளவரென்பதும், மிகுந்த நல்லொழுக்கமுள்ளவரென்பதும் என்னுடைய அபிப்ராயம். அவரிடத்தில் எனக்கு ரொம்ப அபிமானம் உண்டு". இப்படி மிஸ்டர் வோர்டஸ் வொர்த் சொல்லியது ஸாமான்யமான புகழ்ச்சியல்ல. பி. எ. பட்டம் பெற்ற சில காலத்துக்கெல்லாம் எல்பின்ஸ்டன் காலேஜில் ஒரு போதகராக அமர்ந்து தேசசரித்திரம், தர்க்கம், அர்த்த சாஸ்த்ரம், ஆகிய இவைகள் கற்பித்துவந்தார். 1880-ம் வருஷத்தில் எல். எல். பி. என்னும் சட்டப் பரீக்ஷையில் தேறினர். அந்தக்காலத்திலேயும் பம்பாயில் வக்கீல்கள் ரொம்ப அதிகமாயிருந்தார்கள். அங்கேயிருந்து ச்ரமப்பட்டு உழைத்து மேன்மையடைவதைவிட வெளியில் வக்கீல்கள் அதிகமில்லாத நகரங்களுக்குப் போய் சீக்ரம் க்யாதிபெறலாமென்று எண்ணி பேரார் நாட்டில் அகோலா என்னும் பட்டணத்துக்குப் போய் அங்கு வக்கீல் உத்யோகம் செய்யத் தொடங்கினர். அக்காலத்தில் அந்த ஊரில் அவரும் அவர் மைத்துனரும் தான் எல். எல். பி. பட்டம் பெற்ற வக்கீல்கள். 1882-ம்௵ பேராரில் முக்ய பட்டணமாகிய அம்ரோட்டி பட்டணத்துக்கு ஜுடிஷ்யல் கமிஷனருடைய கோர்ட்டு மாற்றப்படவே இவரும் அவ்விடத்துக்கு மாறினர். ஆரம்பம் முதல் கொண்டே அவருக்கு நல்ல வரும்படி வரலாயிற்று.

இவர் பேராரில் தங்கியது முதல்கொண்டே அந்த மாகாண ஜனஸமூக விஷயங்களில் பாடுபட ஆரம்பித்தார். இந்தியாவிலேயே பொதுக்கார்யங்கள் நடந்தேறுவது மிகவும் ச்ரமமானது. பொதுக் கார்யங்களில் உழைப்பவருக்கு ஒருவித வெகுமதியும் கிடையாது. சில வருஷங்களுக்கு பொதுஜன விஷயங்களில் உழைத்துவிட்டுப் பின்பு உயர்ந்த பதவி யடைதென்பதும் முடியாத கார்யம். ஸர்க்கார் உத்யோகம் என்பது இவர் பெறமுடியாது. சிலர் ஜனஸமூக விஷயங்களில் உழைத்தும் மேலான கவர்ன்மெண்டு உத்யோகங்களிலிருக்கி

ருர்களே என்ருல், அவர்கள் தேசத்துக்குப் பாடுபட்டதற்காக அந்த உத்யோகங்களையடையவில்லை. அவர்கள் ஸ்வதாவாகவே மகா புத்திசாலிகளும் ரொம்பத் திறமையுள்ளவர்களுமாதலால் அந்தப் பதவிகளை அடைந்தார்கள் என்று சொல்லவேண்டும். எந்த தேசத்திலும், தேசநன்மைக்காக உழைப்பவர்களுக்கு யாவரும் விரும்பத்தக்க மேலான பதவிகளுண்டு. இந்தியாவில் மட்டும் அப்படிப்பட்ட உன்னத பதவிகள் ஒன்றுமில்லாமல் தேசாபிமானிகளுக்கு வரும் ஆபத்துக்கள் அதிகமாயிருக்கின்றன ஸ்நேகிதர்கள் "ப்ரயோஜனமில்லாத" வேலையில் ஏன் காலத்தையும் ச்ரமத்தையும் வீணுக்கவேண்டுமென்று அதைர்யப்படுத்துவார்கள். விரோதிகள் எப்பொழுது அவரை மடக்கலாமென்று காத்துக்கொண்டிருப்பார்கள். சில ஸமயங்களில் அவருடைய கௌரவத்துக்கும் கீர்த்திக்கும் ஹானி வரும்படியான அபாயமான நிலைமையும் ஏற்படலாம். ரொம்ப நாகரிகம் அடைந்திருக்கும் மாகாணங்களிலேயே இப்படியிருக்கிறதென்ருல், முப்பது வருஷத்துக்கு முன்னுல் ரொம்ப முன்னுக்குவராத பேரார் போன்ற மாகாணத்தில் எப்படி யிருந்திருக்கவேண்டுமென்பது சொல்லாமலே விளங்கும். அங்கே மிஸ்டர் மதோல்கார் பொதுஜன விஷயங்களில் சேர்ந்து உழைப்பது என்பது இவருடைய கார்யமாயில்லை. பொதுஜன வாழ்க்கை, பொதுஜன கார்யம், என்பவைகளையே உண்டாக்கி அவைகளை ஸரியான ஒழுங்கில் வைப்பதே இவருக்குப் பெரியவேலையாயிற்று.

இப்படி இவர் வேலை செய்வதில் மிஸ்டர் எம். வி. ஜோஷி என்பவர் அவருக்கு ரொம்பவும் உதவியாயிருந்தார். இவர்கள் 1886-ம் வருஷத்தில் பேரார் ஸர்வஜன ஸபை என்று ஒரு ஸபையை ஸ்தாபித்தார்கள். அந்த ஸபை பூனு ஸர்வஜன ஸபையைப்போலாவாது, பும்பாய்ப்ரெஸிடென்ஸி அஸோஸியேஷனைப்போலவாவது பேர் வாங்காவிட்டாலும், நன்மட்டில் நல்லவேலையே செய்துவந்தது. ராஜாங்க விஷயங்களைப்பற்றி ஜனங்கள் கொண்டிருக்கும் அபிப்ராயங்களை அந்த ஸபை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்டிருந்தது. இந்த ஸபை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்துக்கொண்ட விண்ணப்பங்களில் அனேகம் அப்பொழுது அந்த ஸபைக்கு ஸெக்ரெடரியாயிருந்த மிஸ்டர் மதோல்காராலேயே எழுதிக் கொடுக்கப்பட்டன. கவர்ன்மெண்டாருக்கு ஜனங்களுடைய அபிப்ராயத்தைத் தெரிவிக்க இந்த ஸபையையன்றி "வைதர்பா" என்றெரு பத்ரிகையும் ஏற்படுவதற்கு மிஸ்டர் மதோல்கார் உதவியாயிருந்தார்.

மிஸ்டர் மதோல்கார் ராஜாங்க விஷயங்களில் ரொம்பவும் கவனம் செலுத்தி வருகிறவர். இவர் அதை பொழுதுப்போக்குக்காக கவனித்துவருவதில்லை. ராஜாங்க முறைக்கும் பொருளாதார நிலைமைக்கும் ரொம்ப நெருங்கின ஸம்பந்தமுண்டு. இரண்டையும் பிரித்து எண்ணுவது முடியாதகார்யம். தேசத்தில் செல்வ அபிவ்ருத்தியில்லாமல் ராஜரீக விஷயங்களில் மாத்திரம் முன்னேற்றம் இருந்தால் ப்ரயோஜனமில்லை. ஆகவே இவர் கைத்தொழில் ஸம்பந்தமான பொருளாதார விஷயங்களை நன்கு கற்றிருந்ததால் ராஜரீக முறை, பொருளாதாரம், ஆகிய இவைகளில் ஒன்றில் மாத்திரம் தேசம் முன்னுக்குவந்தால் போதாது என்று நன்ருயறிந்தார். இவர் தாமே பெரிய கைத்தொழில் ஒன்றும் ஏற்படுத்தி நடத்தாவிட்டாலும், கைத்தொழில் ஸம்பந்தமான விஷயங்களில் ரொம்பவும் அக்கறைகாட்டி வந்திருக்கிருர். இது விஷயமாய் இவர் எழுதியிருப்பவைகள் ரொம்பவும் உபயோகமானவை. தேசத்தின் செல்வ அபிவ்ருத்தியின் பொருட்டு தாம் என்ன செய்யலாமென்று

இவருக்குக் தோன்றிற்ரே அவ்வித மெல்லாம் செய்ய ஆரம்பித்தார். இவர் சில ஸ்நேகிதர்களைச் சேர்த்துக்கொண்டு முதல் முதலில் பேராரில் பேரார் ட்ரேடிங் கம்பெனி என்று ஒரு வர்த்தக ஸங்கம் ஏற்படுத்தி முதலில் தாமே அதற்கு ஸெக்ரெடரியாக இருந்துவந்தார். நாலுவருஷம் கழிந்தபிறகு, இரண்டு பேரைக் கூட்டாகச் சேர்த்துக்கொண்டு தொழிற்சாலை (பாக்டரி) ஒன்று ஏற்படுத்தினர். அதுதான் பேராரில் முதல் பாக்டரி. முதலில் அதற்கு நஷ்டமேற்பட்டு மூலதனத்துப் பங்கின் விலையும் பாதிக்குக் குறைந்தது. அதனால் எல்லாரும் நகைத்து நிந்தித்தார்கள். ஆனால் பின்பு நஷ்டத்தை ஸரிப்படுத்திவிடவே பாதி விலைக்கு வந்த பங்கின்விலை நாலுமடங்காகி விட்டது. சில வருஷங்களுக்குப் பிறகு எண்ணெயாடும் பாக்டரியும், பருத்திக்கொட்டையெடுக்கும் பாக்டரியும், ஏற்படுத்தினர். 1901-ம் வருஷத்தில் அம்ரோட்டியில் பருத்திக்கொட்டை எடுப்பதற்கும், பருத்தி மூட்டை கட்டுவதற்கும் இரண்டு கம்பெனிகள் ஏற்பட்டன. அவைகளில் மதோல்கார் ஏராளமான பங்குகள் எடுத்துக்கொண்டிருக்கிறர். அகோலாவிலும் இந்த மாதிரியான கம்பெனி ஒன்று ஏற்பட்டது. அதிலும் இவருக்கு ரொம்ப ஸம்பந்தமுண்டு. இவ்விதமாக மிஸ்டர் மதோல்கார் வெறும்பேச்சுக்காரராய் மாத்திரம் இராமல், தேசத்து கைத்தொழில் அபிவ்ருத்திக்கு ரொம்பவும் உதவிசெய்து வந்திருக்கிறர்.

இந்த நாட்டின் கல்வியை சாஸ்த்ர ஸம்பந்தமுள்ளதாகவும் கைத்தொழில் ஸம்பந்தமுள்ளதாகவும் மாற்றவேண்டுமென்றும், இல்லாவிட்டால் கைத்தொழில் கல்விச்சாலை ஸ்தாபிக்க வேண்டுமென்றும் வெகு காலமாக இவர் விரும்பியிருந்தார். காலஞ்சென்ற விக்டோரியா மகாராணியாருக்கு ஒரு ஞாபக சின்னம் வைக்க வேண்டுமென்று ப்ரேரணை ஏற்பட்டபோது அது தான் ஸமயம் என்று விக்டோரியா மகாராணியின் ஞாபகார்த்தமாக கைத்தொழில் பள்ளிக்கூடம் ஒன்று ஸ்தாபிக்க முயன்று ரொம்ப ச்ரமப்பட்டதன் பேரில் கடைசியில் பேராரில் ஒரு நல்ல கைத்தொழில் சாலை ஏற்படுத்தப்பட்டது.

அன்றியும், இந்தியா முழுவதற்கும் ஒரு கைத்தொழில் சாஸ்த்ர கலாசாலை ஸ்தாபிக்க வேண்டுமென்று இம்பீரியல் லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் ஒரு ப்ரேரணை கொண்டுவந்தார். ஆனாலும் அது அங்கீகரிக்கப்படாமல் போயிற்று.

இவர் இவ்விதம் கைத்தொழில் விஷயமாய்ப் பாடுபட்டதன் பலனாக, கைத்தொழில் கான்பரென்ஸ் 1906-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டபோது அவரையே ஸெக்ரெடரியாக தெரிந்தெடுத்தார்கள். பெரிய கைத்தொழில்கள் வைத்து நடத்தும் அநேக கனவான்கள் இருந்தும் அவர்கள் தெரிந்தெடுக்கப்படாமல் இவரே ஸெக்ரெடரியாக தெரிந்தெடுக்கப்பட்டது இவருக்கு ஜனங்களிடத்தில் எவ்வளவு செல்வாக்கு உண்டு என்பதைத் தெரிவிக்கிறது. இவரது முயற்சியால் இந்தக் கைத்தொழில் கான்பரென்ஸ் ரொம்ப உபயோகமான வேலை செய்துகொண்டு வருகிறது.

இவர் இரண்டாவது மத்ய மாகாண பேரார் ப்ரொவின்ஷ்யல் கைத்தொழில் கான்பரென்ஸுக்கும், 4-வது இந்தியா கைத்தொழில் கான்பரென்ஸுக்கும் ப்ரெஸிடெண்டாக இருந்தார். அப்படி ப்ரெஸிடெண்டாக இருந்த இரண்டு ஸமயங்களிலும் பின்வருமாறு சொன்னர்:—ஸர்க்கார், ஜனங்களுடைய கைத்தொழில் அபிவ்ருத்தியை உத்தேசித்து இப்பொழுதுள்ளதை விட அதிக ச்ரத்தை பாராட்ட வேண்டும். நாம் இப்பொழுது க்ஷேம

மாயிருப்பதற்கும் இனி இன்னம் முன்னுக்கு வருவதற்கும், ராஜரீக முன்னேற்றமும் ஆசார சீர்திருத்தமும் எவ்வளவு அவசியமோ அவ்வளவு கைத்தொழில் நல்ல ஸ்திதியிலிருப்பதும் ரொம்ப அவசியமாகும். ஜனஸமூக ப்ரமுகர்கள் கைத்தொழில் விஷயத்தில் இன்னம் அதிக ச்ரத்தையும் அபிமானமும் காட்டவேண்டும். உண்மையில், நமக்கு ராஜரீகமுறையிலாவது ஜனஸமூக விஷயங்களிலாவது அபிவ்ருத்தியேற்படாததற்குக் காரணம், நமக்கு பொருளாதார ஸம்பந்தமான கஷ்டங்கள் இருப்பது தான். பொருளாதாரம் (செல்வ அபிவ்ருத்தி). ராஜரீகமுறை, ஜனஸமூக விஷயங்கள், இவைகள் ஒன்றுக் கொன்று ஸம்பந்தம் ஏற்படும்படி உழைத்தால்தான் தேசம் நல்ல ஸ்திதிக்கு வர முடியும் - என்று வற்புறுத்திக் கூறினர். மிஸ்டர் மதோல்கார் 1888-ம் வருஷத்தில் இந்தியன் நாஷனல் காங்க்ரெஸ் ஸபையில் சேர்ந்தார். இவர் சேர்ந்த வருஷத்திலேயே, தமக்கு ராஜரீக பொருளாதார விஷயங்களில் உள்ள தேர்ச்சியைக் காட்டிவிட்டார். அதனல், அடுத்த வருஷம், லெஜிஸ்லெடிவ் கௌன்ஸிலில் சீர்திருத்தம் செய்யவேண்டும் என்று இங்கிலாந்தில் போய் மன்றுடுவதற்கு மிஸ்டர் ஸுரேந்த்ரநாத்பானர்ஜி, மிஸ்டர் நார்ட்டன், மிஸ்டர் எம். வி. ஜோஷி, ஆகிய இவர்களோடு மிஸ்டர் மதோல்காரும் டெலிகேட்டாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

மிஸ்டர் மதோல்கார் 1897-ம் வருஷத்தில் காங்க்ரெஸை அம்ரோட்டிக்கு அழைத்தார். அந்த வருஷம் மகாராஷ்ட்ரத்தில் அநேக ஸங்கடங்கள் நேர்ந்திருந்தன. பூனு கொலைகளும், மிஸ்டர் பாலகங்காதர திலகரின் ப்ராஸிக்யூஷனும் ஜனங்களுக்குக் கலவரத்தையுண்டாக்கிவிட்டன. கவர்ன்மெண்டாருக்கு படித்த வகுப்பாருடைய ராஜபக்தியில் நம்பிக்கையில்லாமல் இருந்தது. காங்க்ரெஸும் ராஜத்ரோகம் உள்ளது என்று ஸந்தேகபட்டதெல்லாம் போய்விட்டது என்று எண்ணியிருந்தார்கள். ஆனல் சில தேசவிரோதிகள் மிஸ்டர் திலகரின் ப்ராஸிக்யூஷனை ஆதாரமாகக்கொண்டு ராஜத்ரோகக்குற்றம் சாட்ட ஆரம்பித்தார்கள். காங்க்ரெஸையே நடத்துவதா நிறுத்திவிடுவதா என்று தேசாபிமானிகள் பயந்தார்கள். அந்த வருஷம் தேசாபிமானிகள் ரொம்பவும் ச்ரமப்பட்டு விட்டார்கள். மிஸ்டர் மதோல்கார் காங்க்ரெஸை அம்ரோட்டிக்கு அழைத்தது ஸௌகர்யமாயிற்று. காங்க்ரெஸ் ப்ரமுகர்களுடையவும், ஸாதாரண அபிமானிகளுடையவும் நல்லெண்ணத்தாலும், தேசாபிமானத்தாலும், அந்த வருஷம் யாதொரு விக்னமின்றி காங்க்ரெஸ் நடைப்பெற்றது. பத்துவருஷம் கழித்து 1907-ம் வருஷத்தில் காங்க்ரெஸை நாகப்பூருக்கு அழைத்தபோது காங்க்ரெஸ் விரோதிகள் காங்க்ரெஸ் அபிமானிகளுக்கு ரொம்பவும் ச்ரமம் கொடுத்துவிட்டார்கள். அவர்கள் நாகப்பூரில் காங்க்ரஸ் நடக்கக்கூடாதென்று பிடிவாதமாயிருந்தார்கள். கடைசியில் மிஸ்டர் மதோல்கார் எவ்விதமாய் ஸமாதானம் செய்தும் பயன்படாமல் கடைசியில் காங்க்ரெஸ் ஸூரத்தில் நடக்க வேண்டியதாயிற்று. அவ்விடத்திலேயும் இவர் எல்லாக் கட்சிகளின் தலைவர்களையும் கண்டு ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும் என்றும், பழையபடியே காங்க்ரெஸ் உழைக்கவேண்டும் என்றும் சொல்லிவந்தார். எவ்வளவு பாடுபட்டும் கடைசியில் அந்த வருஷத்திய கூட்டம் ஸரிவர நடைபெருமல் போயிற்று.

அதே வருஷம் ஆரம்பத்தில் ராஜ்பூரில் நடந்த மத்யமாகாணபேரார் கான்பரென்ஸுக்கு ப்ரெஸிடெண்டாக இருந்தார். மிஸ்டர் மதோல்கார் ஜனங்களால் ரொம்பவும் நன்கு மதிக்கப்படுவது போலவே கவர்ன்மெண்டாலும் நன்கு மதிக்கப்பட்டு வருகிருர். மத்ய

மகாண ஜனங்களின் க்ஷேமத்தையுத்தேசித்துச் செய்யப்படும் அநேகமாய் ஒவ்வொருகார்யத்திலும் அம்மாகாண கவர்ன்மெண்டார் இவருடைய யோசனையை கேட்டு வருகிறார்கள். ஸமீபத்தில் டீஸென்ட்ரலைஸேஷன் கமிஷனிலும் இவர் தக்க ஸாக்ஷயம் கொடுத்திருக்கிறார்.

மிஸ்டர் மதோல்கர், 1909-ம் வருஷத்து பார்லிமெண்ட் சட்டப்படி நமது சட்ட ஸபைகள் திருத்தம் பெற்றபோது ராஜப்ரதிநிதி சட்டஸபையில் ஒரு மெம்பராக நியமிக்கப்பட்டார். இந்த ஸபைக்கு அவர் நியமிக்கப்பட்டது காங்க்ரெஸ் அபிமானிகள் பலருக்கும், பொதுவாய் ஜனங்களுக்கும், த்ருப்தி கொடுத்ததென்று நாம் சொல்லவேண்டியதில்லை. ராஜப்ரதிநிதி சட்ட ஸபையில் இவருடைய முயற்சிகள் முக்யமாய் தொழில் கல்வி அபிவ்ருத்தியை கவர்ன்மெண்ட் எப்படிச் செய்யக்கூடுமென்ற நோக்கங்கொண்டன. இங்கிலாந்து ஜர்மெனி முதலிய மேல் நாடுகளில் உள்ளதுபோல இந்தியாவிலும் ஒரு பெரிய தொழில் சாஸ்த்ரக் கல்விச் சாலை அவசயமென்பதும், மாகாணங்களிலும் இம்மாதிரி சாலைகள் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்பதும், புதுத்தொழில்களை ஆரம்பித்து நடத்துவதில் கவர்ன்மெண்ட் நேராக முயற்சிசெய்து நடத்திக்காட்டவேண்டுமென்பதும், ஆனரபில் மிஸ்டர் மதோல்காரின் அபிப்ராயம். காங்க்ரெஸ் மகாஸபையின் அபிப்ராயமும் இதுவேயாயினும், இந்தியா கவர்ன்மெண்ட் மற்ற தேசங்களைப்போல ஸ்வதந்த்ரத்துடன் முன் செல்லும் சக்தி பெற்றதல்ல. ஆகையால் நம் தேசத்துத் தொழிலபிவ்ருத்தி முயற்சிகள் வெகு மெதுவாகவே செய்யப்பட்டு வருகின்றன.

மிஸ்டர் மதோல்காருக்கு ஆசார சீர்த்திருத்தத்தில் ரொம்பவும் ஊக்கம் உண்டு. கல்யாணமாகும் பெண்ணுக்கும், பிள்ளைக்கும் வயது அதிகமாக்கப் படவேண்டுமென்றும், ஜாதியின் உள்பிரிவுகள் ஒன்று சேரவேண்டுமென்றும், இவருடைய அபிப்ராயம். இவர் சிலரைப் போல் ஜாதி வேண்டாமென்று சொல்லவில்லை. பராசர ஸ்ம்ருதியை ஆதாரமாகக் கொண்டு ருது சாந்தியாகாத பால்ய விதவைகளுக்கு புனர் விவாகம் செய்யலாமென்பது இவர் கொள்கை.

மிஸ்டர் மதோல்கார் காங்க்ரெஸ் மகா ஸபையிலாவது சட்டஸபையிலாவது சாலகமாய்ப் பேசும் சக்தியுள்ளவரல்ல. பாபு ஸுரேந்திரநாத் பானர்ஜி, ஸர். பி. எம். மேட்டா, ஆனரபில் மிஸ்டர் கோகலே, இவர்களைப்போல் தம் பேசும் ஸாமர்த்யத்தால் கேட்போர் மனதைத் திருப்பக் கூடியவரல்ல. ஆயினும் அவர் பேசும்போதெல்லாம் விஷயத்தையறிந்து பேசுகிறாரென்றும், அவஸரப்பட்டுப் பேசுகிறவரல்ல வென்றும், தர்க்கம், யுக்தி, புத்தி, இவைகள் புலப்படும்படி பேசுகிறவரென்றும், கேட்பவர் மனதில் அழுந்தும்படி பேசுகிறவரென்றும், சொல்லவேண்டும். இந்த வாக்குச்சாலகம் இல்லாமையினாலேயே இவருடைய மற்ற ஸாமர்த்தியம் தேசாபிமானம் முதலிய குணங்களும் சில ஸமயங்களில் ப்ரகாசிக்காமல், இந்த வருஷம் பேகார் ஜனங்கள் இவரை காங்க்ரெஸுக்கு ப்ரஸிடெண்டாய் நியமிக்கச் ஸம்மதமற்றிருந்தார்கள். ஆயினும் எல்லா இந்தியா காங்க்ரெஸ் கமிட்டி இவரைப் ப்ரஸிடெண்டாய் நியமித்தது பழைய காங்க்ரெஸ் அபிமானிகளுக்குத் த்ருப்தி கொடுத்திருக்கிறது. ஸாமான்ய ஜனங்கள் மிஸ்டர் மதோல்காரின் திறமையையும் குணத்தையும் கண்டு ப்ரமிக்கக்கூடியவர்களல்ல வாயினும் புத்திமான்கள் அவருடன் எவ்விஷயத்தைக் குறித்து ஸம்பாஷணை செய்தாலும் அவருடைய அறிவும் சுறுசுறுப்பும் ஸாமான்யமல்ல வென்று தெரிந்துக்கொள்வார்கள்.

இவர் பத்ரிகைகளுக்கு அடிக்கடி எழுதுவதில்லை. ஆனாலும் சில ஸமயங்களில் சில பத்ரிகைகளுக்கு எழுதி வந்திருக்கிறார். இவருக்கு 55 வயஸே யாகிறபடியால் இன்னம் அநேக வருஷங்கள் ஸௌக்யமாயிருந்து தேசத்துக்கு உழைக்கவேண்டுமென்று கடவுளை ப்ரார்த்திக்கிறோம்.

SELECTIONS.

விசேஷத்திரட்டு.

WHY DOES A WISE FATHER BEGET A FOOLISH SON ?

தந்தை பண்டிதனுயிருக்க மைந்தன் பாமரனுயிருப்பதேன் ?

நம்மூரிலேயுள்ள பல குடும்பங்களில் தந்தைமார் பெருங் கல்விமான்களும் பேர்ப்ரஸ்தாபமுள்ளவர்களுமாயிருந்திருக்க, அவர்களின் பிள்ளைகள் மூடருஞ் சோம்பருமாயிருக்கிறார்களே காரணமென்னவெனப் பலரும் பலமுறைகளில் வினவுவதுண்டு. இதற்குரிய விசேஷ காரணங்களிலெ ன்று பிதாமார் தாம் தம் பிள்ளைகளுக்குச் செய்யவேண்டிய கடமைகளைத் தகுந்தவாறு செய்யாமையாம். பிள்ளைகளை அறிவில் வளர்ப்பதென்றால் அது பள்ளிக்கூட உபாத்தியாயர்களின் கடமை என்பது அனேக பெற்றாரினெண்ணம். சில பெற்றார் உபாத்தியாயரிடத்திற் போய்ச் "சட்டம்பியாரே, (வாத்தியாரே,) நீர் இவனுக்கென்ன படிப்பித்தீர் ? இவன் இம்முறை சோதனையுங் கொடுக்க வில்லையாம். ஒரு புத்தகத்தைக் கொடுத்து வாசிக்கச் சொன்னால் வாசிக்கத் தெரியவில்லை. வீட்டிலே சொல்வழியுங் கேட்கிறானில்லை. இதுதானு நீர் படிப்பித்தது ?" எனக் கேட்கிறார்கள். பிள்ளைகளின் முதலாம் பாடசாலையும் விசேஷமான பாடசாலையும் அவர்களுடைய வீடேயன்றோ ? பிள்ளைகள் பூமியிலுதிக்கு முன்னரே அவர்களின் தேகநிலை, மனநிலை, ஒழுக்கநிலை, சமயநிலைக்குரிய வித்துக்கள் பெற்றாராலிடப்படுகின்றனவென்பதைப் பெற்றார் விளங்கிக்கொள்ளுகிறதில்லைப் போலும். அவர்கள் பூமியிலுதித்த பின்னரும் ஐந்தாறு வருஷங்களுக்குப் பெற்றாரே அவர்களைப் பாதுகாப்பவர்களும், கல்வி கற்பிப்பவர்களும், போதகாசிரியர்களுமாயிருக்கின்றனர். "தொட்டிலிற் பூண்ட குணம் சுடுகாடுமட்டும்" அல்லவா ?

மேலைத்தேசப்பெற்றார் தம் பிள்ளைகளைப் பயிற்றும் முறையைக் கவனித்தால் அது நம்மவர் மனதில் எரிச்சற்குணத்தைக் கிளப்பிவிடக்கூடியதாயிருக்குமென நினைக்கின்றோம். பிள்ளைகள் உலகத்திற் தோற்றும்போது ஒன்று மறியாத புது மனிதராயுதிக்கின்றனர். அவர்களில் முதன் முதல் தோற்றுங் குணம் விசாரணைக் குணமாம். கண்டதெல்லாவற்றையுமெடுத்து அதென்ன, இதென்ன என்று ஆராய்வார்கள். பெற்றாரையும் உற்றாரையும் பார்த்து அதென்ன, இதென்ன என்று கேட்டுக்கொண்டேயிருப்பார்கள். நம்மூர்ப் பெற்றார் "எடே சும்மா அலட்டாமற் கிட" என்று சொல்லிப் பிள்ளையைப் பயமுறுத்தி அவனிற் காணப்படும் விசாரணைக் குணத்தை யடக்கி விடுவார்கள். இது மிகவும் மதியீனமான காரியம். பிள்ளைகள் பிற்காலத்திற் பெரியவர்களாய் வருவதற்கு இந்த ஆராய்வுக்குணமே அஸ்திவாரமாம். ஆகையாற் பிள்ளைகளிற் காணப்படும் இவ்வதிசய விசாரணைக் குணத்தை அதட்டி யடக்கி விடுவதல்ல, அவர்களுடைய கேள்விகள் ஆராய்வுகளுக்கெல்லாம் மறுமொழி சொல்லி அக்குணத்தை அதிகப்படுத்தி விடுவதே பெற்றாரின் கடமையாம். பேர்போன சாஸ்திரிகளாகிய நியூட்டன், உவாட், பிருங்க்ளின் என்பவர்கள் முறையே ஆகர்ஷணப் பிரமாணம், நீராவி இயந்திரம், மின்சாரம் என்பவற்றை மேற்குறித்த ஆராய்வுப் போக்கினாலேயே கண்டு பிடித்தார்கள்.

ஐரோப்பிய அமரிக்கப் பெற்றார் தம் பிள்ளைகளைத் தங்களுடன் கொண்டு சென்று வானசாஸ்திரமோ, பூமிசாஸ்திரமோ, தாவரசாஸ்திரமோ படிப்பிக்கும் முறை மிக அதிசயமானது. விளையாட்டுப் பொருட்கள் மூலமாய்ப் பிள்ளைகளின் இளம் மனதில் எவ்வளவோ அறிவைப் புகுத்தி விடுகிறார்கள். சாப்பாட்டு மேசையிற் பிள்ளைகள் எவ்வளவோ ஞானத்தையடைகிறார்கள். வீரவான்கள், நல்லுபகாரிகள், சீர்திருத்தக்காரர்கள், சாஸ்திர விற்பன்னர்களாதியோரின் சரித்திரங்களைப் பிள்ளைகள் பெற்றாரிடமிருந்தே கேட்டறிந்து விசை யேற்றப்பட்டு இளம் ப்ராயத்திலேயே தம் பிற்கால சீவியப் போக்கைத் தீர்மானம் பண்ணிக் கொள்ளுகிறார்கள். ஐந்து ஆறு வயதுக்குள்ளே பெற்றாரின் சம்பாஷணைகள், போதனைகளிலிருந்து பிள்ளைகள் எவ்வளவோ அறிவை யடைந்து விடுகிறார்களே.

இனி, பிள்ளைகள் பள்ளிக்கூடத்திற் படிக்க விடப்பட்ட பின்னரும் அதிகமான காலத்தைப் பெற்றாருடனேயே செலவழிக்கிறார்களன்றோ? பாடசாலைக்

கனுப்பிய பின்னரும் பெற்றுரே பிள்ளைகளைக் கவனித்து நடத்த வேண்டியவர்களாயிருக்கின்றனர். பாடசாலையில் ஒரு உபாத்தி 30 அல்லது 40 பிள்ளைகளைக் கவனித்துப் பார்க்க வேண்டியவனுயிருக்கிருன். ஆனுற் குடும்பத்திலோ பெற்றுர் நாலு ஐந்து பிள்ளைகளை மாத்திரம் பாதுகாத்து நடத்த வேண்டியவர்களாயிருக்கின்றனர். யார் பிள்ளைகளைக் கவனமாய் மேற்பார்வை செய்து பயிற்றுதல் இலகுவாயிருக்கும்? பாடசாலை உபாத்திமாருடனும் இடைவிடாத பழக்கமுங் கொண்டாட்டமுஞ் செய்து பிள்ளைகளின் போக்கை விசாரித்து நடத்துதல் பெற்றுரின் கடமையேயாம். பிள்ளைகள் கிழமையிற் சில நாட்களில் பகலிற் சிலமணி நேரம் பாடசாலைக்குச் சென்று கல்வி கற்றுலும் மிகுதியான காலத்தைப் பெற்றுருடனே வீட்டிற் செலவழிக்கின்றமையால் அக்காலங்களில் அவர்களின் மனதை விருத்தி பண்ணுங் கடமை பெற்றுரிலே தங்கியிருக்கின்றது. ஐரோப்பிய பெற்றுர் சாப்பாட்டு மேசையிலும், கூட்ட நேரங்களிலும், உலாத்துக்குப் போகும்போதும், சம்பாஷணை நேரங்களிலும் பிள்ளைகள் தம்முடனிருக்கவைத்து அவர்களை இடைக்கிடை கேள்வி கேட்பதினுலும், பொருட்கள், இயற்கைத் தோற்றங்களைக் காட்டிக் கவனிக்கச் செய்வதினுலும் பிள்ளைகளின் மனம் விரிவடையச் செய்கிருர்கள்.

நம்மூரிலே மிகுதியான குடும்பங்களிற் பெற்றுரோடு பிள்ளைகள் ஒருமிக்க இருந்து சாப்பிடுவது சம்பாஷிப்பது, வாசிப்பது வழக்கத்தில் வரவில்லையன்றே? குடும்ப சீவியத்தின் சந்தோஷமும், ஆறுதலும், அறிவுப்பெருக்கமும் இவற்றிலேயே தங்கியிருக்கின்றனவன்றே? மேலைத்தேசப் பெற்றுர் இத்தருணங்களிலேயே தோற்றுதவண்ணம் அரசியல் விஷயமோ, உலகசரித்திர விஷயமோ, சாஸ்திர விஷயமோ எவ்விதமான அறிவுகளையும், நாள் வீதம் பிள்ளைகள் மனதிற் புகுத்திவிடுகிருர்கள். பிள்ளைகளும் இவ்வாறு பெற்றுர் மூலமாய் மனவிரிவடைந்து தாம் பிற்காலத்தில் சுயாதீனமாய்ச் சீவியம் நடத்துவதற்கு நல்லாயத்தஞ் செய்வதினுற் குடும்ப சீவியம் அவர்களுக்கு ஆசீர்வாதமாய் முடிகின்றது. நல்ல போதகர்களாய், கல்விமான்களாய், தொழின் முயற்சியுள்ளவர்களாய்ப் பேர்ப்பிரஸ்தாபமுற்றவர்களான தந்தைமார் தம் பிள்ளைகளுக்குத் தாம் செய்ய வேண்டிய மேற்குறித்த கடமைகளைச் செய்யாது விட்டு, அவர்கள் தம்மைப்போல விசேஷம் பெற்றவர்களாய் வரவில்லையே யென நூதனப்படுவது மதியீனமன்றே? நம்மூரவர்கள் பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு முழுவதையும் தாய்மாரிலே ஏற்றி, "தாயைப்போலப் பிள்ளை" எனப் பழமொழியுஞ் சாற்றி விட்டார்கள். இது மிகவுந் தவருன காரியம். தந்தைமார் தமது கம(விவஸாயம்)முயற்சியோ, வியாபார முயற்சியோ, உத்தியோக கடமையோ, இவற்றில் தமது நேரம் முழுவதையுஞ் செலவழித்துக்கொண்டு, பிள்ளைகளின் சரீரவளர்ச்சி, மனவளர்ச்சி, ஒழுக்கவளர்ச்சி, மார்க்கவளர்ச்சி என்பவைகளைக் கவனியாது விட்டு விடுகின்றனர். அறியாமையுள்ள தாய்மார் என் செய்வர். அவர்கள் தாமறிந்த அறிவுக்குத் தக்கதாய்ப் பிள்ளைகளைப் பயிற்றிவிட, வேலைக்காரரும் கெட்ட தோழருந் தாமறிந்தனவற்றையும் பயிற்றிவிடுகின்றனர். பின்னைத் தந்தையரைப் போல மைந்தர் தோன்றுவ தெவ்வாறு?

தந்தைமாரே, உங்களுத்தரவாதத்தை உணர்வீர்களாக. குடும்பத்தைத் தாபரிக்கிறதற்காக உத்தியோக முயற்சி, தொழின்முயற்சிசெய்து பண முழைப்பது மாத்திரம் உமது கடமையென எண்ணுதீர். உலகத்திலே பிள்ளைகளைத் தோற்றுவிக்கும் நீவிரே அப்பிள்ளைகள் உலகத்துக்கு ஆசீர்வாதமாய் வரத்தக்க அறிவொழுக்கங்களைப் பயிற்றுங் கடமைப்பாடு முடையீரென்பதை அறிந்து கொள்வீர்களாக.

"தந்தை மகற்காற்றுமுதவி அவையத்து
முந்தியிருப்பச் செயல்"

பிள்ளைகளுக்கு இந்நிலைமைக் கொடுக்கக் கூடிய அதியுத்தம போதகாசிரியர், வேலைக்காரல்ல, நாட்டுப் பாடசாலையுபாத்தியாயரல்ல, வேறுயாருமல்ல, நீவிரே யென்பதை அறிந்து கொள்வீராக. காலையிலோ மாலையிலோ, சாப்பாட்டு நேரத்திலோ, ஆராதனை நேரத்திலோ, உங்கள் பிள்ளைகளை உங்கள் பக்கத்தில் வைத்திருந்து நல்லறிவூட்டி நற்பழக்கம் பழக்குங்கள். இப்படிச் செய்வதினுல் உங்கள் பிள்ளைகளும் உங்களைப் போல அல்லது உங்களிலும் பார்க்கப் பெரியவர்களாய் வருவார்களென்பது நிச்சயம்.

தந்தைமாரினுத்தரவ தம் இவ்வளவானுற் தாய்மாரினுத்தரவாதமும் அவ்வளவு அல்லது அதிற் கூடினதேயாம். தந்தைமார் உத்தியோக கடமையிலும் தொழின் முயற்சியிலும் வெளியிற் போய்விடத் தாய்மாரே மிகுதியும் வீட்டில் வசித்து வீட்டதிகாரிகளா

யிருப்பதினால் பிள்ளைகள் மிகுதியும் தாய்மாரின் போக்கை அனுசரிக்க எதுவாயிருக்கின்றது. ஆகையால்தான் நாம் மேற்கூறியவாறு தாயைப்போலப் பிள்ளை யென்னும் பழமொழியுமுண்டாயிற்று. தாய்மாரின் அறியாமையினாலும் ஒழுக்கவீனத்தினாலும் நம்மூரிலெத்தனையோ குடும்பங்கள் நாசமடைந்திருக்கின்றன. ஆனால் இளம்பிராயத்தில் தந்தைமாரிறந்துபோகப் பிள்ளைகள் தாய்மாரினால் அறிவூட்டப்பெற்று, நற்பழக்கமடைந்து பெரிய மனிதராய் வந்த உதாரணங்களும் உலகத்திலதிகமாயுண்டு. ஆகையால் பிற்காலத்திற் தாய்ம ராய் வரும் ஸ்திரீகள் நன்றாய்க் கல்வியறிவு, நல்லொழுக்கம், தெய்வபக்தி, இவற்றிற் பயிற்றப்படுவதும், விசேஷமாய்க் குடும்ப சாஸ்திர அறிவில் தேற்றமடைவதும் அவசியமான காரியம். இவ்வாறு தந்தை தாயார் இருவரும் நல்லறிவுடையோராய்த் தாம் பிள்ளைகளுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் சரியாயுணர்ந்து நிறைவேற்றுவரேல் அவர்களின் பிள்ளைகளைப் பற்றிப் பிற்காலத்திற் கவலையுற இடமிராது.—ஓர் இலங்கைப் பத்திரிகை.

IMPROVEMENT OF GOATS.

ஆடுகளை விருத்திபண்ணும் வழி.

இவ்விராஜதானியில் வெள்ளாடு பரிபாலனம் செய்யும் விதத்தை ஆராய்ந்து பார்க்குமளவில் சாதாரணமாய் மனதிற்கு இனிமையா யில்லாமலிருக்காது. செம்மறியாட்டைப் பரிபாலனம் செய்கிறதைக் காட்டிலும் வெள்ளாட்டைப் பரிபாலிக்கிறது என்ன நலம் என்று சந்தேகம் ஜனிக்கலாம். இவ்விரு விதத்தையும் இப்போதிருக்கப்பட்ட க்ஷீணதிசையிலிருந்து உயர்த்த முயற்சிக்கவேண்டிய தவசியம் தான். இவ்விரண்டும் சரியான பலனைக்கொடுக்கக் கூடியவைகள்தான்.

செம்மறியாட்டின் மயிர் வியாபாரத்துக்கு தகுதியான பொருள். ஆடு பால் கொடுக்கிறது. அதிலிருந்து வெண்ணெய் எடுக்கிறார்கள். செம்மறியாடு மாமிசமும் கொடுக்கிறது.

வெள்ளாடு சாதாரணமாய் ஜாஸ்திப்பால் கொடுக்கின்றது. அதின் மாமிசம் செம்மறி யாட்டின் மாமிசத்தைக் காட்டிலும் மட்டமாயிருந்தாலும், சுதேசிகளால் மிகுதியாக விரும்பப்படுகிறது. கொடுக்கிறதில் இரண்டும் ஒரே மாதிரியாயிருக்கிறது. குடியானவன் சௌகரியத்தை உத்தேசிக்குமளவில் செம்மறியாட்டைக்காட்டிலும் வெள்ளாடு ஜாஸ்தியாய்க் கவனிக்கத்தக்கதாயிருக்கிறது.

சாதாரணமாய் செம்மரியாட்டின் ஆகாரத்திற்கு உபயோகமில்லாத அனேக பூண்டுகள் வெள்ளாட்டுக்குச் சிலாக்கியமான உணவாகின்றன. சுருக்கமாய்ச் சொல்லுமளவில் வெள்ளாடானது யாவற்றையும் உண்ணக்கூடிய பிராணியாக இருக்கின்றது. அதின் எருவானது செம்மறியாட்டின் எருவைக்காட்டிலும் சிலாக்கியமாயிருக்கின்றது. ஒரு வெள்ளாட்டைச் சரியானபடி போஷித்தால் 2 குட்டி போடுகிறது. செம்மறியாடோ அதே ஸ்திதியில் போஷித்த போதிலும் 2 குட்டி சாதாரணமாய்ப் போடாது. வெள்ளாட்டிற்கு வருஷா காலத்தின் சொடுமையைத் தாங்கக்கூடிய சக்தி செம்மறியாட்டைக் காட்டிலும் ஜாஸ்தியாயிருக்கிறது.

இவ்விராஜதானியில் நீலகிரி, வயநாடு இவ்விரண்டு பிரதேசங்களைத் தவிற மற்ற ஜில்லாக்களெல்லாம் விசேஷமாய் மலையாளம், தென்கன்னடம், கொச்சி, திருவாங்கூர் பிராந்தியங்களும் வெள்ளாடு பரிபாலிக்கத் தகுந்த இடங்களாயிருக்கின்றன. மேற்கு ஜில்லாக்களிலிருக்கிற குன்றுகளிலும் மலைகளிலும் வருஷம் முழுமையும் சில இடங்களில் வருஷத்திற்கு 8 மாஸத்திற்கும் மேய்ச்சலைக் கொடுக்கத்தக்க புல் பூண்டுகள் இருக்கின்றன. எல்லாவற்றிலும் வெள்ளாட்டுப்பால் கொடுக்கக்கூடிய குணகுணங்கள், நாம் முக்கியமாய் கவனிக்கத்தக்கவை. நன்றாய் போஷிக்கப்பட்ட ஒரு நல்லஜாதி வெள்ளாடானது நாளொன்றுக்கு முக்கால்படி அல்லது ஒருபடி பால் கொடுக்கின்றது. குறைந்த அளவு பசுமாட்டைப்போல சொல்பமாயும் ஒன்றுமில்லால் போனாலும் போகலாம். இம்மாதிரி விஷயங்களில் சின்னஞ் சிறு தொகையைக்கொண்டு நாம் நிதானிக்கலாகாது. உத்தம பரிமாணத்தைக்கொண்டு நிதானிக்கவேண்டும்.

நமக்கு இவ்விதமாய் மலிவாய் ஆதரிக்கக் கூடியதாயும் நல்ல பாலைக் கொடுக்கக்கூடிய குணங்களை உடையதாயும், (ஜாஸ்தி விருத்தியடையத் தகுந்த தன்மையாயும்) பலம், உபயோகமுள்ளதாயுமிருக்கிற பிராணியானது கடவுளால் ஆசீர்வதிக்கப்பட்டது என்ற நாம் பெருமை பாராட்டினபோதிலும் அப்

பிராணியின் முக்கியமான உபயோகங்களை நாம் அனுபவிக்கிறதில்லை யென்பது நம்மால் ஒப்புக்கொள்ளப் பட வேண்டியதுதான்.

வெள்ளாட்டின் தற்கால சீரற்ற நிலைமைக்கு நம்முடைய அறியாமைத்தனம் மாத்திரம் காரணபூதமல்ல. விசேஷமாய் மலையாளம் ஜில்லாவைப்பற்றி பேசும் விஷயத்தில் அப்பிராணியின் உபயோகத்தைப் பற்றி ஒருவரும் ஆட்சேபிக்க மாட்டார்கள். அதின் பாலானது மாட்டுப்பாலைக்காட்டிலும் சிலாக்கியமென்று நாட்டு வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

மாமிசமும் எருவும் மிகவும் சிலாக்கியமானதென்று சொல்லுகிறார்கள். சமீபத்தில் தோப்பு வகையறாக்கள் அதிகமாகப் பயிரிடக் கூடியதாயிருக்கிறபடியால் ஆட்டு எருவிற்கு அதிக தேவை அல்லது கிராக்கியிருக்கின்றது. அப்படி யிருந்தபோதிலும் மலையாளத்தில் குடியானவர்கள் ஆடு விருத்திபண்ண வேண்டுமென்கிற வேலையைச் செய்ய உத்தேசிக்கவே இல்லை. இதுவு மிகவும் வியப்பை யளிக்கக் கூடியதாயிருக்கிறது.

இதற்குக் காரணமென்னவெனில் வெகுவாய் மலையாளத்தில் பெரிய குடித்தனக்காரர்கள் எல்லோரும் பிராமணர்களும் நாயர்களுமாயிருக்கிறார்கள். இவர்கள் தங்கள் நிலங்களைத் தாங்களே சாகுபடி செய்கிறதில்லை. சிறு குடியானவர்களுக்கு தனித்தனியாய் நிலங்களைப்பிரித்துக் குத்தகைக்குவிட்டுவிடுகிறார்கள். அச்சிறு குடிகள் தங்களைவிடக் கேவலமான ஏழைச் சிறு குடிகளிடத்தில் குத்தகைக்கு விட்டு விடுகிறார்கள். இம்மாதிரி விடுகிறதில் நிலமானது துண்டு துண்டாய்ப் பிரிக்கப்பட்டு மிகவும் சொல்பமாய் ஒரு ஏர்கூட வைக்க இலாயக்கில்லாத நிலமையிலிருக்கிற குடியானவர்கள் கையில் போய்ச்சேருகிறது.

அவர்களுக்கு எருவின் அருமை தெரிகிறதில்லை. அவர்கள் ஐவேஜி 10 அல்லது 12 ரூபா தான் செலவழிக்கமுடியும். அதைக்கொண்டு அவர்கள் 3 அல்லது 4 ஆடுகள்தான் வாங்கமுடியும். அதுகளை மேய்க்க ஒரு பையனை ஏற்படுத்தவேண்டும். அதில் லாபமில்லை. அவைகளைக் காலாடியாய் விட்டு விடும் பட்சத்தில் அக்கம் பக்கத்திலுள்ள குடியானவர்களின் பயிரை அழித்துவிடும். ஆகையால் அந்த ஆடுகளை ஒரு சிறுபட்டியில் ஆகாரமில்லாமல் அடைத்துவிட வேண்டி யிருக்கிறது.

ஜாஸ்தியான ஆடுகளை போஷிக்க சக்தியுள்ள மிராசுதார்கள் தங்கள் வைதீகத் தன்மையினாலும், தாங்களே நேராக ஸாகுபடி செய்யாததினாலும் அம்மாதிரிஜாஸ்தியாய் ஆடுகளை பரிபாலிக்க இஷ்டப்படுகிறதில்லை. வெள்ளாட்டிலிருந்து பால் எடுக்கிறதற்கு அவர்கள் இஷ்டப்படுகிறதில்லை. ஏனென்றால், பசுவின் பால்தான் முக்கியமான ஆகார வஸ்துவாயிருக்கின்றது.

பசுவின் பாலைக்காட்டிலும் ஆட்டுப்பால் பலம் என்கிற விஷயம் அவர்களுக்குத் தென்படவில்லை. ஆட்டை வளர்த்துக் கசாப்புக்கடைக்காரனுக்கு விலைக்கு கொடுக்கிற தென்பது அவர்களுக்கு பெரிய பாவம் என்று நினைக்கிற சுபாவம். இத்யாதி காரணங்களினால் இவர்கள் ஆடு விருத்திபண்ணும் தொழிலை இழிவான தென்றும் ஜாதிக்குரியதல்ல வென்றும் ஈன ஜாதிக்குத்தான் உரித்தான தென்றும் நினைத்துக்கொண்டு சென்ற வருஷங்களாய் காலத்தைக் கழித்துக்கொண்டு வருகிறார்கள். இவ்வாறு இவர்களுக்கு இத்தொழிலில் ஆவல் குன்றுபட்ட காரணங்களைத் தெளிவாய் அறிவித்தோம்.

இனி இத்தொழிலைப்பற்றி பின்வருமாறு உரைப்போம்.

இப்போது சாதாரணமாய் இவ்விராஜதானியில் ஆடுவளர்க்கும் தொழிலானது எப்படி இருக்கவேண்டுமோ அப்படியிருக்கவில்லை. ஐரோப்பியர்கள் அனுசரிக்கும் வழியைப் பார்த்து அநுசரிக்கவேண்டும்.

இவ்வித்தையானது இப்போது பாலியப்பருவத்திலிருந்தால் ஐரோப்பியர்கள் இவ்வித்தையில் அனுசரிக்கும் ஒவ்வொரு நுட்பமான விஷயங்களையும் நாம் கவனிக்கவேண்டுமென்பது அவ்வளவு அவசியமாகத் தோன்றவில்லை. ஒவ்வொருவனும் விருத்தி செய்கிற விஷயத்தில் ஒவ்வொரு கருத்தை வைத்துக் கொண்டிருக்கிறான். அக்கருத்திற்கு இசைய பரிபூரணம் செய்யவேண்டுமானால் ஒவ்வொரு நுட்பமான விஷயங்களையும் அவன் கவனிக்கவேண்டியவனாயிருக்கிறான்.

உதாரணமாக இத்தேசத்தில் ஆடு விருத்தி செய்ய விரும்புகிறவன் ஸாதாரணமாய் ஆட்டு ஜாதியின் சுத்தத்தை ஜாஸ்தியாய் கவனிக்கவேண்டியதில்லை.

விநோதத்திற்காக ஆடு விருத்திசெய்ய ஆரம்பிவிக்கிறதானது பருவத்திற்கு முந்தின காரியமாகும்.

விருத்திசெய்ய விரும்புகிறவன் விருத்திப் பொருள் வியாபாரத்திற்கு இலாயக்குள்ளதா வென்பதைக் கவனிக்கவேண்டும்.

மேற்படி காரியத்தை நிறைவேற்றவும் இலாபம் அடையவும் வேண்டியதானல் நாம் ஜாஸ்தியான பிராணிகளை ஆரம்பத்தில் வைத்துக்கொண்டு நம் கார்யத்தை ஆரம்பிக்கவேண்டும்.

ஸாதாரணமாய் நன்ருய்ப் போஷிக்கப்பட்ட ஒரு செம்மறிக் கடாவானது 30 முதல் 50 மறிகள்வரை பொலியும். 150 மறிகள் இருக்கும் ஆட்டு மந்தைக்கு 3. கடா இருந்தால் போதும். இத்தொழிலிலும் மற்றத்தொழிலைப்போல ஆரம்பத்தில் சரியான இனமாய்ப் பொறுக்கவேண்டும். இப்படிச் செய்கிறதில் பின்னல் வரக்கூடிய செலவையும், தொந்தரவையும் போக்கடிக்கும். விசேஷமாய் அனேக சமயங்களில் ஜாஸ்தி செலவுகூடக் கிடையாது.

பிராணிகளில் பூர்வோத்தரங்களை விசாரிக்குமளவில் அவைகளின் சுபாவமும் குணங்களும் வெளியாகும். பிராணிகளைத் தெரிந்தெடுத்த பிற்பாடு நாம் அவைகளை ஜாக்கிரதையாயும் பந்தோபஸ்தாயும் காப்பாற்றவேண்டும்.

இவ்விஷயங்களிளெல்லாம் நாம் ஜாஸ்தியாய் விவரித்துச் சொல்லவேண்டியதில்லை. நம் தேசத்தில் இவ்விஷயத்திலிருக்கும் முக்கியமான குறைகளை எடுத்து விவரிப்போம். முதலாவது மறிகள் கடாக்களுடன் எப்போதும் சேர்ந்திருப்பது சரியல்ல. இவ்வழக்கம் அனேகம் கெடுதல்களை விளைவிக்கின்றன. குட்டிகள் எக்காலத்தில் ஜாஸ்தியாய் விருத்தியாகுமோ, எப்போது ஜாஸ்தியாய் மரணமில்லாமலிருக்குமோ, அக்காலம்தான் குட்டிகள்ஈனுகிற காலம். இது அந்தந்த ஜில்லாக்களின் சீதோஷ்ண ஸ்திதியை அனுசரித்திருக்கின்றது. மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களாகிய வேனில் காலத்தில் மலையாளத்தில் சாதாரணமாய் ஆட்டிக்குட்டி மரணம் ஜாஸ்தியாயிருக்கின்றது. ஆடுகளெல்லாம் அந்தக் காலத்தில் குன்றுகள் மலைகளில் எரிந்துபோயிருக்கிற புல் பூண்டுகளையே ஆகாரமாக நம்பிக்கொண்டிருப்பதினல் மெலிந்து பலஹீனமாயிருக்கின்றன. இதே மாதிரியான கஷ்டங்கள் ஜுலைமாதத்திலும் அனுபவிக்கப்படுகின்றன. ஜுலை மாதத்தில் வடமேற்குக் காற்றினலும் ஏராளமான மழையினலும் குட்டிகளுக்கு அனேக வியாதிகள் உண்டாகின்றன. ஆகையால் பொலிச்சலுக்குச் சரியானகாலம் ஆகஸ்டுமாதம் மத்திதான். இக்காலம் அனேக விதத்தில் நன்மையை விளைவிக்கிறது. முதலாவது தாயின் தேகசௌக்கியத்திற்குச் சரியான காலமாக இருக்கிறது. இரண்டாவது குட்டிகள் ஜுலைமாசத்தில் உண்டாகும் கெடுதலைக் கொடுக்கிற புல் பூண்டுகளைத் தின்னமல் தாயாரின் பாலைக் குடிக்கின்றன. நமது ஆடுகள் சாதாரணமாய் 2 தரம் ஈனுகின்றன. ஆகஸ்டுமாதம் மத்தியில் ஒருதரம் ஈன்ருல் மறுபடியும் 6 மாதத்திற் கப்புரம் பிப்ரவரி மாதத்தில் ஒருதரம் ஈனுகிறது. பிப்ரவரிமாதம் சரியான காலமாயிருக்கிறது.

சைதாப்பேட்டை பாரத்தில் செய்த சோதனைகளில் ஜுலை மாதம் பிறந்த ஆடுகளில் ஜாஸ்தியான மரணங்கள் உண்டானதாக யிருந்தது. நூற்றுக்கு 20 வீதம் மரணம் உண்டாயிருக்கிறது. பிப்ரவரி மாதம் பிறந்த ஆடுகளில் நூற்றுக்கு 5 வீதம் தான் மரணம் உண்டாயிருக்கிறது.

ஜாஸ்தியான மேல்பார்வை யில்லாவிட்டால் மிகுதியாக நஷ்டம் உண்டாகும். இரண்டு ஆடுகளைத் தனியாகப் போஷிக்கிறதில் ஜாஸ்தி செலவில்லை.

கடாவை, மறியைவிட்டுப் பிரிக்க வேறே அனேக காரணங்களிருக்கின்றன. அப்படித் தனித் தனியாய்ப் பிரித்து வைக்காமலிருந்தால் உத்தேசித்த காரியத்தை நிறைவேற்ற முடியாது. அதாவது எந்தகுணம் ஆட்டுக்கு உண்டாகவேண்டுமோ அந்த குணங்கள் ஆட்டுக்கு உண்டாகமாட்டாது. மேலும் அடிக்கடி செய்யும் புணர்ச்சியால் உண்டாகும் பல வீனத்தைத்தடுக்க முடியாது.

நம்தேசத்தில் முக்கியமாய் கவனிக்கவேண்டிய இன்னுமொரு விஷயத்தைக் கவனிக்கிறதில்லை. அதாவது குட்டியானது தகுதியான வயது ஆகிறதற்கு முன்னமேயே தாயினிடத்திலிருந்து பிரிக்க வேண்டியது. நம் தேசத்தில் சாதாரணமாய்க் குட்டிகள் 3 மாதவயதானவுடன் பருவத்திற்கு முன் பக்குவமடைந்து விடுகின்றன. இவ்விதமாக அனேக ஆடுகள் இப்பேர்ப்பட்ட கடாக்களால் கர்ப்பமடையப் படுகின்றன. இதைத் தடுக்கிறதற்கு என்ன செய்ய வேண்டுமென்ருல் எந்த ஆடுகள் பொலிக்க பிரயோசனப்படாதோ அந்த ஆடுகளைவிரையடிக்கவேண்டும். அப்பேர்ப்பட்ட ஆடுகள் 3 மாதவயதாகிறதற்கு முந்தியே விரையடிக்கப்படவேண்டும்.

மறிகள் சாதாரணமாய்க் கடாக்களுடன் புணர்ச்சி

செய்யப்படுமுன், தகுதியான வயதாயினவா வென்று பார்க்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. மலையாளத்தில் சாதாரணமாய் 10 மாத வயதுள்ள மறிகள் சிறிய இளைப்பான குட்டிகளுடன் புணருகிறது அபூர்வமல்ல. இவ்வாடுகளில் மரணம் மிகவும் ஜாஸ்தி என்கிறதை அவர்கள் கவனிக்கிறதில்லை. இம்மரணத்திற்குத் தப்புகிற குட்டிகள் சரியான புஷ்டியாயும் பருமனும் ஆகிறதில்லை. இத்யாதி காரணங்களால் ஆடுகள் குட்டி போடுகிறதற்குமுன் 15 மாதம் வயதுள்ளதாகவாவது இருக்கவேண்டும். ஒரு மனுஷன் இக்காரியத்தில் தேர்ச்சியாய்ச் செய்ய விரும்புமளவில் இப்பேர்ப்பட்ட முன் ஜாக்கிரதைகளைச் செய்யவேண்டும். சர்வடைகமாக முன்னோர்கள் செய்த பிரகாரம் செய்ய முயலுகிறவர்களிருக்கிற தேசத்தில் இக்காரியங்கள் செய்கிறது அசாத்தியமாயிருக்கும்.

நாகரீகமும் புத்தி நுட்பமும் ஜாஸ்தியாயிருக்கிற ஜனங்களே குழந்தை விவாகம் நடத்துகிற வழக்கமாயிருக்கிற தேசத்தில் வாயில்லாத ஊமைப் பிராணிகள் விஷயத்தில் இக்காரியங்களைத் தடுக்க முயலுவது மூடத்தனமான வியாபாரம்தான். ஜனங்கள் இச்சீர்திருத்தங்களைச் செய்ய கொஞ்சநாளில் கவனிப்பார்கள்.

வேனில்காலத்தில் ஆட்டுமந்தைகளைப் பார்க்க ரொம்பப் பரிதாபமாயிருக்கும். வெள்ளாடுகளை உலர்ந்த தரைகளில் மேயவிடுகிறது பாபகரமும் லாபமில்லாததுமாயிருக்கிறது. ஏதாவது சொல்ப ஆகாரத்தையாவது பஞ்சகாலத்தில் கொடுக்கவேண்டும். அப்படி விசேஷமான ஆகாரம் கொடுக்கவேண்டிய காலம் வருஷத்தில் மிகவும் சொல்பம். அதாவது பிப்ரவரி மீ பின்பாகம் முதல் மே மாதம் முன்பாகம் பரியந்தம் (3 மாதம்) இப்படி வரட்சியாயிருக்கும் காலமும் புனிதர்கள் கர்ப்பமாயிருக்கும் காலமும் ஒன்றாகயிருந்தால் அப்பிரா்ணிகளுக்கு விசேஷ ஆகாரம் கொடுக்கிறது எவ்வளவு அவசியமென்று நீங்களே அறிந்துகொள்ளலாம். தீட்டரிசித் தவிட்டுடன் கலந்த தேங்காய்ப் பிண்ணாக்கைக் கொடுத்தால் ரொம்பசலீஸாய் நிர்வகிக்கலாம். மலையாளத்தில் செலவு தலைக்கு 1 பைசாவுக்குமேல் போகாது. செலவு விபரம் பின்னால் எழுதப்படும்.

சரியான ஆகாரம் கொடுக்கிற விஷயத்திற்கு அடுத்தாற்போல நாம் கவனிக்கவேண்டிய விஷயம் சரியான இனமாகத் தெரிந்தெடுக்க வேண்டியதேதான். விருத்திசெய்ய விரும்புகிறவன் சரியானபடி எந்தப் பிராணிகள் சிலாக்கியமான குணங்களுடன் கூடியதோ அதைத் தெரிந்தெடுத்து அதை வைத்துக்கொண்டு இதரப் பிராணிகளை விற்பனைசெய்துவிட வேண்டியது.

பிற்பாடு நாம் கவனிக்கவேண்டியது லாப நஷ்டம். தற்கால காலக்ஷேபங்களை உத்தேசித்துப் பார்க்குமளவில் ஒவ்வொருகாரியத்திலும் நாம் இலாபநஷ்டங்களை ஜாஸ்தியாய்க் கவனிக்கவேண்டியதாயிருக்கிறது. வியவஸாயம், வியாபாரம், கைத்தொழில், இம்மூன்றும் ஒரு தேசத்தின் ஜனங்களின் செழிப்பை விளைவிக்கக்கூடிய தூண்களாயிருக்கின்றன. இவைகளின் ஆதாரபூதம் இலாபநஷ்டந்தான். "ஆதாயமில்லாமற் செட்டி ஆற்றுடன் போகமாட்டான்" என்கிற பழமொழிப்படி ஒருவனும் இலாபநஷ்டத்தைக் கவனியாமல் ஒருகாரியத்தைச்செய்ய ஆரம்பிக்கமாட்டான்.

நமக்கு இம்மூன்று வித்தையிலும் பயிற்சி யில்லாமையால் இம்மூன்று தொழிலும் விருத்திக் குறைவுக்குக் காரணமாயிருக்கிறது. வியவஸாயத்தொழில் மேன்மையான தொழிலென்பதுவும் தற்காலத்தில் அது உன்னத தசையிலில்லை யென்பதுவும் இது மற்றெல்லாத் தொழிலைக் காட்டிலும் மிகவும் கண்ணியமான தொழிலென்பதுவும் ஒரு மனிதனை வியவஸாயியாக்கச் சரியான ஏதுவாகமாட்டாது.

ஒரு மனிதன் வியவஸாயத்தில் தகுந்த இலாபமடைந்தபோதிலும் மற்றவர்கள் அதை கவனிக்கிறதில்லை. குடியானவர்கள் முக்கியமாய் நம் பிரபோதங்களை ஏன் எடுத்துக்கொள்ளுகிறதில்லை என்பதைக் கேட்குமளவில் நமக்கு ரொம்ப வியப்புள்ளதாயிருக்கிறது. குடியானவர்கள் பழையமாதிரி வழக்கங்களையே செய்கிறார்களே தவிர புதிதாய் ஏதாவது பிரபோதங்கள் சொன்னால் அவைகளைக்கேட்க அவர்கள் மனம் எழும்புகிறதில்லை. குடியானவனுக்கு புதிதாய் ஏதாவது பிரபோதம் சொல்லி அதின் நடவடிக்கையைக் காட்டி இலாபமிருக்கிறதென்று தெரிகிற பரியந்தம் அவன் அக்காரியத்தைச் செய்யத்துணிகிறதில்லை. ஆகையால் நாம் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பிக்குமுன் எவ்வளவு தூரம் இது இலாபத்தைக் கொடுக்கும் என்பதைத் தெரிந்துக்கொண்டு நாம் அக்காரியத்தைச் செய்யத்துணிய வேண்டியது முக்கியமாயிருக்கிறது. பின்னால் சொல்லப்போகிற கணக்

கானது மலையாளத்தின் ஒரு பாகத்தில் வருஷத்திற்கு ஒன்பது மாதம் மேய்ச்சலுள்ள இடத்திலிருந்து எடுக்கப்பட்டது. நூறு ஆட்டை மேய்க்கவும் பார்த்துக்கொள்ளவும் ஒரு இடையன் போதும்.

நூறு ஆட்டுக்கு ஆடொன்றுக்கு 4 ரூபா வீதம்

	ரூ.	அ.	பை.
கண்டுமுதல்	400	0	0
கொட்டகை போட	100	0	0
சில்லரை	25	0	0
	525	0	0
மாதமொன்று 3 ரூபா வீதம் கூலி	36	0	0
பஞ்சகாலத்தில் விசேஷ ஆகாரம் போட தலைக்கு 1 பை விதம்	45	0	0

தீனிக்குக் கிரயம் மலையாளம் ஜில்லா கிராமாந்திரப் பிரதேசங்களில் ரொம்பக் கொஞ்சம். ஏனென்றால் 2 பைசாவுக்கு ஒரு படிக்குமேல் தீட்டரிசித் தவிடு வாங்கலாம்.

மேற்சொன்ன கணக்குப்பிரகாரம் நாம் போட வேண்டியமுதல் 525 ரூபா, இதரச் செலவு ரூபா 80, ஆகமொத்தம் 600 ரூபா முதலில் நாம் போடவேண்டியதாயிருக்கிறது. அதில் நமக்கு வரும் இலாபத்தை உத்தேசித்துப் பார்ப்போம்.

நாம் இலாபத்தைக் கணக்குப் பார்க்கும்போது இரண்டு முக்கியமான விஷயங்களைக் கவனிக்கிறதில்லை. அதாவது,

(1) எரு (2) பால். எரு ஒரு வண்டி 2 ரூபா கிரயம். இதில் நிரம்ப இலாபமிருக்கிறது. குடியானவனே இதைக் கவனிக்கிறதில்லை. அவன் அவ்வெருவைத் தங்கிலத்தில் உபயோகப்படுத்துகிறது நிரம்ப உத்தமமாய் உபயோகிக்கிற வழியாகிறது. சாதாரணமாய் இத்தேசத்தில் ஆட்டுப்பால் ஜாஸ்தியாக விரும்பப்படுகிறதில்லை. ஆகையால் ஆடுகளைச் கொழுக்க விட்டுக் கசாப்புக் கடைக்கு கொடுக்கிறார்கள்.

நாம் பாலையும் எருவையும் கணக்கிடாமல் குட்டிகளை விற்பனை செய்கிறதை மட்டிலும் கவனிப்போம். சாதாரணமாய் வெள்ளாடு வருஷத்திற்கு இரண்டு தடவை ஈனுகின்றது. இரட்டைச்குட்டி போடுகிறதில்லை யென்று வைத்துக்கொண்டபோதிலும் நூறு ஆடுகள் இருநூறு குட்டிகள் போடுகின்றன. அதில் சாதாரணமாய் நூற்றுக்கு 5 விழுக்காடு மலட்டுத்தனத்திற்கும் 10 விழுக்காடு சொள்ளைநோய் முதலானதற்கும் தள்ளும்பட்சத்தில் 170 குட்டிகள் மிஞ்சுகின்றன. குட்டியொன்று சாதாரணமாய் 3 ரூபாயுக்கு விற்றாலும் 510 ரூபா ஆகிறது. அதில் சாதாரணமாய் விருத்தி செய்வது முதலான செலவுக்கு 100 ரூபா போனபோதிலும் 410 ரூபா யிருக்கிறது. இதில் தீனிச்செலவு முன் கணக்குப் பார்த்த பிரகாரம் 80 ரூபா போனபோதிலும் நமக்குச் சாதாரணமாய் 330 ரூபா மீறுகிறது. இது நூற்றுக்கு 50 வீதம் இலாபமுள்ளதாயிருக்கிறது.

ஆகையால் எரு, பால் இவைகளைத் தள்ளியே இவ்வியாபாரம் அதிச இலாபத்தை விளைவிக்கக்கூடியதாயிருக்கிறது. ஆனால் இத்தொழிலை ஜாஸ்தியாக ஜனங்கள் அங்கீகரிக்கிறதில்லை. ஏனென்றால் இத்தொழில் சோம்பேறிக்கு ஏற்ற தொழிலல்ல. கொஞ்சம் அஜாக்கிரதையாயிருந்தால் முழுமோச முண்டாகும். ஆகையால் இத்தேசத்தில் ஜாஸ்திக் காணிகள் வைத்திருக்குமவர்கள் இதைச் சற்றுகவனித்து ஜாக்கிரதையுடன் நடத்துவார்களானால் தக்க இலாபமுண்டாகி நம் நாடு விருத்தியாகும்.—விவஸாயதீபிகை.

THE BALKAN WAR.

பால்கன் யுத்தம்.

இவ்வுலகத்தில் தற்சமயம் நடந்து கொண்டிருக்கும் விசேஷித்த சம்பவம் பால்க்கன் யுத்தம்.

இந்த யுத்தத்தின் ஒரு பகுதியார் துருக்கி தேசத்தார். ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு முன் உலக முழுவதையும் நடு நடுங்கச் செய்த இம்மகம்மதிய ராச்சியத்தின் விஸ்தீரணம் 7,65,752 சதுர மைல். மறுகட்சியார் பல்கேரியா, செர்வியா, மான்டி நிகிரோ, கிரீஸ், என்னும் நான்கு சிற்றரசு நாடுகள். அவற்றின் விஸ்தீரணம் சுமார் 85,230 சதுரமைல். இவைகள் பால்கன் மலைப்பிராந்திய நாடுகளானதால் பால்கான் சிற்றரசுகளென்னப்படும். இவைகள் ஓர் காலத்தில் துருக்கியின் கீழிருந்து இப்பொழுது சுய அரசாட்சி பெற்றிருக்கின்றன.

துருக்கியின் ஆளுகைக்குள் அதன் தென்பாகத்தில் மஸிடோனியா, அல்பானியா என்றழைக்கப்படுகிற இரண்டு சிறு மாகாணங்கள் உண்டு. அத்தேசத்தார் பெரும்பாலோர் கிறிஸ்தவர்களானதால் மகமதியரின் ஆளுகை அவர்களுக்கு வெறுப்பாயிருந்தது,

ஆகையால் அவர்களின் இனஜனத்தாராகிய டால்க்கனியர் அத்தேசங்களுக்கும் தங்களைப்போல் சுய அரசாட்சி கொடுக்கவேண்டுமென்றும், மற்றும் சில விசேஷித்த மாறுதல்கள் செய்யவேண்டுமென்றும் துருக்கியை வேண்டிக்கொண்டனர். துருக்கி சுல்தான் இதற்குக் கிஞ்சித்தும் இசையாததால் இந் நான்கு சிற்றரசுகளும் ஓர் ஐக்கிய உடன் படிக்கை செய்துகொண்டு, அந்நியரின் படைத்துணை ஒன்றையும் விரும்பாது, தாமாகவே தைரியமாய் யுத்தத்தை ஆரம்பித்துவிட்டனர்.

துருக்கியின் சேனைத் தொகை 5,00,000; பால்க்கானிய சிற்றரசுகளின் சேனை 5,10,000; துருக்கியின் யுத்தக்கப்பல்கள் 4. பால்க்கனியரின் யுத்தக்கப்பல்கள் 5. துருக்கியின் சிறு கப்பல்களும் உடைவள்ளங்களும் 15. பால்க்கனியரின் சிறு கப்பல்களும் உடைவள்ளங்களும் 26.

இதுவரையில் துருக்கியர் தான் அபஜெய மடைகிறதாகத் தெரிகின்றது. உருவத்திற் சிறியதாயினும் அவர்களின் பகைஞராகிய சிற்றரசு நாடுகள் அதிக வீரங்காட்டுகின்றன. சிறிது காலத்திற்கு முன் இப்பூவுலக முழுவதையும் அதிரச் செய்த இம் மகா மகமதிய ராச்சியம் இந்த அற்ப கிரேக்க நாடுகளை இதுவரை ஜயிக்கக்கூடாதிருக்குமா என அநேகர் சந்தேகிக்கலாம். ஆனல் அதற்குப் பற்பல காரணங்கள் உண்டு.

1. துருக்கி தேசத்தார் பெரும்பாலும் உஷ்ண தேசத்தில் வசிப்பவர்கள். ஆகையால் அவர்களின் சைனியங்கள் குளிர் தேசத்தில் நன்ருய் யுத்தம் செய்யக் கூடாதவை. அவர்களின் பகைஞராகிய பால்க்கனியரோ வேனில் குளிர் அதிகமாயுள்ள மலைநாட்டில் வசிப்போர். யுத்தம் மாரிகாலத்தில் ஆரம்பித்ததால் காலநிலை எவ்வித குளிரையும் ஸகிக்கக்கூடிய பால்கனியருக்கு அனுகூலமாகவும், துருக்கியருக்கு பிரதி கூலமாகவும் ஏற்கின்றது. இக்காரணத்தினுல் தான் இச்சிற்றரசு நாடுகள் மாரிகாலத்தை யுத்தத்திற்காகத் தெரிந்துகொண்டன. மாரிகாலம் முடிவதற்குள் யுத்தத்தையும் ஓர் முடிவிற்குக் கொண்டுவரவேண்டு மென்பது அவர்கள் நோக்கம் எனத் தெரிகிறது.

2. துருக்கிக்கும் இத்தாலியாவிற்கும் உண்டான யுத்தம் முடிவு பெருததற்கு முன்னமே இந்தப்போர் ஆரம்பித்துவிட்டது துருக்கியருக்கு ஓர் அசம்பவமானகாரியம். முந்தின யுத்தத்தினுல் அவர்கள் நஷ்டமடைந்தும், இளைப்படைந்தும் இருக்கிறபடியால் தற்சமயம் வீரியத்தோடு யுத்தம்செய்ய இயலாதவர்களாயிருக்கிருர்கள். இது காரணத்தினுலும் பால்க்கனியர் யுத்தத்திற்கு இதை ஏற்ற சமயமெனத் தெரிந்துகொண்டனர்.

3. மலைவாசிகளாகிய பால்க்கனியர் அதிக வீரமும் மூர்க்க குணமுமுடையவர்கள். குளிரென்றும், பசியென்றும் பாராது மிருகங்கள் போல் யுத்தம் செய்வார்கள். துருக்கியர் பேர்போன வீரவான்களாயினும் இவ்வகை முரட்டு ஜாதியாருடன் யுத்தம் செய்வது எளிதான காரியமன்று.

4. பால்க்கனியரின் நாடுகள் துருக்கியைச் சூழவிருக்கின்றன. ஊருடன் பகைக்கில் வேருடன் கெடும் என்பதற்கிணங்க தம் தேசம் பகைஞரால் சூழப்பட்டிருப்பது துருக்கியரின் துர் அதிர்ஷ்டமே.

5. மேலும் துருக்கியர் இப்போரை எதிர்பார்க்கவில்லை. பால்க்கானியார் இவ்விதம் தங்களுக்கு விரோதமாக எழும்புவார்களென்பதை துருக்கியர் கிஞ்சித்தும் நினைக்கவில்லை. திடீரென இந்நாடுகளெல்லாம் எழும்பி துருக்கியை பிரமிக்கச் செய்துவிட்டன.

மேற்கூறிய விஷயங்களே தற்சமயம் துருக்கி சித்தி பெருததற்குக் காரணங்களாகும். இனி என்ன நேரிடுமோ என்பதைப்பற்றி ஒன்றும் தீர்மானமாய்ச் சொல்லக்கூடாதவர்களாயிருக்கிருேம். ஐரோப்பிய மகாராச்சியங்கள் எங்கு கைகலந்து யுத்தம் செய்ய நேரிடுமோ என்பது சந்தேகிக்கத்தக்கதே. ஆனல் இப்பொழுது நடக்கும் விஷயங்களிலிருந்து அதையும் தீர்க்க இயலாதவர்களாயிருக்கிருேம். இப்பொழுது சமாதானத்திற்காக ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

பால்க்கானியர் இதுவரை பிடித்திருக்கும் இடங்கள் அவர்களைச் சாரும். ஆனல் இனிமேல்தான் ஐரோப்பியரின் யுத்தம் ஆரம்பிக்கு மென்றெண்ணுவதற் கிடமுண்டு. ஏனெனில் பால்கன் சிற்றரசுகள் பிடித்திருக்கும் இடங்களை அவர்களுக்குள் இன்னும் பாகம் பிரிக்கவேண்டியிருக்கின்றது. அப்பொழுது ஆஸ்திரியா, ஜெர்மனி, ருஷியா, ரோமெனியா, முதலியவர்களின் சம்மதமில்லாமல் பால்க்கன் ராஜாங்கத்தார் தங்கள் தங்களுக்கு வேண்டிய இடங்களைப்பெற்றுக்கொள்வது எளியகாரியமன்று.

மகம்மதியரிட மிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டிய ஓர் அரிய விஷயமென்னவெனில், அவர்களுள் காணப்படும் அபூர்வ ஒற்றுமையே. அவர்களிடத்தில் காணப்படும் மதாபிமானமும் ஜாதி யபிமானமும் தேசாபிமானமும் வேறெவரிடத்திலும் காண்பதரிது. ஆயிரக்கணக்கான மைல் தூரத்திற்கப்பாலிருந்தாலும் மகம்மதியர் தங்கள் மதத்தவரும் குலத்தவருமாகிய துருக்கியரின் அவசியத்தை உணர்ந்து லட்சக்கணக்கான பணம் சேகரித்து யுத்த செலவிற்காக அனுப்பிக்கொண்டிருக்கிருர்கள். இத்தகைய ஒற்றுமை வேறெந்த மதத்தவரிடம் காணப்படுகின்றது? மற்றும் நம்தேசத்தவரான கிறிஸ்தவர் இந்துக்கள் முதலியவர்கள் உட்பிரிவினுல் ஒருவர்க்கொருவர் விரோதமும் பகையும் கொண்டிருப்பார்களே யல்லாது, இவ்விதம் ஐக்கியம் காட்டுவது அரிதினும் அரிதாகும். நாம் மகமதியரைப் புகழ்ந்து இவ்விஷயத்தில் அவர்களைப் பின்பற்றவேண்டியவர்களாயிருக்கிருேம்.—இரஞ்சிதபோதனி.

AGRICULTURE.
விவஸாயம்.

Government Botanist.

கவர்ன்மேண்ட் ஸ்தாவர சாஸ்த்ரி.—சோயம்பத்தூர் விவஸாய காலேஜில் ஸீனியர் ஸ்தாவரசாஸ்த்ர உதவி போதகரான மிஸ்டர் கே. ரங்காச்சாரியார் எம். ஏ எல். டி. சென்னை கவர்ன்மெண்ட் ஸ்தாவர சாஸ்த்ரியாக ஆக்ட் செய்வார்.

Manure for Cocoanut Trees.

தென்னை மரத்துக்கு எரு.—தென்னைக்கு எருப்போடும் விஷயமாய் திருவாங்கூரில் பரீக்ஷைசெய்து பார்த்ததில், 10 ராத்தல் பிண்ணாக்கு, 2 ராத்தல் எலும்புப் பொடி, அல்லது மீன் எரு, 20 ராத்தல் சாம்பல், 1 ராத்தல் உப்பு, இவை சேர்ந்த எரு மிகவும் ச்லாக்கிய மாயிருந்ததாகத் தெரிகிறது.

Sugar Expert.

சர்க்கரை நிபுணர்.—சர்க்கரை நிபுணர் ஸ்தானத்தை இந்தியா ஸெக்ரடரி புதிதாக உண்டாக்கி, அந்த ஸ்தானத்தில் டாக்டர் வி. ஏ. பார்பரை நியமனஞ் செய்துவிட்டார். அவர் பற்பல விதமான கரும்புப் பயிர்களின் தன்மையை அறிந்து கொள்வதற்காக, வடஇந்தியாவில் நீண்ட சுற்று ப்ரயாணஞ் செய்து ப்யூஸாவைப்பார்த்து விட்டு வேறு இடங்களுக்குப் புறப்பட்டுப் போயிருக்கிறார்.

Destruction of Pests in Plants.

பயிர்களிலுள்ள புழுக்களை அழித்தல்:—ஜெயங்கொண்ட சோழபுரத்தில் ஓர் மகமதியர் மிகுந்த ப்ரயாஸையுடன் ஒரு துரவு வெட்டி, கபிலை யேற்றம் போட்டு தண்ணீர் இறைத்து ஒரு காணி கரும்பும், ஒரு காணி வாழையும், ஒரு காணி கத்திரியும், இப்படி ஒவ்வொரு பயிரிலும் ஒவ்வொரு காணி வீதம் ஸாகுபடி செய்திருந்தார். அந்தப் பக்கங்களிலுள்ளவர்களுக்கு இது மிகவும் ஆச்சரியத்தை உண்டாக்கிற்று. பயிர்களோ விடாமல் தண்ணீர் இறைக்கப்பட்டப்படியால் மிகவும் செழித்துக் கொண்டிருந்தன. நன்றாய் செழித்து வளர்ந்த கத்திரியில் பூச்சிகள் விழுந்து விட்டன. ஒரு காணியாகிய 400-குழி நிலத்திலும் பூச்சிகள் விழுந்து இலைகளெல்லாம் சுருண்டும் வெட்டுப்பட்டும் போய் பார்வைக்கே மிகுந்த விகாரத்தை யுண்டுபண்ணி விட்டன. மேற்படியார் சில யுக்திகள் செய்து பார்த்துப் பலிக்காமல் கடைசியாக 30 கோழிகளை வாங்கி வந்து மேற்படி நிலத்தில் விட்டு, அவைகள் வெளியில் போகாமல் காவலும் ஏற்படுத்தினார். 2-3-தினத்திற்குள் செடிகளிலிருந்த புழுக்களை யெல்லாம் கோழிகள் சாப்பிட்டுவிட, செடிகளெல்லாம் மறுபடியும் தழைத்துக் காய்த்து நல்ல பலனைக் கொடுத்தனவாம்.

Cattle in India.

இந்தியாவில் கால் நடைகள்.—மத்ய மகாணங்களில் விவஸாய டிரெக்டராய் உத்யோகம் செய்யும் மிஸ்டர் வி. இ. லோ என்பவர் ஸமீபத்தில் எழுதின ஒரு வ்யாஸத்தில் இந்தியாவில் கால்நடைகள் எண்ணிக்கையிலாவது சரீர பலத்திலாவது குறையவில்லையென்று வாதித்து எழுதுகிறார். இவர் சொல்லுகிறபடி 1885-86-ம் வருஷத்தில் 540 லக்ஷம் கால்நடைகள் இருந்தன. 1909-10-ம் வருஷத்தில் 950 லக்ஷமாக ஆயின. இதற்கு பயிரான நிலங்கள் 525 லக்ஷம் ஏக்கரா அதிகமாயின. ஜனத்தொகையும் 390 லக்ஷம் அதிகமாயிருக்கிறது. ஆகையால் இவருடைய முடிவு என்ன வென்றால் கால் நடைகள் பயிர் செய்யப்படும் நிலத்தின் விஸ்தீரணத்தையும் ஜனத்தொகையின் அதிகத்தையும் விட அதிகமாயிருக்கின்றன என்பது. இப்படி இவர் முடிவு செய்ததில் ஏதோ பிசகு இருக்கவேண்டும் என்று சுதேசமித்திரன் எழுதுகிறது. ஏனெனில் முதலாவது ஜனங்களுடைய அபிப்ராயம் கால்நடைகள் எண்ணிக்கையிலும் பலத்திலும் குறைந்துபோயின என்பதில் ஸந்தேகமில்லை. இரண்டாவது, மாடுகளுக்குத் தீனிகிடைப்பது அரிதாகிவிட்டதென்பதிலும் ஸந்தேகமில்லை. மூன்றாவது, அவைகள் தீனிக்காக அடிக்கப்படுவதும், வ்யாதிகளால் மாண்டுபோவதும், அன்ய தேசங்களுக்கு ஏற்றுமதியாவதும் அவைகளின் எண்ணிக்கையைக் குறைத்து விட்டனவென்பதை ஒருவரும்மறுக்கமுடியாது. அவைகளின் சரீரபலங் குறைந்துபோய் விட்டதென்பதும் நிச்சயம். தீனிகிடைக்காவிட்டால் அவைகளின் பலம் எப்படி அதிகமாகும்? உண்மையெல்லாம் இப்படியிருக்க, மாடுகள் அதிகமாய்விட்டனவென்று வாதிப்பது முழுப் பூசினிக்காயைச் சோற்றில் மறைப்பது போலாகும் என்று சுதேசமித்திரன் சொல்லுகிறது.

Improvement of Cattle.

மாடுகளின் விருத்தி.—மாடில்லாதான் வாழ்வும் மதியில்லாதான் வாணிபமும் விழல் என்றொரு புலவர் பாடியிருக்கிறார். விவஸாய நாடாகிய இந்தியாவில் மாடுகளின் தேவை மிகவும் அவச்யம். உலகத்தின் மற்றெப் பக்கங்களிலும் ஆசரிக்கப்படாத ஆசார சீலங்கள் இந்தியாவில் இருக்கின்றன. பெரும்பாலோர் மாம்ஸபக்ஷணிகளல்லாதவர்களாய் இருக்கிறார்கள். இவர்களுக்கெல்லாம் பாலும், நெய்யும், தயிரும் அத்யாவசியமாயிருக்கின்றன. பொதுவாக மனித ஸமூகத்திற்கு மாடில்லாமல்ஜீவிக்கமுடியாது. தக்க புஷ்டியுள்ள மாடுகள் இப்பக்கங்களில் விருத்தியாவதில்லை. அநேகம் ஆகாரத்துக்காகக் கொல்லப்படுகின்றன. சிலர் விஷம்வைத்தும் கொன்றுவிடுகிறார்கள். இறந்த பிறகு அதை நாம் தொடுவதில்லையாதலின் விஷம் வைத்துக் கொன்ற பறையர்கள் பின்பு ஒன்றும் அறியார்போல வந்து இறந்ததைத் தூக்கிச்சென்று தோலும் எலும்பும் விற்று லாபமடைகிறார்கள். இப்படிப் பல காரணங்களால் மாடுகளின் விருத்திக்கு பங்கம் தோன்றியிருக்கின்றன. மேலும் அநேக மாடுகள் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுப் போகும் கொடிய வழக்கமும் நடையாடுகின்றது. விவஸாயி தக்க ஜாதி மாடுகளைக் கொண்டுவந்து அவைகளைக்கொண்டு அவைபோல மற்றவைகளையும் விருத்திசெய்து கொள்வதில் அச்ரத்தையாய் இருக்கிறான். இதற்காகவே கால்நடைக்காக்ஷிகள் ஆங்காங்கு கூடுவதும், தக்க ஜாதி மாடுகளைக்கொண்டு வருவோருக்கு, ஸன்மானங்கள் கொடுக்கப்பெறுவதும், இவ்விதம் அவர்கள் தூண்டப்படுவதினால் உத்ஸாகத்தோடு தங்கள் வேலையைச் செய்யும்படியாகிறதென்றும், இந்த வழக்கத்தினால் விசேஷ ப்ரயோஜனம் உண்டாகிறதென்றும், அநுபவத்தில் தெரிகிறது. இதை யநுஸரித்து ஒரு கால்நடைக் காக்ஷியை ஸமீபத்தில் தெலுங்கு ஜில்லாவை யடுத்த பென்னகொண்டா என்னுமிடத்தில் அவ்விடத்து விவஸாய ஸங்கத்தார் சிறந்த ஜாதி மாடுகளைக் கால்நடைக்காக்ஷிக்குக் கொண்டு வந்திருந்தோருக்குத் தக்க வெகுமதிகள் கொடுத்து புத்திபோதனையும் புரிந்தார்கள். இவ்வாறான ப்ரயத்தினங்கள் விசேஷமாக அடிக்கடி நடைபெற வேண்டுமென்று ரங்கூன் சுதேசபரிபாலினி விரும்புகிறது.

Goat Improvement Associations in Belgium.

பெல்ஜியத்தில் வெள்ளாடு அபிவிருத்தி ஸங்கங்கள்.—ஐரோப்பாவிலுள்ள பெல்ஜியம் தேசத்தில் வெள்ளாடு அபிவிருத்தி ஸங்கங்கள் அநேகம் இருக்கின்றன. அந்த ஸங்கங்களின் மெம்பர்கள் முதல்தரமானவும் பால் நன்றாய்க் கறக்கக் கூடியவுமான வெள்ளாடுகளை அடையும்படி அவர்களுக்கு நல்ல ஜாதியான ஆட்டுக்கடாக்களை உதவுவது அந்த ஸங்கங்களின் நோக்கமாம். 1909-ம் வருஷத்தில் இந்த விதமான ஸங்கங்கள் 425-இருந்தன. அவைகளில் 40,260 மெம்பர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு ஸொந்தமாய் 48,505 வெள்ளாடுகள் இருந்தன. மெம்பர்கள் செலுத்தும் வருஷ ஸந்தா மிகக்குறைவு. $2\frac{1}{2}$ அணாத்தான் ஆகிறது. இந்த ஸங்கங்களுக்கு ஸர்க்காரால் பண உதவி செய்யப்படுகிறது. இந்த ஸங்கங்களின் மானேஜர்கள் ஆட்டுக் கடாக்களை விலைக்கு வாங்கி, தெரிந்தெடுக்கப்பட்ட சில மெம்பர் வசம் ஒப்புவிக்கிறார்கள். இந்த ஆட்டுக்கடாவை பொலிய விடுவதற்காக இரவல் வாங்கிப் போகும் ஒவ்வொரு மெம்பரும், தடவைக்கு 5 அணா வீதம் கடாவை வைத்திருப்பவரிடத்தில் கொடுக்கவேண்டும். இந்தப் பணம் ஸங்கத்துக்கு அனுப்பப்படுகிறது. கடாவைத் திருப்பவர் அது பொலியும் போதெல்லாம் பதிவு செய்வார். அதற்காக அவருக்கு ஸ்வல்ப அல்லவுன்ஸும் கொடுக்கப்படுகிறது. பெண்ணாடுகளை ரெஜிஸ்டர் செய்தும், ஸங்கவிதிகள் ஸரியாக அனுஷ்டிக்கப்படுகின்றனவா என்று பார்த்தும்வர டிவிஷன் தலைவரும் நியமிக்கப்படுகிறார்கள். இந்த ஆடு விஷயங்களில் தேர்ந்தவர்கள் பெண்ணாடுகள் நன்றாயிருக்கின்றனவா என்று பரீக்ஷை செய்து, ஆண் ஆடுகள் நன்றாய் பாதுகாக்கப்படுகின்றனவா என்று மேற்பார்வையிட்டு ஆடுகளின் இனத்தை விருத்தி செய்ய யோசனைகள் சொல்லுவார்கள்.

இந்த ஸங்கங்கள் ஆட்டுக் குட்டிகளை விலைக்கு வாங்கி வளர்த்து ஸங்கத்தில் உழைக்கும் மெம்பர்களுக்குக் கொடுத்து உதவுவார்கள். ஒவ்வொரு வருஷமும் முடியுமானால் ஆட்டுக் காட்சிகளும் ஏற்படுத்துகிறார்கள். இப்படிப்பட்ட வேலைகளை பல ஸங்கங்கள் ஒன்று சேர்ந்தும் செய்கின்றன.

COMMERCE.

வ்யாபாரம்.

Low Priced Motor Cars.

மிகவும் குறைந்த விலையில் மோட்டார்க்கார்கள்.—அமெரிக்காவில் ஒரு மோட்டார் கம்பெனியார் 50-பவுன் அதாவது 750-ரூபாயிக்கு நல்ல மோட்டார்க் கார் ஸப்ளை செய்வதாய் வெளியிட்டிருக்கிறார்கள். அதிக லாபத்தை உத்தேசிக்காமல் ஆங்கிலேயக் கம்பெனிகளுக்குப் போட்டியாய் இவர்கள் வ்யாபாரஞ் செய்ய உத்தேசித்திருக்கிறார்கள். இந்தியாவிற்கு சீக்ரத்தில் இவை வந்துசேரும்.

New Waggons for Indian Railways.

இந்திய ரயில்வேக்களுக்குப் புது வண்டிகள்.—இந்தியாவிலுள்ள கவர்ன்மெண்டு ரயில்வேக்களில் போதுமான அளவு வண்டிகள் இல்லையென்று நேயர்கள் அறிவார்கள். அநேக ரயில்வேக்களின் உபயோகத்துக்காகப் பலவித வண்டிகளைச் செய்யும்படி, இந்தியா மந்திரி ஆபீஸால் இங்கிலாந்திலுள்ள வண்டி செய்யும் கம்பெனிகளுக்கு உத்தரவு செய்யப்பட்டிருக்கிறது. அவற்றின் க்ரயம் சிறுகச் சிறுகக் கொடுக்கப்படும். ஒரு கம்பெனி மூவாயிரம் வண்டிகள் செய்ய உத்தரவிடப்பட்டிருக்கிறது. தென் இந்தியா ரயில்வேக்காக 13 நூதன மாதிரியான பிரயாணி வண்டிகளும், 87-சரக்கு வண்டிகளும், 34-முதலிரண்டு வகுப்புக்கலந்த வண்டிகளும், 80-மூன்றாவது வகுப்பு போகிவண்டிகளும், 6 உத்யோகஸ்தர்கள் ஸலூன் களும் செய்யப்படும்.

The Mysore Sandal Wood Trade.

மைஸூர் சந்தனக்கட்டை வ்யாபாரம்.—அடியிற்கண்ட கணக்குகளால் மைஸூர் ராஜ்யம் சந்தனமரத்தினுல் எவ்வளவு நன்மை அடைந்திருக்கிறது என்பது வெளியாகிறது. 1911-12-ம் வருஷத்தில் விற்பனைக்குவந்த சந்தனக்கட்டை 2348-டன் 1-அந்தர் 94 ராத்தல், அதாவது 1910-ம் வருஷத்தை விட 143-டன் அதிகமானது. அவ்வளவு நிறையுள்ள சந்தனக்கட்டைகளும் விற்பனையாயின. அதனுல் மைஸூர் கவர்ன்மெண்டுக்கு 12,54,155 ரூபாய் வந்திருக்கிறது. முந்தின வருஷத்தை விட 1911-12 ல் 2,18,742 ரூபா அதிகம் கிடைத்திருக்கிறது. ஒரு டன் 534 ரூபாய் வீதம் விற்பனை ஆயிருக்கிறது. மைஸூரில் சந்தன மரத்தை கவர்ன்மெண்டைத் தவிர வேறொருவரும் பயிர் செய்யக்கூடாது.

Directors and Managers.

டிரெக்டர்களும் மானேஜர்களும்.—எல்லா பெரிய ஜாயின்ட்ஸ்டாக் கம்பெனிகளிலும் டிரெக்டர்களும், மானேஜரும் இருப்பது வழக்கம். டிரெக்டர்கள் நல்ல திடமனமுள்ளவர்களாயிருந்தாலும் அவர்கள் சேர்ந்த ஸங்கம் திறமையும் திடமும் வாய்ந்ததாக இருக்கவேண்டு மென்பதில்லை. மானேஜர் மாத்ரம் ரொம்ப மன உறுதியானவராய் இருக்கவேண்டும். ஏனென்றால் டிரெக்டர் போர்டுகள் மானேஜர்களுடைய காரியங்களில் ஒருவாறு அனுவசியமாய் தலையிட்டுக்கொள்வார்கள். அந்த போர்டார் தகுதியான மானேஜராகத் தெரிந்தெடுத்து நியமித்து அவருக்கு அதிகாரமும் பொறுப்பும் கொடுக்கவேண்டும். பிறகு அவருடைய கார்யத்தில் அனுவசியமாய் ப்ரவேசிக்காமலிருக்கவேண்டும்.

சில ஸமயங்களில் ஸாமர்த்யமான மானேஜராயிருந்தாலும் தம்முடைய மேலதிகாரியை குஷால் படுத்துவதில் கண்ணுயிருந்துகொண்டு கம்பெனியின் கார்யங்களை வழ வழப்பில் விட்டு விடுவார். அவர் அநேகருடைய விருப்பங்களையும், எண்ணங்களையும் அறிந்து, ஒவ்வொருவருடைய மனம் தாம் செய்யும் கார்யத்தால் எப்படி மாறுமோ என்பதை ஆலோசித்து, எல்லாருக்கும் பொதுவாய் நடக்க முயலுவதே பெரிய கார்யமாகி, தமக்கென்று திட்டமான வழியை அனுஸரிக்க முடியாதவராவார்.

மானேஜர் பிடிவாதக்காரராக இருந்தால் டிரெக்டர்கள் தமது கார்யங்களில் தலையிட்டுக்கொள்வது பிடிக்காமல் முரண்டு கொள்வார். டிரெக்டர்களும் அவரை நீக்க வழிதேடுவார்கள். மன உறுதியில்லாதவராக இருந்தால், அவர் டிரெக்டர்களால் தொந்தரை செய்யப்படுவார். ஸாதகம் செய்யக்கூடிய டிரெக்டர்களிடம் போய் அவர்களுக்கு ஸேவகம் செய்தாலும் பயனில்லாமல், கடைசியில வீட்டுக்குப் போக வேண்டியதுதான்.

விவேகிகள், இன்னவேலைக்கு ஸரியானவர் யாரென்று தெரிந்தெடுத்து அவரை அந்த வேலையில் அமர்த்தி அதிகாரமும் கொடுப்பார்கள். அப்பொழுதுதான் அவர் தமது வேலையைச் செய்ய இயலும். இப்படிச் செய்தால்தான் நல்ல வேலைக்காரரிடமிருந்து முழு வேலையும் வாங்கலாம்.

INDUSTRY.
கைத்தொழில்.

Bleaching Powder instead of Soap.

ஸோப்புக்குப் பதிலாக சுத்தஞ்செய்யும் பவுடர். டாக்டர் ஸேஷர் என்பவர் வேலைக்காரன் வேலை செய்தபிறகு கை சழுவுவதற்கு இப்போது உபயோகிக்கும் ஸோப்புக்குப் பதிலாக "ப்ளீச்சிங் பவுடர்" என்னும் சுத்திசெய்யும் பவுடரை உபயோகிக்கலாமென்று சொல்லுகிறார். ஈயம், வெள்ளைப்பாஷாணம், ரஸம், ஆண்டிமொனி, தகரம் இப்பேர்ப்பட்ட உலோகங்களைக் கையாடுவதில் விஷம்பட ஹேதுவிருக்கிறது. உலோக அணுக்கள் கைகளின்மேல் ஒட்டிக்கொண்டு சாப்பிடும் போதாவது சுருட்டுக் குடிக்கும் போதாவது வாயினுள் சென்று விஷமாகலாம். கையினிடத்தேயிருந்து இவ்விஷத்தை நீக்குவது அல்பமான் காரியமல்ல. எல்லா கேஸ்களிலும் ஸோப்பு லோக அணுக்களை நீக்காது. ஆனாலோ "ப்ளீசிங் பவுடர்" அவைகளை கண்டிப்பாய் நீக்கும். அதை உபயோகிப்பதில் ஒருவிதமான அபாயமும் கிடையாது. எல்லாவிதத்திலும் ஸோப்பைக்காட்டிலும் சிரேஷ்டமானது.

A New Silk Worm.

கருமுத்துத் தரும் ஒரு பூச்சி.—டாக்டர் பெஞ்சமன் எச். க்ரே என்பவர், கடலில் பின்னாவென்னும் ஒருவிதப் பட்டுப்பூச்சிகளிருக்கின்றன வென்றும், அப்பூச்சிகளில் பட்டு நூல்களிருப்பதோடு மிகுதியாகக் கருமுத்துக்களிருக்கின்றன வென்றுங் கூறுகிறார். ஸராஸரியாக ஐந்து பூச்சிகளொன்றில் ஒரு கருமுத்திருக்கிறதாம்.

Sugarcane Mills.

கருப்பாலைகள்.— நான்கு கரும்பாலைகள் வாங்க மைஸூர் கவர்ன்மெண்டார் இருபத்தையாயிரம் ரூபாய் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். தொழில்களைப்பற்றியும், வ்யாபாரத்தைப்பற்றியும் மைஸூர் கவர்ன்மெண்டுக்கு விசேஷ யோசனை சொல்பவராகிய மிஸ்டர் சாட்டர்டனால் குறிப்பிடப்படும் 3 இடங்களில் மேற்படி ஆலைகள் ஸ்தாபிக்கப்படும். தசராப் பொருட்காட்சியில் ஆஜராயிருந்த இரண்டு ஆலைகளல்லாமல் இன்னொன்றும் வாங்கப்படும்.

Bangle Making.

வளையல்கள் செய்தல்.—
சில வருஷங்களாய் தென் ஆற்காடு, தஞ்சாவூர், திருநெல்வேலி ஜில்லாக்களில் சவர்ன்மெண்டாரால் சங்கு குளித்தல் நடத்தப்பட்டு வருகிறது. சங்கு வளையல்கள் செய்யும் கைத்தொழிலை உண்டுபண்ண வேண்டுமென்று ரெவினியூ டிபார்ட்டுமெண்டின் ப்ரேரணையின்பேரில் கவர்ன்மெண்டார் உத்தரவு ஒன்றுபிறப்பிக்கப்பட்டிருக்கிறது. கடலில் மூழ்கி முத்துக்குளித்தலில் நன்றாய்த் தேர்ந்தவர்களாகிய அராபியரில் 20-பேர்களை வரவழைக்கவும், அப்படித் தருவித்துக் கொடுப்பதற்கு ஆளுக்கு ரூபாய் செலவுக்காக ரூபாய் 300 செலவு செய்யவும், அடுத்த 1912-1913-ம் வருஷத்தில் சங்கு குளித்தலை நடத்த ரூபாய் 12,000 மும் ஸாங்க்ஷன் செய்திருக்கிறார்கள். சங்கு குளித்தல் விஷயமாய் 1911-12-ம் வருஷத்து ரிபோர்ட்டில் மிஸ்டர் ஜே. ஹார்நெல் என்பவர் பழைய காலத்தில் இருந்து பிற்காலத்தில் மறைந்துபோன ஒரு தொழிலைப்பற்றி எழுதுகிறார்:—"டாக்கா நகரில் சங்கு வளையல்கள் செய்யப்படும் தொழிற்சாலைகளில் உடைந்த துண்டுகளை எறிந்து விடுகிறார்கள். இவை போன்றவாளால் அறுக்கப்பட்ட துண்டுகளை திருநெல்வேலி ஜில்லாவில் மூன்று இடங்களில் நான் கண்டெடுத்தேன். அநேக நூற்றாண்டுகளுக்கு முன் தாம்ரபர்ணி நதியின் ஸங்கமுகத்தில் செழிப்புற்று விளங்கிய கொற்கை நகர் மிருந்த இடத்தில் புராதனமான குப்பைக் குவியல்களில் மேற்சொன்ன துண்டுகளை மிகுதியாய்க் கண்டேன். தூத்துக்குடியிலும் பழைய சாயலிலும் தொழிற்சாலைகளில் உடைந்தெறயப்பட்ட துண்டுகள் கண்டெடுக்கப்படுகின்றன.

13-ம் நூற்றாண்டில் மார்கோ போலே என்ற ப்ரயாணியால் இந்த பழைய காயல் என்ற ஊர் (கேயல்) என்று வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது சங்கு வளையல் செய்யும் தொழில் இவ்விடங்களில் இல்லாமலிருந்தபோதிலும் முற்காலத்தில் மிகுதியாய் நடந்ததென்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஏனென்றால் ஏராளமான ஜனங்கள் அத்தொழிலைச் செய்திருந்தாலொழிய 1500 வருஷங்கள் கழித்து அவர்களால் எறியப்பட்ட துண்டுகள் அகப்படுவது அரிதாயிருக்கும். இத்தொழிலை மறுபடியும் ஏற்படுத்தவேண்டுமென்று கவர்ன்மெண்டார் பிறப்பித்த உத்தரவு இந்த ஜில்லாவில் முற்காலத்திலும் இந்த தொழில் நடந்ததற்குப் பொருத்தமாயிருக்கிறது.

ECONOMICS.
பொருளாதாரம்.

Literacy in India.

இந்தியாவில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். இந்தியா முழுவதிலும் பதினாயிரத்தில் .95. ஆண்களும், 10 ஸ்திரீகளுந்தான் எழுதப்படிக்க முடியும். முக்யமான ப்ரிட்டிஷ் மகாணங்களில் பம்பாய் ராஜதானி முதன்மையாக இருக்கிறது. அதில்தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் அதிகம். ஐக்ய மகாணங்கள் கடைசியானவை. அதாவது எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் மிகவும் குறைவு. சென்னை ராஜதானியில் கொச்சையான இங்கிலீஷ் அநேக இடங்களில் பேசப்படுகிறது.

Free Trade and Protection.

ஸ்வயேச்சை வ்யாபாரமும், காப்பு வரியும்.—ஒரு தேசத்து வ்யாபாரம் நல்ல ஸ்திதியில் இருப்பதற்கு காப்பு வரிகள் போடவேண்டுமா போடவேண்டாமா என்று அநேகர் தர்க்கித்து வருகிறார்கள். இதன் விஷயமாய் ஒரு நிருபர் எழுதுகிறார்:— அன்ய தேசத்து வ்யாபாரிகள் தங்கள் தேசத்தில் அதிகப் பணச் செலவின்றி செய்து முடிக்கும் ஸாமான்களை இந்த தேசத்தில் கொண்டுவந்து விற்றால், கைத்தொழிலும் வ்யாபாரமும் நல்ல ஸ்திதியில் இல்லாத இந்த தேசத்தில் அன்ய வ்யாபாரிகளுக்கு நல்ல லாபம் வரும். நம்முடைய தேசத்திலுள்ள வ்யாபாரச் சரக்குகளை அன்யர்கள்போல் அவ்வளவு மலிவாகச் செய்ய இன்னம் நமக்கு வஸதிகள் ஏற்படாததனால் நாம் நமது சரக்குகளை அதிக விலைக்கே விற்க வேண்டியிருக்கிறது. ஆகையால் அன்யர்கள் நம்முடன் போட்டி போட்டு நம்முடைய வ்யாபாரத்தைக் கெடுக்காமலிருக்கும்படி அவர்கள் சரக்கின் மேல் வரிபோடுகிறதா அல்லது வரி போடாமல் அவரவர்கள் தங்களிஷ்டப்படி வ்யாபாரம் செய்யலாமா என்பது தர்க்கிக்கப்படும் விஷயம். எல்லா தேசங்களுக்கும் ஸ்வயேச்சையான வ்யாபாரம் தகுதியானதென்று எண்ணியிருந்தார்கள். இப்பொழுது பலர் அதை மறுக்கிறார்கள். சில ஸந்தர்ப்பங்களில் காப்பு வரி ந்யாயமானதென்றே எண்ணுகிறார்கள்.

கைத்தொழிலிலும், வ்யாபாரத்திலும் பின்னடைந்திருக்கும் தேசங்களுக்கு காப்பு வரி எப்போதும் ச்லாக்கியமானதென்று சொல்லமுடியாது. அநேக ஸமயங்களில், காப்பு வரியானது வ்யாபாரத்தையும், கைத்தொழிலையும் இன்னம் ஹீனஸ்திதிக்குக் கொண்டுவந்துவிடும். சில ஸமயங்களில் ஸ்வயேச்சையான வ்யாபாரம் தேச க்ஷேமத்துக்கு நல்லதாகவும் இருக்கலாம்.

ஆனால் மொத்தத்தில் பேசும்போது காப்பு வரியே ச்லாக்கியமானதென்று சொல்லவேண்டியிருக்கிறது. அமெரிக்காவிலுள்ள ஐக்யமாகாணங்களிலும், ஐரோப்பாவிலுள்ள அநேக தேசங்களிலும், ப்ரிட்டிஷ் தன்னரசு நாடுகளிலும் காப்புவரியே அனுஷ்டிக்கப்படுகிறது. இங்கிலாந்தில் ஸ்வயேச்சையான வ்யாபாரம் நடந்தாலும் இந்தியாவில் அது பொருத்தமானதல்ல. இந்த தேசத்துக்குக் காப்புவரி வேண்டுமா, வேண்டாமா என்பதை இந்தியா கவர்ன்மெண்டார் ஸமயோசிதமாக தீர்மானிக்கவேண்டும்.

Emigrants to Canada.

கானடா தேசத்திற்குப் பிழைக்கச் செல்பவர்கள்.—சென்ற வருஷத்தில் கானடா தேசத்தில் 700 ஜப்பானியர் தலைவரிகூட இல்லாது குடியேறியிருக்கிறார்களென்றும், ஆயிரக்கணக்காக சீனர்கள் வந்திருக்கிறார்களென்றும், ஹிந்துக்கள் மாத்திரம் ஹிம்ஸிக்கப்படுகிறார்களென்றும், இதுபற்றி லார்ட் க்ரூவும் மிஸ்டர் ஹார்கோர்ட்டும் விவரமாக விசாரணை செய்து வருகிறார்களென்றும், மான்செஸ்டர் கார்டியனென்னும் பத்ரிகைக்கு அதன் நிருபரொருவர் எழுதியிருக்கிறார்.

Drinking.

மதுக்குடி.—இந்தியாவிலே மதுக்குடி வரவர அதிகரிக்கிறது. இதைப்பற்றித் தற்போது இந்திய ஜனோபகாரிகள் அனேகர் மிகவும் கவலைப்படுகிறார்கள். இவர்கள் சிலநாட்களுக்கு முன்னே இந்த விஷயமாய் இந்திய மந்திரியாரைக் கண்டு பேசும்படி சில ப்ரபுக்களை ப்ரதிநிதிகளாய் அனுப்பினார்கள். அவர்கள் குடிவெறி யதிகரிப்பைப் பற்றி மந்திரியார்க்குப் பல விவரங்களை யெடுத்துக்காட்டினார்கள். சென்ற 11–வருஷங்களிலே வங்காளத்தில் நூற்றுக்கு 24 வீதமும், பஞ்சாபிலே நூற்றுக்கு 120 வீதமும, சென்னை ப்ரதேசத்திலே நூற்றுக்கு 120 வீதமும், பம்பாய் ப்ரதேசத்திலே நூற்றுக்கு 90 வீதமுங் குடிவெறி அதிகமாயிருக்கிறது. இதைப்பற்றிய அரசிறையும் இந்தக்காலத்திலே முன்னிலும் ரொம்ப அதிகரித்திருக்கிறதாகக் கணக்குக்காட்டி யிருக்கிறார்கள்.

CO-OPERATION.
கோவாபரேஷன்.

Co-operative Credit Societies.

ஐக்யநாணயச்சங்கங்கள்.— இவைகளைப்பற்றி சுதேசமித்திரனில் போலகம் வெங்கட்டராம அய்யர் எழுதுகிறார்:—இந்த பாங்கிகளில் 100-க்கு ஒன்பது வட்டிக்குக் குறையாமல் விவஸாயிகளுக்கு உதவிபுரிகிறார்கள். இது கிராம வட்டியையும் சௌகார்கள் அடமாய் வாங்கும் தவணை வட்டியையும் காட்டிலும் லாபந்தான். ஆனால் இந்த ஒன்பது வட்டியை விவஸாயிகள் நன்மை அடைய இன்னும் குறைக்கவேண்டுமென்பது எனது அபிப்பிராயம். விவஸாயத்தில் எவ்வளவோ லாபம் ஸரிவர நடத்திப் பெறக்கூடுமானாலும் தற்காலம் நடக்கிறபடி விவஸாயத்தில் ஸாதாரணமாய் 100-க்கு வருஷத்துக்கு ஆறு வட்டிகூடக் கட்டுவதில்லை யென்று விவஸாயத்தில் பாடுபடும் நண்பர் ஒருவர் என்னிடத்தில் சொல்லியிருக்கிறார். இது கிட்டத்தட்ட ஸரியென்றே வைத்துக்கொள்ளலாம். ஆகையினால் விவஸாயிகளுக்குக் கடன் ஐந்துவட்டிக்கு மேல் அதிகமில்லாமல் இருக்கவேண்டும். அமெரிக்காவில் 100-க்கு இரண்டு வட்டிக்கு பாங்கிகளில் பணம் சேருவதாகவும், இங்கிலாந்தில் ஒரு வட்டி போதுமென்று பாங்கியில் பணம் போடுவதாகவும் இருக்க, நமது குடிகளுக்கு மூன்று முதல் ஐந்து வரையில் வட்டிக்குக் கொடுப்பது அவ்வளவு பெரிய விஷயமல்ல.

அயர்லாந்தில் விவஸாய கோ-ஆபரேடிவ் ஸொஸைடிகள் 150-க்கு மேல் இருக்கின்றனவாம். அவைகளின் லேவாதேவி ஒரு வருஷத்தில் 1,24,720 பவுனும். இம்மாதிரி ஸொஸைடி கிட்டத்தட்ட ஒவ்வொரு க்ராமத்திலும் ஒவ்வொன்று இருக்கிறதாம். இந்த ஸொஸைடிகளில் சிலர் செய்யும் வேலை மிகவும் வியக்கத்தக்கது. சிலர் பெரிய ஸ்டோர்கள் கட்டி தங்களது மெம்பர்களின் தான்யத்தைச் சேகரித்து வைககிறார்கள். இன்னும் சிலர் விவஸாய நடவடிக்கைகளுக்கு வேண்டிய மிகவும் விலையான யந்திரங்களை வாங்கி நண்பர்களுக்குக் வாடகைக்கு விடுகிறார்கள். இன்னும் பலவகை வியாபாரங்களும் செய்கிறார்கள்.

Agricultural Co-operation.

விவஸாய கோவாபரேஷன்.—இந்த சங்கத்தார்செய்யக்கூடிய காரியங்கள் என்னென்னவென்று கிருஷிகன் பத்ரிகை எழுதியிருக்கிறது:—

(1) மெம்பர்களில் தெரிந்தெடுத்த சிலரைக் கொண்டு விவஸாய இலாகா உத்தியோகஸ்தர்களால் பரீக்ஷித்துத் தெரிவிக்கப்பட்ட நூதன பயிர்களை ஸாகுபடி செய்யவும் நூதன முறைகளை அநுஷ்டிக்கவும் ஏற்பாடு செய்வது.

(2) இப்படி ஸாகுபடி செய்த நூதன பயிர்களைப் பற்றிய விவரங்களை மற்றவர்களுக்குத் தெரியும் விதமாய்ப் பத்திரிகைகள் மூலமாய் வெளியிடல்.

(3) சங்கத்தின் மெம்பர்களின் உபயோகத்துக்காக கரும்பாலை, இரும்புக் கலப்பைகள், பல்மரம் முதலான விவஸாயக் கருவிகளைத் தருவித்து மெம்பர்களுக்கு விலைக்குக் கொடுத்தல்.

(4) மருக்களைந்து தெரிந்தெடுத்த நல்ல விதை தினுஸுகளைத் தருவித்து மெம்பர்களுக்கு விலைக்குக் கொடுத்தல்.

(5) அயலிடங்களிலிருந்து மீன் எரு, பிண்ணாக்கு, வெடியுப்பு எரு முதலிய எருக்களைத் தருவித்து மெம்பர்களுக்கு விலைக்குக் கொடுத்தல்.

(6) விவஸாய அபிவ்ருத்தியைப்பற்றிப் பிரசுரமாகும் பத்திரிகைகளையும் புஸ்தகங்களையும் வாங்கி மெம்பர்கள் வாசிக்கும்படி ஒவ்வொருவருக்கும் முறையே அனுப்புதல்.

(7) கிராமத்திலுள்ள கால்நடைகள் அபிவ்ருத்தியடைவதற்காக நல்ல ஜாதி மாப்பிள்ளைக் காளையொன்று விலைக்கு வாங்கி வைத்துக்கொள்ளுதல்.

(8) நல்ல ஜாதிப் பசு ஒன்று வாங்கி, அதை நல்ல ஜாதிக்காளைக்கொண்டு தாவவிட்டு, அதில் பிறக்கும், கன்றுகளுக்குக் கணக்கு ஏற்படுத்தி, விவரங்கள் பதிந்து வைத்து, இவ்விதமாக அந்த உயர்ந்த ஜாதிக் கால்நடைகளை வர்க்க வ்ருத்திசெய்தல்.

(9) சங்கத்தின் மெம்பர்களின் உபயோகத்துக்காகக் கால்நடை மேய்ச்சல் நிலங்களை வேலியிட்டு பந்தோபஸ்து செய்து புல்வளர்த்தல்.

(10) சங்கத்தின் மெம்பர்களின் குரும்பாடுகள் வர்க்கவ்ருத்தியாவதற்கும், கம்பளி ரோமம் அபிவ்ருத்தியாவதற்கும், உயர்ந்த ஜாதியைச் சேர்ந்த ஆட்டுக்கடாக்களை விலைக்கு வாங்கி ஆட்டுக்கிடைகளில் கலக்கவிடுதல்.

(11) சங்கத்தின் மெம்பர்கள் ஸாகுபடி செய்யும் பயிர்களை கால்நடைகள் சேதப்படுத்தாமல் காக்க காவற்காரரை நியமித்துக்கொள்ளல்.

(12) சங்கத்தின் மெம்பர்களின் விளைபொருள்களை லாபகரமான விதமாய் விற்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தல்.

(13) கால்நடை வியாதிகளையும் பயிர்களுக்குண்டாகும் நோய் நொடிகளையும் நிவர்த்திக்க அவச்யமான சிகிச்சை தேடுதல்.

BANKING.

பாங்கி வ்யாபாரம்.

Banking Progress in England.

இங்கிலாந்தில் பாங்கிகளின் அபிவ்ருத்தி.—ஸமீபத்தில் இங்கிலாந்தின் ப்ரதம மந்திரியாகிய மிஸ்டர் ஆஸ்க்வித் சொன்னதாவது:—ஸுமார் 40 வருஷங்களுக்குமுன் இங்கிலாந்திலுள்ள எல்லா பாங்கிகளின் மொத்த லேவாதேவி 7,500 கோடி ரூபாயிருந்தது. கடைசி இரண்டு வருஷத்திலோ 21,000 கோடி ரூபா யாகிவிட்டது. இந்த 40 வருஷகாலத்தில் டிப்பாஸிட்டுகளும் ஸுமார் 750 கோடி ரூபாய் அதிகரித்திருக்கின்றன. பாங்கிகளும் மூவாயிரத்திலிருந்து எண்ணாயிரத்து ஐநூருக ஆகியிருக்கின்றன.

Building for a Co-operative Bank.

கோ-ஆபரேடிவ் பாங்கிக்குக் கட்டிடம்.—செங்கல்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூக்கா உத்தரநல்லூர் கோ-ஆபரேடிவ் பாங்கிக்கு ஓர் ஆபீஸ் கட்டிடம் கட்ட திவான்பகதூர் எல். டி. ஸ்வாமிக்கண்ணு பிள்ளை ஸமீபத்தில் அஸ்திவாரக்கல் நட்டார். கட்டிடம் இரண்டு மாடிகளை உடையதாயிருக்கும். சென்னை மாகாணத்திலுள்ள ஐக்கிய நாணய க்ராம பாங்கிகளில் திருச்சிருப்பள்ளி ஜில்லா லால்குடியிலுள்ளதும், செங்கல்பட்டு ஜில்லா உத்தரநல்லூரிலுள்ளதுந்தான் பெரியவை. லால்குடி பாங்கிச்கு ஒரு கட்டிடத்தை விலைக்கு வாங்கிவிட்டார்கள். உத்தரநல்லூர் கட்டிடம் வேலை முடிந்தபிறகு, வழக்கமாயிருக்கவேண்டிய தஸ்தவேஜி அறை முதலியவற்ருேடு ஒரு புஸ்தகசாலையும் ஒரு ரீடிங்கு ரூம் உள்ளதாயிருக்கும்.

Banking Legislation.

பாங்கி விஷயமான சட்ட நிரூபணம்.—இந்தியா கவர்ன்மெண்டில் வர்த்தகம் கைத்தொழில் டிபார்ட்மெண்டுக்கு ஸெக்ரிடரியாகிய ஆனரபில் மிஸ்டர் எந்தோவனும் அப்பர் இந்தியா (வட இந்தியா) சேம்பர் ஆப் காமர்ஸ் என்னும் வர்த்தக ஸங்கத்து மெம்பர்களும், ஸமீபத்தில் ஒன்றுகூடி பேசிக்கொண்டார்கள். அந்த ஸம்பாஷணையில் பேசப்பட்ட விஷயங்களில் பாங்கிகள் ஏற்படுத்துவதையும், நடத்துவதையும் ஒழுங்குப்படுத்த முடியுமா என்பதைப் பற்றிப் பேசினூர்கள்.

பாங்கி விஷயமாய் சட்டம் ஏற்படவேண்டு மென்பது மெம்பர்களின் இஷ்டமா? அப்படியானல், இப்பொழுதுள்ள கம்பெனி மசோதாவில் இந்த சட்டத்தைச் சேர்த்து விடலாமா? அல்லது தனியாக பாங்கி வ்யாபார ஆக்ட் ஒன்று வேண்டுமா என்று மிஸ்டர் எந்தோவன் கேட்டார். வந்திருந்த மெம்பர்கள், பாங்கி விஷயமாய் சட்டம் ஏற்படுத்துவது ரொம்ப அவசிய மென்றும், அப்பேர்ப்பட்ட சட்டம் சீக்ரம் வேண்டுமாகையால், கம்பெனி ஆக்டில் மாறுதல் ஏற்படுத்தும் ஸந்தர்ப்பத்தை ஒட்டி, பாங்கிகளை மேம்பார்வை யிடுவதற்கு வேண்டிய நிபந்தனைகளை ஷை ஆக்டில் சேர்த்துவிடலாம் என்றும் ஒரே அபிப்ராயமாய்ச் சொன்னூர்கள்.

அதன்மேல் மிஸ்டர் எந்தோவன்,

(1) பாங்கி வ்யாபாரத்தில் மற்ற வ்யாபாரங்கள் சேரும்படி விடலாமா?

(2) ஒரு குறித்த காலத்துச்குள் மூலதனத்தில் குறிப்பிட்ட பாகம் பங்குகள் எடுத்துக்கொண்டால் தான் பாங்கிகளை ரிஜிஸ்டர் செய்யலாம் என்று நிபந்தனை ஏற்படுத்தலாமா?

(3) "பாங்கி" என்ற பெயரை இன்னூர்தான் உபயோகப்படுத்தலாம் என்று சட்டம் ஏற்படுத்தவேண்டுமா?

(4) பாங்கிக் கம்பெனியார் கொடுக்கவேண்டிய பணத்துச்குத் தக்கபடி மூலதனமும் ரிஸர்வு பண்டும் சேர்ந்து நூற்றுக்கு இவ்வளவு என்று ஒரு குறித்த அளவு ஏற்படவேண்டுமென்று கல்கத்தாவில் சிலர் சொன்னூர்கள். இது மெம்பர்களுக்குப் பிடித்ததா?

என்பவைகளைப்பற்றி மிஸ்டர் எந்தோவன் மெம்பர்களின் அபிப்ராயத்தைக் கேட்டார். இவைகளைப்பற்றிக் கொஞ்சம் தர்க்கம் நடந்ததின்பேரில் மிஸ்டர் எந்தோவன் கேட்ட கேள்விகளுக்குப் பின் வருமாறு பதில் சொன்னூர்கள்.

(1) பாங்கிகள் வேறு வ்யாபாரங்களோடு ஸம்பந்தப்பட்டாவது அவைகளுச்கு உள்பட்டாவது இருக்கக் கூடாது.

(2) ஒரு குறித்த காலத்துச்குள் மூலதனத்தில் ஒரு குறிப்பிட்ட பாகம் பங்குகள் எடுத்துக்கொள்ளப் படவேண்டும்.

(3) பாங்கி என்ற பெயரை வர்த்தகர்கள் உபயோகப்படுத்துவது ஸம்பந்தமாய் தக்க விதிகள் ஏற்படவேண்டும்.

(4) மூலதனமும் ரிஸர்வ் பணமும் சேர்ந்து பாங்கி கொடுக்கவேண்டிய பணத்துக்கு ஒரு அளவு ஆகிறவரையில் டிவிடெண்டு பிரித்துக் கொடுக்கக் கூடாது, என்ருர்கள்,

INSURANCE.
இன்ஷ்யூரென்ஸ்.

Cattle Insurance.

கால்நடை இன்ஷ்யூரேன்ஸ்.—நம் நாட்டில் மாடுகளின் முக்யாம்சத்தை எடுத்துச் சொல்ல வேண்டியதில்லை. பசுக்களை "கோமாதா" என்று வணங்குகிறோம். குடியானவனுக்கு ஐசுவரியம் அவன் ஆடு மாடுகளே. மாடு ஒன்று ஏதாவது ஒரு ஸமயத்தில் செத்தால் குடியானவன் மிக வருத்தத்தையும் நஷ்டத்தையு மடைகிறான். இப்படி யிருக்க, நம் நாட்டில் எவ்வளவோ லைப் இன்ஷியூரென்ஸ் கம்பெனிகளிருந்தும் ஒருவராவது மாடுகளை இன்ஷியூர் செய்யும் கம்பெனிகள் ஏற்படுத்தினாரில்லை. இப்பொழுது கல்யாணம், இழவு, படிப்பு, நெருப்பால் நேரும் நஷ்டத்துக்கு இன்ஷ்யூரென்ஸ் இன்னும் எத்தனையோ விதச் கம்பெனிகளிருக்கின்றன. இவைகள் கால் நடை இன்ஷியூரென்ஸைப்பற்றியும் யோசிக்க வேண்டும் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

Some Hints for Insurance Agents.

இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகளுக்கு வேண்டிய சில குறிப்புகள்.

1. ஒவ்வொரு ஏஜெண்டும் தம்முடைய கம்பெனியின் ஆபீஸ் விஷயங்களை நன்றாய் அறிந்திருப்பதோடு தம்முடைய கம்பெனியில் சேருவதால் ஏற்படும் ஸௌகர்யங்களெல்லாவற்றையும் நன்றாய் அறிந்திருக்கவேண்டும். தமது கம்பெனியிலுள்ள ஸாதகங்களை ஸரிவர எடுத்துச் சொல்லத் திறமை வாய்ந்தவராயிருக்கவேண்டும்.

2. ஏஜெண்டும் தம்மையும் இன்ஷியூர் செய்திருக்கவேண்டும். அப்படி இன்ஷ்யூர் செய்தால்தான் பிறரை இன்ஷ்யூர் செய்யுங்கள் என்று தைரியமாய்ச் சொல்லலாம்.

3. ஏஜெண்டு வெளியில் செல்லும் போதெல்லாம் இன்ஷ்யூரென்ஸ் விஷயமான பேபர்களை தமது பாக்கெட்டில் வைத்திருக்கவேண்டும். அவருடைய ஆபீஸிலும் மெஜையின் ஒரு ட்ராயரில் இன்ஷ்யூரென்ஸ் விஷயமான பேர்கள் முதலியவைகளை வைத்திருக்கவேண்டும். ஏனென்றால் இப்படி வைத்திருந்தால் கேட்டவர்களுக்கு உடனே பதில் சொல்லலாம்.

4. ஒவ்வொரு நாளும் தவறாமல் ஐந்தாறுபேரைக் கண்டு இன்ஷ்யூரென்ஸ் விஷயமாகப்பேசி அவர்களுக்கு இன்ஷ்யூரென்ஸ் ப்ராஸ்பக்டஸ்களும் கொடுக்க வேண்டும்.

(5) இன்ஷ்யூர் செய்யும்படியாகத் தூண்டினால் யார் இன்ஷ்யூர் செய்வார்களென்று தோன்றுகிறதோ அப்படிப்பட்டவர்களில் பத்துப் பேரையாவது ஒவ்வொரு வாரமும் போய்ப்பார்த்து இன்ஷ்யூர் செய்யும் விஷயமாகப் பேசவேண்டும். இன்ஷ்யூரென்ஸ் கம்பெனிக்கு மாஸத்துக்குக் குறைந்த நாலு பாலிஸியாவது அனுப்புவதாகத் தீர்மானித்துக் கொண்டு கூடிய மட்டும் அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற ப்ரயத்னப்பட வேண்டும்.

6. யாரையாவது இன்ஷ்யூர் செய்யும்படி தூண்டி அவரும் இன்ஷ்யூர் செய்து விட்டால் இன்ஷ்யூர் செய்வார் என்று தோன்றும் அவருடைய ஸ்நேகிதர்களை எல்லாம் அவர் மூலமாக உடனே கண்டு பேச வேண்டும்.

7. ஏஜெண்டினுடைய பந்துக்களில் எவர்களிடம் செல்வாக்கு நடக்குமோ அவர்களை எல்லாம், அதிக தொகைக்கோ கொஞ்சந் தொகைக்கோ இன்ஷ்யூர் செய்யும்படி செய்யவேண்டும். அவர்களுடைய பந்துக்களையும் இன்ஷ்யூர் செய்யும்படி செய்யவேண்டும்.

8. பக்கத்து வீட்டுக்காரன் அஸௌக்யமாயிருந்தால் அவனுடன் பேசும்போது வாழ்நாளின் அநித்யத்தைப்பற்றி மெதுவாய்ப் பேச்சோடு பேச்சாய்ச் சொல்லி வைக்கவேண்டும் அவர் ஸௌக்யமாயிருந்தால், அவருடைய மிச்சமான பணத்தில் ஒரு பாகத்தை இன்ஷ்யூர் செய்வதற்கு உபயோகிக்கும்படி தூண்டவேண்டும். ஒரு மனுஷ்யன் எந்த ஸ்திதியிலிருந்தாலும் அவரை இன்ஷ்யூர் செய்யும்படி தூண்ட தகுந்த நியாயங்கள் எடுத்துக் காட்ட முடியும்.

9. இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகள் தாங்கள் ஜனங்களுக்கு இந்தத் தொழிலால் நன்மை செய்வதை எடுத்துக்காட்ட வேண்டும். இன்ன குடும்பம் இன்ஷ்யூர் செய்ததால் பின் காலத்தில் தரித்ர கஷ்டம் நேரிடாமல் தப்பிற்று என்று எடுத்துக்காட்ட வேண்டும்.

10. இன்ஷ்யூரென்ஸ் ஏஜெண்டுகள் தாங்கள் இருக்கும் பட்டணங்கள் சிறியவையாயிருப்பதால் அங்கே அதிக வேலை செய்வதற்கு இடமில்லை என்று எண்ணவேண்டாம். 5000 ஜனம் உள்ள ஒரு பட்டணத்தில் ஒரு ஏஜெண்டு சிலகாலம் ச்ரமப்பட்டாராம். அதன் பலனாக இப்பொழுது அவருடைய கம்பெனிக்கு வருஷா வருஷம் 15,000 ரூபா ப்ரீமியம் கிடைக்கிறதாம்.

EDUCATION.

வித்யா விஷயம்.

The Kala Bavan of Baroda.

பரோடா கலா பாவன்.—பரோடா ஸமஸ்தானத்தில் ஒருதொழில்கல்விச்சாலை மீகாரீஜாவினல் 1890-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டு நடந்துவருகிறது. இந்த கல்விச்சாலையில் அந்த ஸமஸ்தானத்து மாணவர்களேயன்றி ப்ரிட்டிஷ் இந்தியா மாணவர்களையும் எடுத்துக்கொள்ளுகிருர்கள். ஸமீபத்தில் ஒரு அமெரிக்கா தேசத்து ப்ரொபஸர் அதைப் போய்ப் பார்வையிட்டபோது, அமெரிக்காவிலிருப்பதுபோலவே இந்த கல்விச்சாலையும் நன்ருய் நடத்தப்படுகிறது என்ருராம்.

Technical Education.

தொழில் படிப்பு.—இதன் விஷயமாய் கர்னல் அட்கின்ஸனும் மிஸ்டர் டாஸனும் செய்திருக்கும் ரிபோர்ட்டில் தேசத்தில் தொழில்கள் ஏற்பட்ட பிறகு தொழிற் கல்விக்கு வஸதிகளை ஏற்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிருர்கள். இங்கிலாந்தில் தொழில்கள் 18-ம் நூற்ருண்டின் பின்பாகத்தில் ஆரம்பித்து நூறு வருஷத்தில் நல்ல ஸ்திதிக்கு வந்து ப்ரபலம் பெற்ற பிறகுதான் ஸ்கூல்களிலும் காலேஜ்களிலும் தொழில் சாஸ்த்ரக்கல்வி கற்பிக்கப்பட்டது. ப்ரான்ஸ், ஜர்மெனி, அமெரிக்கா முதலிய தேசங்களைப் பார்த்து இங்கிலாந்திலும் தொழில் சாஸ்த்ரக் கல்வி கற்பிக்க ஆரம்பித்தார்கள். ஆகையால் தொழில்கள் ஆரம்பத்திலும், தொழிற் கல்வி பிற்பாடும் இங்கிலாந்தில் உண்டாயின. மற்ற தேசங்களின் அனுபோகமோ அப்படியல்ல. அமெரிக்கா, ப்ரான்ஸ், ஆஸ்ட்ரியா, ஜர்மெனி, ஜப்பான் இத்தேசங்களில் தொழில்கள் ப்ரபலமாவதற்கு முன்னுலேயே தொழில் சாஸ்த்ரக் கல்விச்சாலைகள் ஸ்தாபிக்கப்பட்டன. அமெரிக்கா தேசத்தில் இப்படிப்பட்ட சாலைகள் 1824-ம் வருஷத்திலேயே ஸ்தாபிக்க ஆரம்பிக்கப்பட்டன. ப்ரான்ஸிலுள்ள பாரிஸ் பட்டணத்தில் 1795-ம் வருஷத்தில் பாலி டெக்னிக் என்ற ஸகல தொழிற் சாஸ்திரக் கல்விச்சாலை ஸ்தாபிக்கப்பட்டது. இம்மாதிரி ஸ்கூல் ஆஸ்ட்ரியாவின் முக்கிய பட்டணமாகிய வியன்னுவில் 1815-ம் வருஷத்திலேயே ஸ்தாபிக்கப்பட்டது. ஜர்மெனில் இப்படிப்பட்ட வித்யா சாலைகள் 18-ம் நூற்ருண்டுக் கடைசியிலும் 19-ம் நூற்ருண்டு ஆரம்பத்திலும் அனேக இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டன. புதிதாய் நாகரிகம் கற்று தொழில்களில் ஆச்சரியமான முன்னேற்றம் பெற்றிருக்கும் ஜப்பான் தேசமானது ஆரம்பத்தில் உயர்ந்த தொழில் சாஸ்த்ர ஸ்கூல்கள் ஸ்தாபித்தது. இத்தேசங்களெல்லாம் உயர்தரத் தொழில் சாஸ்த்ரக் கல்வி கற்பிப்பதால் தொழில்கள் அபிவ்ருத்தியாகுமென்று நம்பி இப்படிச்செய்தன. இங்கிலாந்தின் அனுபோகம் பல விசேஷ காரணங்களால் வேறு மாதிரியாயிருந்தது.

Pandits in Schools and Colleges.

ஸ்கூல்களிலும் காலேஜ்களிலுமுள்ள பண்டிதர்கள்.—கவர்ன்மெண்ட் ஸ்கூல்களிலும், காலேஜ்களிலும் தேச பாஷைகள் சொல்லிக் கொடுக்கும் பண்டிதர்களின் சம்பளம் உயர்த்தப்படவேண்டுமென்றும், அவர்களின் நிலைமை மேன்மேலும் வ்ருத்தியாவதற்குற்ற வழிகள் தேடப்படவேண்டுமென்றும் சென்னை ஸட்ட சபையில் சில மாதங்களுக்கு முன்னே ஆனரெபில் மிஸ்டர் கேசவப்பிள்ளை ஒரு தீர்மானங் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானத்தை உத்யோக மெம்பர்களும், உத்யோகஸ்தர்களல்லாத மெம்பர்களும் தாங்கிப் பேசினர்கள். தேச பாஷைகள் சொல்லிவைக்கும் பண்டிதர்களின் சம்பளத்தையும் மற்ற பாஷைகள் (ஆங்கிலம் நீங்கலாக) சொல்லிவைக்கும் வாத்யார்களின் சம்பளத்தையும் உயர்த்துவதைப் பற்றியும், பொதுவாய் அவர்களுடைய நிலைமையை வ்ருத்தி செய்வதற்குள்ள வழிகளைத் தேடுவதைப்பற்றியும், ப்ரேரணைகள் அனுப்பும்படி கவர்ன்மெண்டார் டிரெக்டர் ஆப் பப்ளிக் இன்ஸ்ட்ரக்ஷனைக் கேட்டுக் கொண்டார்கள். அதன்படி அனுப்பிய ப்ரேரணைகளை சென்னை கவர்ன்மெண்டார் அங்கீகரித்துவிட்டார்கள்.

அந்த ப்ரேரணைகளின்படி 20 பண்டிதர்களும் முன்ஷிகளும் நியமிக்கப்படுவார்கள்.

2 பேர் 80 ரூபா சம்பளத்தில் தொடங்கி இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவை 4 ரூபாயாக பத்து வருஷத்துக்குப் பிறகு 100 ரூ. வரையில் உயருவார்கள்.

		ரூ.	ரூ.	ரூ.
11 பேர்	...	60	3	75
,,	...	40	2	50
,,	...	30	2	40

எல்லாருக்கும் இரண்டு வருஷத்துக்கு ஒரு தடவைதான் சம்பள உயர்வு.

ECONOMIC PRODUCTS.

விலையுள்ள பொருள்கள்.

Imports of Hair in France.

ப்ரான்ஸில் ரோமம் இறக்குமதி.—ப்ரான்ஸில் சென்ற 17 வருஷமாக ரோம இறக்குமதி ரொம்ப அதிகரித்திருக்கிறது. 1894-ம் வருஷத்தில் $1\frac{1}{2}$ லக்ஷம் ராத்தல் ரோமம் இறக்குமதியாயிற்று. 1899-ல் 3-லக்ஷம் ராத்தல் வரையில் அதிகமாயிற்று. சென்ற வருஷம் வரையில் இறக்குமதி அதிகரித்துக் கொண்டே வந்தது. சென்ற வருஷம் பத்து லக்ஷம் ராத்தல் ரோமம் ப்ரான்ஸில் இறக்குமதியாயிற்று. இவ்வளவு ரோமமும் அநேகமாய் சீனு, ஜப்பான் தேசங்களிலிருந்துதான் வந்தது. இந்த ரோமத்தில் நாலில் ஒருபங்கை வேறு தேசங்களுக்கு அனுப்பி விட்டு மிகுதியை அந்த தேசத்திலே உபயோகிக்கிருர்கள். மயிர் வியாபாரம் என்ருல் நாம் அற்பம் என்று எண்ணுகிருேம். பாருங்கள், பிறர் காசு ஸம்பாதிக்கும் வழியை.

Banana Wine.

வாழைப்பழத்திலிருந்து செய்த சாராயம்.—அமெரிக்காவிலுள்ள பார்படோஸ் என்னும் தீவில் வாழைப்பழத்திலிருந்து சாராயம் செய்துவந்தார்கள் என்று ஒரு புஸ்தகத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"வாழைப்பழச்சாராயம் மிகவும் மதுரமானது. பழங்களை கனிந்தபிறகு மேல்தோலை உரித்துவிட்டு கொதிக்கிற தண்ணீரில் போட்டு குழைந்து போகும் படி மசிக்கவேண்டும். அதை அப்படியே ஒரு ராத்ரி வைத்திருந்து பிறகு வடிகட்டி குப்பிகளில் அடைத்து விடவேண்டும். ஒரு வாரம் வரையில் உபயோகப்படுத்தலாம். அது மிகவும் ருசியுள்ளதாக இருக்கிறது. அது அதிக வேகமுள்ளதால் அதை ஸ்வல்பமாகத்தான் குடிக்கவேண்டும்.

ஜமெய்காவில் வாழைப்பழச்சாராயம் செய்துவந்த விதம் பின்வருமாறு.—பத்துப்பன்னிரண்டு பெரிய பழத்தை எடுத்து நன்ருய்க் கழுவி ஒரு சிறிய பாத்ரத்தில் 2, 3 படி ஜலத்தை விட்டு அப்படியே வைத்திருந்தால் இரண்டுமணி நேரத்தில் புளித்துப் பொங்க ஆரம்பிக்கிறது. அப்புறம் நான்குமணி நேரத்தில் அது குடிக்கிறதற்குத் தகுதியான நிலைமைக்கு வந்து விடுகிறது. இது 24-முதல் 30-மணி வரையில் கெடாமல் இருக்கும். அந்த ப்ரதேசத்தில் ஜனங்கள் ஒவ்வொருநாள் காலையிலும் செய்துகொள்ளுகிருர்கள். அந்த பானம் மிகவும் குளிர்ச்சியாயும் இனிப்பாயும் இருக்கிறது."

இன்னொருவர் எழுதுவது.- இரண்டுமூன்று சீப்புப் பழங்களை சிறுசிறு துண்டுகளாக நறுக்கி மூன்றுபடி ஜலத்தில் ஊறவைத்தால் இரண்டு மூன்றுநாள் கழித்து நல்ல சாராயமாகிறது. முதலில் இனிமையான புளிப்பாக மாறுகிறது. சிலநாள் சென்ருல் நல்ல புளிப்பு ருசி ஏற்பட்டு அதன்மேல் இரண்டுநாள் சென்றபிறகு நல்ல காடியாகிறது.

India as the Home of Cotton.

இந்தியாவில் பருத்தி.—பருத்தித்தொழில் முதல் முதலில் இந்தியாவில்தான் உண்டாயிற்று என்று எல்லாரும் ஒப்புக்கொள்ளுகிருர்கள். வெகு காலந் தொட்டு, பருத்தி பயிரிடுதலும், நூல்நூற்று வஸ்த்ரம் நெய்தலும், இந்தியர்களுடைய கைத்தொழிலாயிருந்தன. வேதம், இதிகாஸம், புராணம் முதலிய ஸம்ஸ்க்ருத க்ரந்தங்களில் பருத்தி வஸ்த்ரங்களைப்பற்றி எழுதப்பட்டிருக்கிறது. பௌத்தமதம் பரவியிருந்த காலத்திலும் இந்தியாவிலுள்ள பருத்தி வஸ்த்ரங்கள் ப்ரஸித்தியடைந்திருந்தன. ஸுமார் 2,350 வருஷத்துக்குமுன்னல் ஹெரோடட்டஸ் என்னும் க்ரேக்கர், இந்தியர்கள் பருத்தி வஸ்த்ரம் உடுத்திக்கொள்வது வழக்கம், என்று எழுதியிருக்கிருர். "இந்தியர்களிடத்தில் ஒரு செடி இருக்கிறது. அதில் பழம் உண்டாவதற்கு பதிலாக மெல்லிய ரோமம் போன்ற வஸ்து உண்டாகிறது. அது ஆட்டுரோமத்தைவிட ரொம்ப நேர்த்தியாகவும், நல்லதாகவும் இருக்கிறது. அதிலிருந்து இந்தியர்கள் வஸ்த்ரம் செய்கிருர்கள்." என்று எழுதியிருக்கிருர்.

இன்னொருவர் 250-வருஷத்துக்குமுன் எழுதுவதாவது.—"வங்காளத்திலும், மொகலாய ராஜ்யத்திலும், வெண்மையான வஸ்த்ரங்கள் நெய்யப்படுகின்றன. சில வஸ்த்ரங்களை நாம் கையால் தொட்டால்கூட உணரமுடியாதபடி அவ்வளவு மெல்லியவையாயிருக்கின்றன. அவைகளிலுள்ள நூலை நாம் பார்க்கமுடியாது. ஸிகஞ் என்னும் இடத்தில் ஒருவித துணி நெய்கிருர்கள். அதை ஒருவன் உடுத்திக்கொண்டால், அவன் வஸத்ரம் உடுத்திக்கொண்டதாகவே தெரியாது". உண்மையில் இந்தியாவில் மிக மலிவானதும், நாணயமானதுமான துணிகள் நூறுவருஷத்துக்கு முன்னல் வரையில் செய்யப்பட்டு வந்தன. இப்பொழுதுதான் அந்தத் தொழில் நசித்துப் போயிருக்கிறது.

BUSINESS METHODS.

வ்யாபார முறைகள்.

Importance of Advertisements.

விளம்பரஞ்செய்வதின் அவச்யம்.—சில வ்யாபாரிகள் விளம்பரம் செய்வதில் கொஞ்சங்கூட நம்பிக்கையில்லாமலிருக்கிறார்கள். விளம்பரஞ்செய்வதினால் வீண் செலவுதானே என்றும் சொல்லுகிறார்கள். "நல்ல மாடாயிருந்தால் ஊரிலேயே விலைப்போகும்; ஆகையால் எங்கள் சரக்கு நல்லதாயிருந்தால் ஜனங்கள் தாங்களே வந்து வாங்கிக்கொண்டு போவார்கள்" என்று சொல்லுகிறார்கள். ஆனால், அவர்களிடத்தில் நல்ல சரக்கு இருக்கிறதென்று முதலில் ஒருவனுக்குத் தெரியவேண்டுமே! ஒருவனுக்காயினும் தெரிந்தால்தானே அவன் இந்தக் கடையில் இந்த சரக்கு நன்றாயிருக்கிறதென்று பிறருக்கும் சொல்லுவான். ஆகையால் அதிக ஆடம்பரமில்லாமல் எந்த வீழியிலாகிலும் விளம்பரஞ் செய்யவேண்டியது அவசியம். விளம்பரஞ்செய்தால் நல்ல வ்யாபாரம் நடக்கும் என்பதில் ஸந்தேகமில்லை. ஜாஸ்தி வ்யாபாரம் நடந்தால் ஜாஸ்திலாபமும் வருகிறது. ஆகவே ரூபாய்க்கு ஸ்வல்ப லாபம்வைத்து வ்யாபாரஞ்செய்தாலும் விளம்பரஞ்செய்தால் இதர கடைக்காரர்களைக்காட்டிலும் விளம்பரம் செய்பவனுக்குக் மொத்தத்தில் லாபம் ஜாஸ்தியாய்க் கிடைக்கிறது.

Business Methods.

வ்யாபார முறைகள்.—மிஸ்டர் முருகப்ப செட்டியார் பின் வருமாறு எழுதுகிறார்:—

நம் இந்தியர்களாற் செய்யப் பெறும் ஒவ்வொரு நடவடிக்கைகளும் அமுலுக்கு வந்த சிறிது நாட்களுக்குள்ளேயே மறைந்து விடுவதின் காரணம் யாதென யோசித்தால், நன்றாய் விளங்காமலிருக்கக் காரணமில்லை. நாம் ஒரு காரியத்தைச் செய்ய எத்தனிக்கும்பொழுது அதைச் செய்யும் ஆற்றல் நமக்கிருக்கிறதா? அதற்குப் போதுமான மூலதனம் நம்மிடமிருக்கிறதா? நமதனுபவத்திற்கும் ஸௌகர்யத்திற்கும் பொருத்த முடையதுதானா? காலதேசங்களுக் கிணக்கமுள்ளதா? என்ற கேள்விகளைத் தமக்குள் ஒரு முறைக்குப் பல முறையாக தீர்க்காலோசனை செய்துகொண்டு தொடங்குகிற கார்யமானது சீக்ரத்தில் கைகூடிவரும். அவ்விதம் செய்யாததாலன்றோ நம்மவருக்குக் கஷ்ட நஷ்டங்கள் வந்து இளைக்கிறார்கள்.

எந்த விஷயத்தைச் செய்ய முயன்றாலும், அதற்கு வேண்டியதான மூலதனம் முற்றிலும் ரொக்கமாகவே இருக்கவேண்டும். அதில் ஒரு பாகத்தை ஸகாய நிதியாக "ஸேவிங்ஸ்பாங்கி"யில் வைத்திருக்கவேண்டும். மற்ற பாகத்தைக் கொண்டே குறித்த காரியத்தை நடத்தி வரவேண்டும். வாங்குவதும் கொடுப்பதும் ரொக்கத்திற்கே நடத்தி வரவேண்டும். ஏனென்றால் "கடன் வாங்கிக் கடன் கொடுத்தவன் கெட்டான்" எனவும், "இட்ட கடன் பட்ட கடனுக்குதவாது" என்றும் பழமொழிகளுண்டல்லவா? எந்தக் காலத்திலும் எவ்வளவு லாபகரமான கார்யத்தைச் செய்வதாக இருந்தபோதிலும் அதன் மூலதனத்திற்கோ அல்லது அதில் ஒரு பாகத்திற்கோ "வட்டிக் கடன்" அல்லது "தவணைக்கடனாக"வாவது வாங்கி மூலதனம் வைத்தால் அந்தக் கார்யம் சிறிது காலத்திற்குள் கெட்டுவிடும். என்? கடன் கொடுத்தவனுக்கும் அந்தக் கடன் வாங்கினவனுக்கும் நித்ரை வரும். "வட்டிக்கோ" இரவிலும் பகலிலும் நித்ரை கிடையாது. ஓயாமல் நடந்துகொண்டே இருந்து கடன் வாங்கினவர் தாழவும், கடன் கொடுத்தவர் வாழவும், செய்து வருகிறதால் அதை இருவர்களும் முற்றிலும், கைவிடவேண்டும். அப்பொழுதுதான் வடடிக்குப் போக்கிட மின்றி தூங்கிக் கிடக்கும்.

சுருங்கச் சொல்லுமிடத்து, நம்மிந்தியர் ஒவ்வொருவரும் தத்தம் கையிலுள்ள, நகை, வீடு, விளைநிலம், பூமிகளாயுள்ளவை நிற்க, ரொக்கமாக வைத்திருக்கும் பணத்தில் மூன்றில் ஒரு பாகத்தை ஆபத் ஸகாய நிதியாக ஸேவிங்ஸ் பாங்கிகளிற் போட்டுவைத்தும், மீதியுள்ள இரண்டு பாகப் பணத்தை தாங்கள் ஒருவரிடத்தில் வட்டிக்கு ஆசைகொண்டு சிறிதும் கடன் கொடாமல் தங்கள் கைம்முதலுக்குத் தகுந்ததும் பொருத்த முடையதுமான வ்யாபாரமொன்றை முன் சொன்னவாறு தீர்க்காலோசனை செய்துகொண்டு, அதன்மேல் உத்தேசித்திருக்கும் வ்யாபாரத்தைத் தாங்களே ஸொந்தமாகக் கொள்முதலையும் விற்று முதலையும் கடன் வாங்காமலும் 'கடன்' கொடாமலும, ரொக்கச் செட்டாக ஸ்வல்ப லாபத்திற்கே விற்றுமுதல் செய்து வரவேண்டும். ஏனெனில் "கொண்டு கொண்டு விற்கக் கோடிகோடி லாபம்" என்பதும், "கட்டிவைத்து விற்பதும், கடிய லாபங் கூறலும் நஷ்டிவந்து கூடுதற்கு நல்ல மார்க்கமாகும்" என்பதும் முன்னோர் அனுபவ மொழிகளல்லவா?

FRAUDS AND FAKES.

மோசங்களும் பித்தலாட்டங்களும்.

Water and Canning of Fruits.

பழங்களை டப்பிகளில் அடைத்தலும், ஜலம் சேர்த்தலும்.--பழங்களை டப்பிகளில் அடைப்பதைப் பற்றி நமது பத்ரிகையில் ஏற்கனவே எழுதியிருக்கிறோம். பழங்களையும் காய்கறிகளையும் டப்பிகளில் அடைப்பதில் ஜலம் சேர்க்கக்கூடாதவைகளுக்கு ஜலம் சேர்த்தல் கலப்படம் செய்தல் என்ற குற்றமாகும் என்று அமெரிக்காவின் ஐக்ய மாகாணத்து விவஸாய டிபார்ட்மெண்டார் தெரிவித்திருக்கிறார்கள். உதாரணமாக, சீமைத் தக்காளிப்பழத்தை டப்பியில் அடைக்கும்போது கொஞ்சங்கூட ஜலம் உபயோகப்படுத்தக் கூடாது. பட்டாணிக்காய்களை டப்பியில் அடைக்கும்போது உண்டாகும் இடை வெளியை மூடப் போதுமான ஜலம் விடலாமே யன்றி அதிக ஜலம் விடக் கூடாது.

Counterfeit Currency Notes.

கள்ள கரன்ஸி நோட்டுகள்.--ரங்கூனிலும் பர்மாவைச் சேர்ந்த வேறு சில இடங்களிலும் திருட்டுத்தனமாய் அச்சிடப்பட்ட நோட்டுகள் அடிக்கடி கண்டு பிடிக்கப்பட்டு, சில குற்றவாளிகளும் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். கள்ளநோட்டுக்கும் உண்மையான நோட்டுக்கு முள்ள வித்யாஸத்தை ஸாதாரண ஜனங்கள் லகுவாய்த் தெரிந்துகொள்ள முடியாமலிருக்கிறது. இப்படி வெளிவரும் கள்ள நோட்டுகள், வெகுவாய் பத்து ரூபாய் நோட்டுகளாகவே யிருக்கின்றன. உண்மையான நோட்டிலுள்ள நீரெழுத்தைப்போல் அவ்வளவு சுத்தமாக கள்ள நோட்டுகளில் தெரியாவிட்டாலும், அதை அச்சிடுகிறவர்கள் தங்கள் ஸாமார்த்யத்தினால், அந்த நீரெழுத்துகள் நோட்டுகளின் பின்புறத்தில் ஒருவாறு தெரியும்படி செய்து விடுகிறார்கள். இப்படிப்பட்ட கள்ள நோட்டுகளை ரங்கூன் கரன்ஸி உத்யோகஸ்தர்கள் கண்டுபிடித்து போலீஸாருக்கும் பொது ஜனங்களுக்கும் அறிவித்திருக்கிறார்கள். தற்போது பத்து ரூபாய் நோட்டுகள், பர்மா, இந்தியா என்ற வித்யாஸமில்லாமல் இரண்டு தேசங்களிலும் செலாவணியாகும்படி கவர்ன்மெண்டார் செய்திருப்பதின் பலனானது இந்தியாவில் அதிக கள்ள நோட்டுகள் ஜனங்களுக்குள் பரவும்படி செய்துவிட்டதென்று பயொனியர் பத்ரிகை கூறுகிறது.

Adulterating Milk.

பாலில் ஜலம் கலத்தல்.—பாரிஸ் நகரத்தில் ஒரு பால்காரன் விற்றுவந்த பால் மிகவும் லேசாயும் ஜலம் கலந்தது போலுமிருந்தது. இதைப்பற்றி பலவாரங்களாக ஜனங்கள் புகார் செய்துவந்தார்கள். போலீஸார் அநேகம் தடவை அந்தப் பாலில் மாதிரி எடுத்துப்போய் பரிசோதித்ததில் ஒவ்வொரு தடவையும் அதிக ஜலம் கலந்திருக்கிறதென்று கண்டார்கள். இப்படி யிருந்தும் பால்காரன் தன்மேல் ஒரு பிசகும் இல்லையென்றும், வேண்டுமென்றால் போலீஸார் பால் கறக்குமிடத்துக்கு வந்து பரிசோதிக்கலாமென்றும் சொன்னான். அப்படியே இரண்டு போலீஸ் இன்ஸ்பெக்டர்கள் சென்று பார்த்தார்கள். பால் கறப்பதை கவனித்திருந்து கறந்ததும் பாலை எடுத்துக்கொண்டு போய் பரீக்ஷித்துப் பார்த்தார்கள். அப்பொழுதும் அது அதிக ஜலம் கலந்ததாகவே யிருந்தது. மறுபடியும் அநேகம் தடவை போய்ப்பார்த்தும் கறந்தபால் ஜலம் கலந்ததாகவேயிருந்தது. போலீஸார் ஒன்றும் தோன்றாமல் விழித்தார்கள். ஒரு தடவை அந்த இன்ஸ்பெக்டர்களில் ஒருவர் பால் கறப்பவன் பெருத்த சரீரமுள்ளவனாய் ஒரு கையால் பால் கறப்பதை கவனித்தார். அதோடு பால் பாத்திரம் நிரம்பிக் கொண்டு வரும்போது பால் கறப்பவன் இளைத்துக்கொண்டேவந்தான். இவைகளை கவனித்து உடனே அவர் அவனுடைய வேய்ஸ்ட் கோட்டை எடுத்து விடச்சொன்னார். அப்படி சட்டையைக் கழற்றியதில் இரண்டு ரப்பர் பைகளும் குழாய் ஏற்பாடும் தென்பட்டன. ஒரு பையில் காற்றும் மற்றொன்றில் ஜலமும் இருந்தன. இரண்டு பைகளுக்கும் ஸம்பந்த மேற்பட்டிருந்ததால் காற்றுப்பையை அமிழ்த்துவதினால் தண்ணீர்ப் பையிலிருந்து ஒரு குழாய் வழியாக பால் பாத்ரத்தில் ஜலம் பீச்சிக் கொண்டேயிருக்கும். அவன் பெருத்த சரீரமுள்ளவனாகக் காட்டிவந்ததால் இந்தக் காரியம் வெளியில் தெரியாமல் நடந்து வந்ததாம்.

MACHINERY AND INVENTION.

யந்த்ரங்களும் நூதன கற்பிதமும்.

Ink in the Fountain Pen.

பௌண்டன் பேனாவில் மை.—அமெரிக்காவிலுள்ள ந்யூயார்க்கில் ஒரு பௌண்டன் பென் செய்பவர் பௌண்டன் பேனாவில் ஒரு நூதன ஏற்பாடு செய்திருக்கிறார். தாம் செய்யும் பௌண்டன் பேனாக்களில் சிறிய பேனாவில் இரண்டு ஜன்னல்களும் பெரிய பேனாவில் மூன்று ஜன்னல்களும் வைத்திருக்கிறார். அவற்றின் வழியாக பேனாவில் எவ்வளவு மையிருக்கிறது என்று திட்டமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

Fish Preservation.

மீனை பாடஞ் செய்தல்.—மீன் சீக்ரம் கெட்டுப் போகும் வஸ்து. அதை வெகு தூரத்திற்கு அனுப்புவதானால் பனிச்சட்டியில் வைத்து அனுப்புவது வழக்கம். இப்பொழுது கரியமிலவாயுவினால் பாடம் செய்யக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இம்மாதிரி பாடம் செய்வதில் பனிக்கட்டிக்குச் செலவாகும் பணத்தில் எட்டில் ஒன்றுதான் பிடிக்கிறது. அதோடு கொஞ்சங்கூட நாற்றமின்றி மீன் சேகரம் செய்து வைக்கப்படுகிறது; பனிச்சட்டியினால் இதுமுடியாது. இப் புது மாதிரி இங்கிலாந்திலுள்ள செல்டன் ஹாமில் லாயராயிருக்கும் எச். டி. ரண்டாப் ஹெம்மிங் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் அந்தரங்கம் மீனில் உள்ள எல்லா வாயுவையும் வெளிப்படுத்துவதே; இதை எப்படிச் செய்வதென்றால், மீனை ஒரு குடத்தில் போட்டு அதற்குள் பலமாக கரியமில் வாயுவை உள் செலுத்துவதேயாம். ஸமீபத்தில் இம்மாதிரி பரீக்ஷைகள் நடந்து, பார்த்தவர்களுக்கெல்லாம் திருப்தியை உண்டாக்கிற்று. இப்புதிய முறையை ஐஸ்லாண்டு கவர்ன்மெண்டார் விலை கொடுத்து வாங்கப்போகிறார்களாம்

A Ploughing Machine.

உழும் யந்த்ரம்.—பம்பாய் ராஜதானியில் உழவு முதலான விவஸாயத் தொழில்களை நடத்துவதற்கு மாடுகளும், வேலைக்காரரும் அகப்படுவது அருமையாயிருப்பதால், யந்த்ரங்களின் உதவியைக்கொண்டு உழவு வேலையை நடப்பிப்பது நல்லதென்று பலர் யோசனை செய்கிறார்கள். நிலங்களை ஆழ உழுகிறதற்கு ஒரு யந்த்ரம் வரவழைக்கப்பட்டிருக்கிறது. இதைக் கொண்டு ஒரு நாளில் 8 ஏக்கர் நிலம் உழலாமென்றும், ஒரு ஏக்கருக்கு 17 ரூபா செலவு பிடிக்குமென்றும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தக் கலப்பைகள் விசேஷமாய் கரும்பு செய்யப்படுந் தோட்டங்களை ஆழ உழுகிறதற்கே உபயோகமாகுமாம். ஆயினும் ஸாதாரணமான எல்லா உழவுச்கும் உபயோகிப்பதற்கு ஹேதுவாய் அது இயற்றப்பட்டிருக்கிறதாம். பம்பாய் கவர்ன்மெண்டார் அவ்வித கலப்பைகளை க்ருஷிகர் உபயோகிக்கும்படி சிபார்சு செய்து வருகிறார்கள்.

Kapok Fibre Cleaning Machine.

இலவம் பஞ்சு சுத்தம் செய்யும் யந்த்ரம்.—இலவம் பஞ்சு சுத்தம் செய்வதற்காக யந்த்ரம் ஒன்று ஜர்மெனியில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. அதனால் இலவம் பஞ்சை விதை ஒன்று கூடயில்லாமல் சுத்தம் செய்து விற்பனைக்கு ஏற்ற பொருளாகச் செய்யலாம். இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகிற இலவம் பஞ்சை தகுந்த யந்திரம் கொண்டு சுத்தம் செய்யாததால் அதில் விதைகள் ரொம்ப இருக்கின்றன. இந்தப் புது யந்திரத்தில் சுத்தம் செய்தால் சரக்கு உயர்ந்ததாக இருக்குமாதலால் அதை வ்யாபாரிகளும் அதிக விலைகொடுத்து வாங்குவார்கள். மேலும் இந்தப் புது யந்த்ரத்தால் அதிகப் பஞ்சு சீக்ரத்தில் சுத்தம் செய்யலாம். ஆகையால் இந்த யந்த்ரத்துக்குப் போடும் முதலை சீக்ரமே எடுத்து விடலாம் என்று சொல்லப்படுகிறது.

இந்த யந்த்ரம் தென் அமெரிக்கா, ஜாவா, ஆப்ரிகா ஆசியா இந்த இடங்களில் ரொம்ப உபயோகப்பட்டு த்ருப்திகரமாயிருக்கிற தென்று சொல்லப்படுகிறது. இதன் விலை 1200 ரூபாயாகிறது. 10 மணிநேரத்தில் $1\frac{1}{3}$ முதல் 2 டன் பஞ்சை சுத்தம் செய்யும். அதற்கு 4-5 குதிரை பலமுள்ள எஞ்சின் வேண்டும். இது விஷயமாய் நிபுணர்கள் எழுதிய ரிபோர்ட்டுகளின்படி இந்த மெஷீன் மற்ற மெஷீன்களைவிட மூன்றில் இரண்டு பங்கு அதிக வேலை செய்கிறது. சரக்கும் ச்லாக்யமாயிருக்கிறது. அதற்குக் குறைந்த பலமுள்ள எஞ்சின் போதும். இவைகளை உத்தேசித்து இது மற்ற மெஷீன்களை விட மேலானதென்று சொல்லப்படுகிறது. யந்த்ரம் பூராவும் இரும்பால், செய்யப்பட்டிருக்கிறது. யந்திர ஏற்பாடு மிகவும் ஸாமான்யமாயும், ஸுலபமாயும் இருப்பதால், தேர்ந்த வேலையாளில்லாத இந்தியர்களுக்கு இந்த மெஷீன் ஸௌகர்யமானதே. இதைப் பற்றி இன்னம் விவரம் வேண்டுவோர் கல்கத்தாவிலுள்ள ஜர்மன் கான்ஸலேட்டுக்கு எழுதிக்கொள்ளவும்.

LAW.
சட்டம்.

Acquisition of Property in a Hindu Joint Family.

அவிபக்த குடும்பத்தில் ஸொத்து ஸம்பாதித்தல்.—பாகமாகாத ஒரு குடும்பத்திலுள்ள ஒருவர் தம பெயரால் ஒரு ஸொத்தை வாங்கினல் அவர் ஸ்வயார்ஜிதமாக ஸம்பாதித்தார் என்று ருஜுவானலொழிய, அந்த ஸொத்து, அந்த அவிபக்த குடும்பத்திற்காக அந்தக் குடும்பத்தின் ப்ரயோஜனத்தின் பொருட்டு வாங்கினதாக எண்ணப்படவேண்டியது.—7 பஞ்சாப் வார ரிபோர்ட். 497-ம் பக்கம்.

Joint Family Property.

அவிபக்த குடும்ப ஸொத்து:—ஒரு குடும்பத்துக்கு பிதுரார்ஜித ஸொத்து கொஞ்சமேனும் இல்லை. ஆனல், அந்தக் குடும்பத்திலுள்ள நபர்கள், ஒன்ருய் வஸித்து, ஒன்ருய் உழைத்து, தங்களுடைய வரும்படியை ஒன்ருய்ச் சேர்த்து, வந்தார்கள். சமையலும் ஒன்ருகவே இருந்தது. இப்படியிருந்தால் அவர்கள் ஸம்பாதித்த ஸொத்து அவிபக்த குடும்ப ஸொத்தாக இருக்கட்டுமென்று அவர்கள் எண்ணியிருந்ததாக நினைக்கப்படும். அந்த ஸொத்துக்கும் அவிபக்தகுடும்ப ஸொத்துக்குள்ள நிர்ப்பந்தங்கள் உண்டு. ஆகவே அந்தக் குடும்பத்திலுள்ள நபர்கள் எல்லாரும் அந்த ஸொத்தை பாகித்துக்கொள்ள பாத்யதையும் ஏற்படுகிறது.

வாதியினுடைய தகப்பனரும், அவருடைய சிற்றப்பன் பெரியப்பன்களும், அவர்களுடைய புத்ரர்களும் சேர்ந்து பிதுரார்ஜித ஸொத்தின் உதவியில்லாமல், வ்யாபாரம் நடத்தினர்கள். அவர்கள் ஒருமிக்க வாழ்ந்திருந்து, ஸொத்துக்களும் சேர்ந்து ஸம்பாதித்தார்கள். அந்த ஸொத்தை பாகம் செய்தபோது வாதியின் தகப்பனுக்கு தகுந்த ஸொத்து கிடைத்தது. அந்த ஸொத்து அவிபக்த குடும்ப ஸொத்தென்றும், வாதிக்கு அந்த ஸொத்தில் பாத்யமுண்டென்றும் வாதியின் தகப்பனருக்கு அந்த ஸொத்துக்களை விற்கவாவது அல்லது வேறு விதமாக வினியோகப்படுத்தவாவது அதிகாரமில்லையென்றும் தீர்மானிக்கப்பட்டது. 12. மதராஸ் லா டைம்ஸ். 240-ம் பக்கம்.

Taxes on Haunted Houses.

பேயடைந்த வீடுகளின் வரி.—சிக்காகோ பட்டணத்தில் ட்யூட்டர் லாண்டர் என்பவருக்கு ஒரு பெரியவீடு இருக்கிறது. அந்த வீட்டுக்குச் செலுத்தவேண்டிய வரி 2400 பவுனுக்காக அவர்மேல் தாவா கொண்டுவரப்பட்டது. அவர் வரி விதிக்கும் அதிகாரிகளிடஞ்சென்று மேற்படி வீட்டில் கொலைசெய்யப்பட்ட ஒரு ஸ்திரீயினுடைய ஆவி வஸிக்கிறதென்றும், குடியிருக்கிறவர் தூங்குகையில் அழுகையோடும் பெருமூச்சோடும் அது வெளிப்பட்டு வந்து அவர்களைப் பயமுறுத்துவதோடு தன்னைக் கொலை புரிந்தவனைப்பிடித்துத் தண்டிக்கவேண்டுமென்று கேட்கிறதென்றும், ஆகையால் குடித்தனக்காரர் வீட்டில் தங்குகிறதில்லை, குடியிருக்கவும் பயப்படுகிருர்களென்றும், இதனல் தனக்கு 800 பவுன் நஷ்டமென்றுஞ் சொல்லிக் கொண்டார். அதிகாரிகள் அவர் சொனனதை ஒப்புக்கொண்டு 800 பவுன் தள்ளிவிட்டு, மற்ற 1,600 பவுன் செலுத்துமபடி ஆக்ஞாபித்தார்கள். இதன்பேரில் வீடுகளில் போய் வாஸஞ் செய்வது சட்ட ப்ரகாரம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறதென்று ஒரு பத்ரிகை கூறுகிறது.

The Pondi Murder Case.

பாண்டி கொலைக்கேஸ்.—வைத்திநாத பிள்ளை தன்னுடைய மருமகளைக் கொலை செய்வதற்கு உடந்தையா யிருந்ததற்காக தஞ்சாவூர் ஸெஷன்ஸ கோர்ட்டாரால் மரண தண்டனை விதிக்கப்பட்டு பிறகு அந்த தண்டனை சென்னை ஹைகோர்ட்டாராலும உறுதிப்படுத்தப் பட்டிருந்தும் அதற்கு விரோதமாக ப்ரிவி கௌன்ஸிலுக்குச செய்துகொண்ட அப்பீலை, ஜுடிஷியல் கமிட்டியார் விசாரணைக்கு எடுத்துக் கொள்ள ஸம்மதித்திருக்கிருர்கள்.

சென்னை கவர்ன்மெண்ட் தரப்பில் ஸர். ஈ. ரிச்சர்ட்ஸ் இப்பேர்ப்பட்ட கேஸ்களை ப்ரிவி கௌன்ஸிலில் எடுத்துக்கொள்வது கூடாதென்றும், இந்தக் கேஸானது சென்னை ஹைகோர்ட்டில் நான்கு ஜட்ஜுகளால் விசாரிக்கப்பட்டு மூன்று ஜட்ஜிகள் குற்றவாளியெனத் தீர்மானித்திருக்கிருர்களென்றும், சொல்லி ஆட்சேபித்தார். மேலும், இருபக்கத்து ஸாட்சியத்தின் மதிப்பைப் பொறுத்ததாக இவ்விஷயம் உள்ளதென்று ப்ரிவி கௌன்ஸிலுக்குத் தெரிவித்துக் கொள்ளும்படி சென்னை கவர்ன்மெண்டார் தமக்குச் சொல்லியிருப்பதாகவும் சொன்னர்.

லார்டு ஹால்டேன் தாம், கவர்ன்மெண்டாருடைய கோரிக்கையை முற்றும் அங்கீகரிப்பதாகவும், ஆனல் இந்தக்கேஸ், ப்ரிவி கவுன்ஸிலுக்குக் கொண்டு வரப்படக்கூடியதென தாம் பலமாய் எண்ணுவதாகவும் சொன்னர்.

MEDICINE.

வைத்யம்.

A Wounded Warrior.

ஒரு காயம்பட்ட சிப்பாய்.—ஸ்விட்ஸெர்லாண்டு தேசத்தில் நடந்த யுத்தாப்பியாசக் காட்சியின்போது பிளம் குவிஸ்ட் என்று பேர் கொண்ட ஓர் போர்ச்சேவகன் ஓர் கூட்டாளியினுடைய பிசகினால் மண்டையில் ஓர் துப்பாக்கி குண்டு ஊடுருவலானான். அவனை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் அங்கு டாக்டர்மார்கள் அவன் மண்டையோட்டைத் திறந்து குண்டை வெளியில் எடுத்துப்போட்டு அதனால் சேதமான மூளையின் பாகத்தையும் அப்புறப்படுத்தி பழையபடி மண்டையோட்டை அதன் ஸ்தானத்தில் வைத்து ஸரிப்படுத்தி சில தினங்களில் அவனைக் குணப்படுத்தினார்கள். போர்ச்சேவகன் மறுபடியும் ராணுவத்திற்போய்ச் சேர்ந்துகொண்டான். ஆனால் அவனுக்குச் சில தத்வங்கள் குறைவுபடுகிறதாகத் தெரியவந்தது. விசேஷமாய் வாசிக்கவும் எழுதவும் அவன் மறந்துவிட்டான். ஆனபடியால் அவனை ராணுவத்திலிருந்து நீக்கிப் போட்டு உபகாரச் சம்பளங் கொடுத்து வருகிறார்கள். சாஸ்த்ரிகள் அவனைத் தங்களுடைய பார்வையில் வைத்துக்கொண்டு அவன் விஷயத்தைப் பரிசோதனை செய்து வருகிறார்கள். அவனுக்குப் பழையபடி எழுதப்படிக்கக் கற்றுக் கொடுக்கிறார்கள். மேலும் தங்களுடைய நிதியிலிருந்து மாதம் 5 பவுன் சம்பளம் கொடுத்து வருகிறார்கள். மனிதனுடைய ஒவ்வொரு தத்துவத்துக்கும் அவனுடைய மூளையின் ஒவ்வொரு பாகம் ஆஸ்பதமாயிருக்கிறதென்கிற கொள்கையை இந்தப் போர்ச்சேவகனுடைய விஷயமானது ஸ்திரப்படுத்துகிறது.

Cooked Rice and its Use.

அன்னமும் அதன் உபயோகமும்.—பழைய அரிசியைத் தவிடு நொய் முதலியவை போகும்படி நன்றாகத் தீட்டி முழு அரிசியாக ஆய்ந்தெடுத்து இளவெந்நீரால் கழுவி வஸ்த்ரத்திற்கொட்டிச் சற்றே ஆர வைத்து ஒரு பாண்டத்தில் அவ்வரிசி யளவுக்கு மூன்றுபங்கு ஜலம் விட்டு அடுப்பி லேற்றி அது நுரைகட்டிக் கொதிக்கும் பொழுது அரிசியை அதிற் போட்டு முக்காற்பாகமாக வெந்தவுடன் கரண்டியாற் றுழாவி வடித்துக்கொண்டு மறுபடியுந் தழலில்வைத்துப் பக்குவமாயிருக்கும் ஸமயத்தில் இறக்கிக் கொள்ளுவதற்குக் சுத்த அன்னமென்று பெயர். இதை நற்கறிகளோடு உண்ணில் வாத பித்த சிலேஷ்ம தேகிகளுக்கும் முக்கியமாக உதவும். பத்யங்களுக்கும் ஆகும். அன்றியும் குடலைப் பற்றிய நோய்கள் முழுதும் விலகும். பாலுஞ் சாதமுமாக உண்ணில், பித்தரோசமும் தாகமும் நீங்குதலோடு தேகபுஷ்டியும் வீரிய விருத்தியும் உண்டாகும். இது பால, கவுமார, விருத்தர் பர்யந்த முதவும்.

அன்னமானது சிறிது சூட்டோடு உண்ணப்படுவது உத்தமத்திலுத்தமமாம். அது வாத பித்த கபங்களினாலும், பீனிசத்தினாலும் விளைகிற நோயையும் அரோசகத்தையும் நீக்கி, சரீரத்திற்கு வன்மையைக் கொடுக்கும். புழுங்கலரிசி அன்னத்தைப் புசிக்கின் வாதரோகமும் பலமும் வலியரோகங்களுமில்லை. இது நோயாளருக்கு உதவும். பச்சரிசி அன்னமானது பலத்தையும் குழந்தைகளுக்கு மாந்தத்தையுமுண்டாக்கும். பித்தரோகத்தையும், மூத்திரக்கிரிச்சத்தையும் நீக்கும்.—கமத் தொழில் விளக்கம்.

Flies.

ஈக்கள்.—ஒரு ஈயின் ஜீவகாலம் 5 வாரம். இதற்குள் எத்தனையோ பேரன்கள், பேத்திகள், கொள்ளுப் பேரன்கள், கொள்ளுப் பேத்திகள், அவைகளுக்கு அப்பாலும் 3 அல்லது 4 தலை முறைகளும் உண்டாகின்றன. ஒரு ஸமயத்தில் தாய் ஈ 100 முதல் 150 வரை முட்டைகளை இடும். அவைகளை சாணிக் குவியலில் அல்லது அழுகிய குப்பைக் குவியலில் வைக்கும். ஒரு வெயில் காலம் முடிகிறதற்குள்ளாக 20 லக்ஷம் முதல் 30 லக்ஷம் வரை ஸந்ததிகள் உண்டாகின்றன. ஒவ்வொரு ஈயின் சரீரத்தில், வ்யாதிகளை உண்டுபண்ணும் நுண்ணிய ஜீவராசிகள் 60 லக்ஷம் முதல் 70 லக்ஷம் வரை குடிகொள்ளுகின்றன. ஈக்கள் பறந்து உணவிலும், பானத்திலும், ஒரு விநாடி தங்கினால், எத்தனையோ 1000-க் கணக்கான வ்யாதி உண்டுபண்ணும் ஜீவராசிகளைப்பரப்பும். ஆதலால், மனிதனின் சத்ரு ஈக்கள். அவைகளே வ்யாதிகளைப் பரவச் செய்கின்றன. அவைகள் மொய்க்கும்படி, அழுகிய ஸாமான்கள், நீர் தங்கும் பள்ளங்கள், ஆகிய இவைகள் ஏற்படாமல் தவிர்க்கவேண்டும். எல்லா உணவுகளையும், எப்போதும் மூடிவைக்க வேண்டும். பெரிய கொடிய நோய்கள் ஈக்களால் பரவச்செய்விக்கப் பெறவே எத்தனையோ மனிதர்கள் மாண்டு போகிறார்கள். நாம் வஸிக்கும் இடத்தை ஈக்கள் நாடாமல் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும்,

FUN AND ANECDOTE.

வேடிக்கையும் துக்கடாக்கதைகளும்.

A Patriotic Porter.

தேசாபிமானமுள்ள ஒரு போர்ட்டர்.-கான்ஸ்டாண்டி நோபிளிலுள்ள ப்ரிட்டிஷ் ஸ்தானாதிபதியிடம் வயதுசென்ற மாண்டிநீக்ரோ ஜாதியைச்சேர்ந்த ஒருவன் போர்ட்டராக இருந்து வந்தான். துருக்கிக்கும் மாண்டி நீக்ரோவுக்கும் சண்டை நடக்க ஆரம்பமானவுடன் அந்த போட்டர் தன்னுடைய வேலையை ராஜிநாமாக் கொடுத்து ஸ்வதேசம் போகவேண்டுமென எஜமானர்களிடம் கேட்டுக்கொண்டான். அவன் வெகுநாளாகத் தலைமைப் போர்ட்டராக வேலைப் பார்த்து வந்தமையால், எஜமானர்களுக்கு அவனை அனுப்ப ப்ரியமில்லாமல் அவனை தடைசெய்தார்கள். அந்தப் போர்ட்டர் இவர்கள் சொல்வதில் ஆத்ரமடைந்து "உங்களுடைய இவ்வளவு பெரிய ஏகாதிபத்யத்தில் வேறு நல்ல போர்ட்டர் ஒருவன் கிடைத்துவிடுவான். ஆனால் ஸ்வல்ப ஜனத்தொகையுள்ளதும் சிறியதுமான எனது மாண்டி நீக்ரோ தேசத்திற்கு ஒரு மனிதன் போய்ச் சேருவது எவ்வளவோ ஒத்தாசையாயிருக்கும்" என்று சொல்லிப் போய் விட்டானாம். பாருங்கள், இவனுடைய தேச பக்தியை.

One of the Two.

இரண்டில் ஒன்று.—ஒரு ப்ரஸித்திபெற்ற வக்கீல், கள்வனொருவனுக்கு விரோதமாக எதிர்க்கக்ஷியில் வாதித்து வந்தார். அந்தத் திருடனுடைய மனைவி சாட்சிகளில் ஒருவராக கூப்பிடப்பட்டாள். பிறகு வக்கீல் வெகு சாதுர்யமாக குறுக்கு விசாரணை ஆரம்பித்தார். "அம்மணி; நீ, அதோ நிற்கிற குற்றவாளியின் மனைவியென்று அறியவருகிறேன்" என்று வக்கீல் இருமாப்புடன் சொன்னார். "ஆம்", என்றாள் அவளும்.

"ஜனங்கள் வியர்வைவிட உழைத்து ஸம்பாதித்த ஸொத்துக்களை ஓரிடத்தில் வைத்துவிட்டு அயர்ந்து தூங்குகையில், நடுநிசியில் அவர் வீட்டிற்புகுந்து அவர் ஸொத்தைக் களவாடும் ஈனத்தொழிலுடையவனிவனென்று, நீ இவனைக் கலியாணம் பண்ணிக்கொள்ளும்போது உனக்குத் தெரியாதா?" என்று வக்கீல் கேட்டார்,

"ஆம் எனக்குத் தெரியும்" என்று மனவருத்தத்துடன் கூறினாள்.

"அப்படித் தெரிந்திருந்தும் இவனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டதேன்?" என்று பின்னுங் கேட்டார்.

"நல்லது! வக்கீலவர்களே! எனக்கு வயது அதிகரித்துக்கொண்டிருந்தது. என் அழகும் குன்றவாரம்பித்தது. அக்காலத்தில் என்மேல் மோகங்கொண்டவர் இருவரே இருந்தனர்—ஒருவர் வக்கீல், மற்றொருவர் கள்வர். ஆகையால் தேர்ந்தெடுப்பது என் பொறுப்பாய் விட்டபடியால் இருவருள் எவர் யோக்கியரோ" என்று அவள் சொல்லி முடிப்பதற்குள், அவர் வெட்கித் தலைகுனிந்து உன் சாட்சியம்போதும் என்று சொல்லிவிட்டு அடுத்த சாட்சியை கூப்பிட்டார்.

Husband and Wife.

கணவனும் மனைவியும்.—ஸ்திரீ-தாங்கள் நடந்துகொள்வதில் சிற்சில விஷயங்களில் மட்டும் புருஷரைப்போ லிருக்கிறீர்கள். பிறவற்றில் பெண்ணாக இருக்கிறீர்களே! என்றாள்.

புருஷன்:—அதற்கு நானென்ன செய்வேன். அது வம்சபரம்பரை; என்னுடைய முன்னோர்களில் சிலர் பெண்ணும் மற்றவர் ஆணுமாக இருந்தார்கள். என்று பதில் சொன்னான்.

A Short Story.

ஓர் சிறு கதை.—ஒரு மனுஷனுக்கு மூன்று புத்ரரிருந்தார்கள். ஒருமுறை அவனுடைய ஸ்னேகிதரிலொருவன் அவனை ஸந்தித்தபோது, உமது புத்ரரின் ஜீவ்ய வொழுங்கைப் பற்றி, உமக்குள்ள திருப்தியெவ்வளவு என்று கேட்டான். அதற்கவன் மறுமொழியாக, ஸ்னேகிதனே, மூத்தமகனிலும் இளையவனிலும் எனக்கு த்ருப்தியுண்டு. எப்படி யென்றால் மூத்தவன் எப்போதும் உண்மை பேசுகிறான். அவனைப்பற்றி எனக்கு ஒருபோதுந் தொல்லையில்லை. இளையவன் எப்போதும் பொய் பேசுகின்றான். அவனோடு ஸம்பந்தப்பட்ட எல்லா விஷயத்தையும் அவன் போகிறபடியே நிதானித்துக் கொள்ளுகிறேன். ஆகவே, அவனாலும் அதிகத் தொல்லையில்லாதான். நடுவனே எப்போதும் எனக்குத் தொல்லை கொடுத்துக்கொண்டு வருகிறான். எப்படி யென்றால், அவன் எந்த விஷயத்திலும் பொய்யையும் மெய்யையுங் கலந்துபோடுகிறான். இதனால், உண்மை தெரிந்துகொள்வது அதிக கஷ்டமாயிருக்கிறது, என்றான்.

CURIOSITIES.
விநோதங்கள்.

A Clock Made of Glass.

கண்ணாடியால் செய்யப்பட்ட கடிகாரம்.—ஜர்மெனிதேசத்து பவேரியா நாட்டில் கண்ணாடி மெருகிடுவோன் ஒருவன், ஆறுவருஷம் ச்ரமப்பட்டு முழுவதும் கண்ணாடியாலேயே ஒரு கடிகாரம் செய்து முடித்திருக்கிறானாம். அந்த கடிகாரத்திலுள்ள, சக்ரங்கள், முள்ளுகள், தட்டுகள், முதலிய எல்லாம் கண்ணாடியாலே செய்யப்பட்டிருக்கின்றனவாம். பாகங்களை ஒன்றோடொன்று சேர்க்க கண்ணாடி ஆணிகள் உபயோகப்படுத்தப்பட்டிருக்கின்றன. அந்த கடிகாரம் ஓடுகிறதாம்.

Sight for a Blind Man.

கண்ணில்லாதவனுக்கு கண்.—அமெரிக்க சவர்ன்மெண்டாரால் கொலைக்குற்றத்திற்குள்ளாக்கப்பட்டு ஸமீபத்தில் தூக்கிலிடப்படப்போகிற ஒருவனது இரண்டு கண்களையும் அவனைத் தூக்கிலிட்டபிறகு பிடுங்கி, குருடராயிருக்கும் மிஸ்டர் அப்ராம்ஸ் என்பவருக்கு வைத்து சிகித்ஸை செய்யப்படுமென அறிவிக்கப்படுகிறது. இவ்வித சிகித்ஸையைச் செய்யப்போகிறவர் டாக்டர் டினேயர் என்னும் அமெரிக்க வைத்யர்.

Kissing an Offence.

முத்தமிட்டுக் கொள்ளும் குற்றம்.—ஐரோப்பியருக்குள் மணமகனும் மணமகளும் நிச்சயதாம்பூலமானபிறகு ஒருவரை யொருவர் முத்தமிட்டுக் கொள்ளுதல் ஸகஜம். அப்படி ருஷ்யா தேசத்தில் பஹிரங்கமாகச் செய்வது சட்டப்படி குற்றமாகும். ஸமீபத்தில் ஒடேஸா என்ற பட்டணத்தில் நடந்த விருந்தொன்றுக்கு இரண்டு மணமகனும் மணமகளும் வந்திருந்தார்கள். அவர்கள் விருந்து முடிந்து போகும்போது ஒருவரை யொருவர் முத்தமிட்ட குற்றத்திற்காக அபராதம் விதிக்கப்பட்டார்கள். அப்பீலிலும் அது உறுதி செய்யப்பட்டதாம்.

The Chinese Way of Fixing the Age.

சீனர் வயது குறிப்பது.—சீனர் வயது குறிப்பது மிக்க விநோதம். மற்றவர்களுக்கு ஒத்துப்போகாது. பிள்ளை பிறந்த வருஷத்தை ஒன்றாக எண்ணி அடுத்துவரும் புதுவருஷத்தை இரண்டென்பார்கள். அவ் வருஷத்திலே சென்றகாலம் எவ்வளவென்று பார்ப்பதில்லை. உதாரணமாக, டிஸம்பர்மாஸம் 31-ந் தேதி ஒருபிள்ளை பிறந்தால் அதற்கு வயது ஒன்று என்பார்கள். அடுத்தநாள் புதுவருஷம் பிறப்பதால் அடுத்த நாளிலே பிள்ளைக்கு வயது இரண்டு என்று சொல்வார்கள்.

An Expert Eye Doctor.

அதிசயமான நேத்ர வைத்யர்.—மாமித்தோ என்ற ப்ரான்சு கண் வைத்யர் ஒருவர் சுண்ணம்பினால் வெந்து பார்வையற்றுப்போன ஒருவனுடைய கறுப்பு விழியின் ஒருபாகத்தை எடுத்துப் போட்டுவிட்டு மற்றொருவனுடைய கண்ணிலிருந்து நல்லதாயிருந்த ஒரு பாகத்தை யெடுத்து முதற்பேர்வழியினுடைய கண்ணில் வைத்து சிகித்ஸை செய்திருக்கிறார். இரண்டாவது பேர்வழிக்கு அப்பாகத்தைத் யெடுத்துப்போட வேண்டியதாயிருந்ததாம். முற்றும் குருடனாயிருந்த முதல் மனிதன் இப்போது லேசான பார்வை யடைந்திருக்கிறான். இந்தச் சிகித்ஸை நடந்து இப்போது ஏழுமாதம் ஆய்விட்டபோதிலும் இருவரும் பார்வை கெட்டுப் போகாமலிருக்கிறார்கள்.

Stonelike Plants.

கற்களைப்போல் தோன்றும் செடிகள்.—தென் னாபிரிக்காவில் விநோதமான சில செடிகள் உண்டாகின்றன. அவைகள் பார்ப்பவர்களுக்குச் செடிகளாய்த் தோன்றாமல் கூழாங் கற்கள் என்று நினைக்கும்படியாய் இருக்கின்றன. ஒருவிதமான செடி கற்பூமிகளில் உண்டாகிறது. அதன் வழியாய்ப் போகும் அந்யர்கள் அதைக் கல்லாகவே நினைத்து எடுத்துப்பார்த்து ஏமாந்து போகிறார்கள். வேறொரு தினுஸு குன்றுப்புறங்களில் உண்டாகிறது. அதன் இலைகள் வாத்தின் முட்டையவ்வளவு பெரிதாயிருக்கின்றன. இலைகளின் நிறம் கற்களைப்போல் ஒருவித பழுப்பு நிறமாயும் பச்சைநிறம் மேலோடு பூசினாற்போலவும் இருக்கிறது. இந்தச் செடிகள் கற்கள்போலவே தோன்றும். ப்ரகாசமான மஞ்சள் புஷ்பங்கள் கொஞ்சநாள் பூக்கும். இன்னொரு விதமான செடி ஸ்படிகம்போல் தோன்றும். அது ஸ்படிகக் கற்கள் இருக்குமிடத்திலேயே உண்டாகிறது.

HINTS AND RECIPES.
யுக்திகளும் முறைகளும்.

Cleaning Glass.

கண்ணாடிகளை சுத்தம் செய்யும் விதம்.—1. ஜன்னல் முதலியவைகளுக்கு உபயோகிக்கும் தட்டைக் கண்ணாடியின்மேல் சிறு கீறல்கள் உண்டானால் ஒரு மெல்லிய வஸ்த்ரத்துண்டை மெதிலேடெட் ஸ்பிரிட் என்னும் சாராயத்தில் நனைத்து அக் கண்ணாடியின்மேல் சிறிது நேரம் தேய்த்து பின்பு ஒரு பட்டுத்துண்டு அல்லது சிறுதோலினால் தேய்த்தால் கீறல்களெல்லாம் மறைந்துபோய் பளபளப்பாகி விடும்.

2. விளக்குச் சிம்னிகள் அதிக அழுக்கடைந்து போனால் அவைகளை ஸுமார் ஒரு விநாடி நேரம் கொதிக்கும் நீரிலிருந்து எழும்பும் ஆவிக்கு மேல் பிடிக்கவேண்டும். அதன்பின் சுத்த வஸ்த்ரத்தினாலும் பின்பு மெல்லிய காகிதத்தினாலும் சுத்தி செய்ய எவ்வித அழுக்கும் நீங்கி சுத்தமாகி விடும்.

3. கண்ணாடி புட்டிகள் முதலியவைகள் நிறங் கெட்டுப்போனால் அவைகளை உருளைக்கிழங்கின் தோலினால் நிரப்பி இறுக அடைத்து வைக்கவேண்டும். இப்படி மூன்றுநாள் இருந்தால் ஒருவகை நுரை யுண்டாகும். அதன்பின் அந்தத் தோல்களைக் கொட்டிவிட்டுத் தண்ணீரினால் தேய்த்துக் கழுவ வேண்டும். பின்பு அதை 24 மணி நேரங்களாக ஓடும் தண்ணீரிலாவது அல்லது அனலான இடத்திலாவது வைத்திருந்தால் பழைய பளபளப்பு உண்டாகிவிடும்.

4. தண்ணீர்ப் புட்டி கறைபட்டுப் போனால் காடியில் தேயிலையைக் கலந்து அதனுள் விட்டு சிலமணி நேரங்களாக வைத்திருக்கவேண்டும். பின்பு நன்றாய்க் குலுக்கி குளிர்ந்த ஜலத்தினால் தேய்த்துக் கழுவி விட்டால் பழையபடி சுத்தமாகிவிடும்.

5. முகக்கண்ணாடி வகைகளை சுத்தி செய்ய வேண்டுமானால் பின் கூறியிருக்கும் முறையை அனுஸரிப்பது உசிதம். ஒரு சுத்தமான துணியை ஸ்பிரிட்ஸ் ஆப் உவைன் சாராயத்தில் தோய்த்து, அதினால் அந்தக்கண்ணாடியை லேசாய்த் தேய்த்து உடனே அதின்மேல் சீமைச் சுண்ணாம்பைத் தேய்த்து, மறுபடியும் ஒரு உலர்ந்த சுத்தமான துணியினால் துடைத்து, கடைசியாக பட்டுத் துண்டினால் நன்றாய்த் தேய்க்க வேண்டும். கண்ணாடி பெரிதாயிருந்தால் மஸ்து உலர்ந்து போகாதபடி பாதி பாதியாய்ச் சுத்தம் செய்ய வேண்டும்.

6. கண்ணாடியில் பட்ட ஈல் அல்லது சுண்ணாம்பு வேறெவ்விதத்திலும் நீங்காதென்றாலும், காடியினால் நனைத்து பின்பு அம்மோனியா ஜலத்தில் தோய்த்த கடற்காளானால் அவ்விடங்களில் தேய்த்தால் முழுவதும் நீங்கிவிடும்.—ரஞ்ஜிதபோதினி.

Storing Potatoes.

உருளைக்கிழங்கு சேகரித்து வைத்தல்.—(1) கிழங்குகளை பத்ரப்படுத்திவைக்க குளிர்ச்சியானதும், சுத்தமானதும், ஈரம் உள்புகாததுமான ஒரு களஞ்சியம் வேண்டும். களஞ்சியத்தின் சுவர்களும் கூரையும் நீர் ஒழுகாதபடி கட்டப்பட்டிருக்கவேண்டும். உருளைக்கிழங்குப் பூச்சி இல்லாத இடமாகவும் இருக்க வேண்டும்.

2. களஞ்சியத்தின் தரை மட்டம் பூமிக்குமேல் உயர்ந்தும், ஈரமில்லாமல் காய்ந்த தரையாகவும், மழைகாலங்களிலும் ஈரமடையாமல் இருக்கும்படி செய்யவேண்டும்.

3. கிழங்குகளை பத்ரப்படுத்துமுன் ஒவ்வொன்றாய்ப் பொறுக்கி அழுகாமலும், பூச்சி புழு இல்லாமலும் இருப்பவைகளைப்பார்த்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

4. களஞ்சியத்தில் கிழங்குகளைக் குவியல் குவியலாய்ப் போட்டு, சுத்தமான காய்ந்த ஆற்று மணலை ஒவ்வொரு குவியலின் மேலும் கொட்டி மூடவேண்டும். பத்ரப்படுத்தி வைக்கும் காலமெல்லாம் ஒரு கிழங்காவது மணலுக்கு வெளியில் இருக்கக்கூடாது. மணலை உபயோகப்படுத்துமுன் அதை ஈரமில்லாதபடி நன்றாய்க் காயவைக்கவேண்டும். உருளைக்கிழங்குக் குவியல் ஒரு முழ உயரத்துக்கு மேல் இருக்கக்கூடாது.

5. ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு ஒரு தடவை உருளைக்கிழங்குகளைப் பொறுக்கி யெடுத்து அழுகின அல்லது பூச்சி பிடித்த கிழங்குகளை வெளியிலெடுத்து விட்டுப் பிறகு மூடிவிடவேண்டும். வெளியிலெடுத்த உபயோகமற்ற கிழங்குகளை பூமிக்குள் அதிக ஆழத்தில் புதைத்துவிட வேண்டும். மழை பெய்யும் காலத்தில் குவியல்களை அடிக்கடி பிரித்து பார்ப்பதோடு மணலையும் நன்றாய்க் காயவைக்கவேண்டும்.

ECONOMIC LITERATURE.

பொருளாதார ஸம்பந்தமான ப்ரசுரங்கள்.

Co-operation Among French Farmers.

ப்ரான்ஸ்தேசக் க்ருஷிகருக்குள் கூட்டுறவு.— இந்த விஷயமாய் டிஸம்பர் மாஸத்து க்ருஷிகனில் ராவ் பகதூர் ஜெ. தர்மரங்காராஜு அவர்கள் ஒரு சிறந்த வ்யாஸம் எழுதியிருக்கிறார்.

ப்ரான்ஸ் தேசத்து க்ருஷிகருக்குள் அநேக கூட்டுறவு ஸங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றுள் அநேகம் ஒரே க்ராமத்தில்வஸிக்கும் க்ருஷிகர் மட்டும் சேர்ந்த ஸங்கங்களாயிருக்கின்றன. அதிலும் சிலவிவஸாயத்தில் ஒரு விசேஷ முயற்சியைப்பற்றின ஸங்கங்களாகவே யிருக்கின்றன. உதாரணமாக, விவஸாய அபிவ்ருத்தியென்னும் பொது நோக்கத்துடன் ஸ்தாபிக்கப்பட்ட ஸங்கங்கள் பலவாயிருக்கினும், கால்நடை அபிவ்ருத்தி ஸங்கம் என்றும், எரு வகைகளை ஸம்பாதிக்கும் ஸங்கங்களென்றும், பால் விற்பனையை வ்ருத்தி செய்யும் ஸங்கங்களென்றும், இவ்வாறாகப் பல விவஸாய விஷயங்களிலும் ஒவ்வொரு ப்ரத்யேக முயற்சியைப் பற்றியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பல ஸங்கங்களும் இருக்கின்றன. அவைகளில் ஒரு ஸங்கத்தைப்பற்றி விவரிப்போம்.

கால்நடை அபிவ்ருத்தி ஸங்கங்கள் முதல் முதல் ஸ்விட்ஸர்லாந்தில் 1888-ம் வருஷம் முதல் ஸ்தாபிக்கப்பட்டன. அந்த தேசத்திலிருந்து ப்ரான்ஸ் தேசத்திற்கு அவைகள் விசேஷமாய்ப் பரவி தற்காலத்தில் நூற்றுக்கணக்கான ஸங்கங்கள் வேலை செய்து வருகின்றன. ஒரு க்ராமத்திலுள்ள 15 அல்லது 20 க்ருஷிகர் ஒன்று சேர்ந்து ஒரு ஸங்கத்தை ஸ்தாபிக்கிறார்கள். அதன் நோக்கங்கள் என்னவெனில், உயர்ந்த தரமானதும் விசேஷ நற்குண முடையதும், தேகக்கட்டும் நல்லுறுப்புகளும் அமைந்ததும், வலிமையில் சிறந்ததும், அந்த ப்ரதேசத்திலுள்ள பசுக்களுக்கேற்ற பருமனுள்ளதுமான நல்ல ஜாதி 'மாப்பிள்ளைக்காளை' ஒன்றை விலைக்கு வாங்கி அதை அந்த ஸங்கத்தைச் சேர்ந்த எல்லாருக்கும் பொதுவாய் வைத்துக் கொள்வார்கள். அதன் பின் ஒவ்வொரு மெம்பரும் நல்ல ஜாதிப் பசு ஒன்றை வாங்கி அதை அந்த மாப்பிள்ளைக் காளையால் கர்ப்பமாக்கி அந்தத் தேதி குறிப்பிட்டுப் பதிந்து வைத்துக்கொண்டு அப்பசுக்கள் ஈனும் தலைக்கன்றுகளை நன்றாய் தீனி கொடுத்து போஷித்து வளர்த்து அவைகளை வர்க்க வ்ருத்திக்கென்று வேறாக்கி வைத்துக்கொள்வார்கள். இந்த ஸங்கத்தைச் சேராத அயலார்களின் பசுக்களுக்கு அக்காளையின் கர்ப்பாதானச் சேர்க்கை அவசியமானால் அதற்கு அதிகமான சட்டணம் செலுத்த வேண்டியிருக்கும்.

இந்த ஸங்கத்தாரால் வளர்க்கப்படும் கால்நடைகளுக்கும் கன்றுகளுக்கும் வேண்டிய தீனிச்செலவு மிகவும் குறைவாகவே யிருக்கும். தனித்தனியாயும் அப்போதைக்கப்போதும் வாங்குவதைக் காட்டிலும் மொத்தமாயும் விலை ஸரஸமான காலங்களிலும் வாங்குவதால் அந்த ஸங்கத்தின் மெம்பர்களுக்கு லாபமுண்டாகிறது.

இந்த ஸங்கத்தாரின் கால்நடைகளைப் போஷித்துக் காப்பாற்றி வளர்க்கும் விஷயத்தில் அந்த மெம்பர்களுக்கு ச்ரமமில்லை. 20, 25, மெம்பர்கள் ஒன்று சேர்ந்து வாரத்துக் கொருவராக அவைகளைப் பராமரித்து வந்தால் ஒவ்வொரு மெம்பருக்கு மிருக்கும் ச்ரமம் மிகவும் குறையும். இந்தக் கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரைகளும் ஸங்கத்துக்குப் பொதுவாகவே இருக்கும். இந்தக் கால்நடைகளில் ஏதாவது ஒன்றிரண்டு வ்யாதியால் இறந்து போனால் அந்த நஷ்டத்தை எல்லாரும் ஸமபாகமாகப் பொறுத்துக் கொள்வார்கள்.

பால் பசுக்களைக் காப்பாற்றும் விஷயத்திலும், பரிசுத்தமான இடங்களில் அவைகளை வைத்து வைப்பதிலும், சுத்தமான பாத்ரங்களில் அவைகளின் பாலைக்கறந்து பந்தோபஸ்தாய் எல்லாருக்கும் விற்பதிலும் ஸரியான ஏற்பாடுகளும் ஸௌகர்யங்களும் அமைக்கக்கூடும். ஒவ்வொரு மெம்பரும் தனித்தனியாய் அப்படிச் செய்வது கூடாத கார்யம்.

க்ருஷிகர் தங்கள் நிலங்களில் விளைவாகும் தான்யங்களையும் மற்ற விளைபொருள்களையும் லாபகரமான இடங்களில் விற்பனை செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய இந்தக் கூட்டுறவு ஸங்கங்களைவிட வேறு ஸாதனம் கிடையாது. இப்படிச் செய்வதால் தற்காலம் தரகர்களுக்குக் கிடைக்கும் அபரிமிதமான லாபம் ஸங்கத்தாரைச் சேரும். அது அவ்வருஷத்தின் முடிவில் எல்லா மெம்பர்களுக்கும் பங்கிட்டுக் கொடுக்கப்படும்.

இந்த ஸங்கங்களின் மற்றொரு ப்ரயோஜனம் என்னவெனில், எப்போதாவது ஏதாவது ஒரு காரணத்தினால் ஒரு மெம்பர் தன் விவஸாய கார்யங்களை மேல் பார்க்க அசக்தராய் விட்டால், அவருடைய வேலையை மற்ற மெம்பர்களில் ஒருவர் பார்த்து முடிக்கக்கூடும். இதேவிதமாக மற்றவர்களுக்கு அஸௌகர்யம் நேரும்போது முன் ஸௌகர்யம் அநுபவித்த மெம்பர்கள் அவர்களுக்கு உதவி புரிவார்கள். இவ்விதமாக க்ராமத்திலுள்ள மெம்பர்களின் விவஸாய கார்யங்கள் தடைப்படாமல் நன்றாய் நடந்தேறி வரும்.

TAMIL LITERATURE.

தமிழ்க் கல்வி.

Moral Nursery Rhymes and Marriage Blessing Songs.

நீதிநெறித்தாலாட்டும் திருமண வாழ்த்தும்.—

இந்தப் புஸ்தகம் ஸ்ரீவில்லிப்புத்தூர் பண்டிதர் ஈச்வர மூர்த்தியா பிள்ளை இயற்றியது.

இந்த நூலில் முதல் பாகமாகிய நீதிநெறித் தாலாட்டு என்பது "நீதிநூல்களில் சிறந்ததாகிய திருக்குறளில் சிலவற்றிற்குக் கருத்துரை கூறு முறைபோல்" 133 அதிகாரத்திலிருந்து 133 செய்யுள்கள் எடுத்து அவைகளின் கருத்தை யமைத்துப்பாடிய தாலாட்டுக் கண்ணிகளாகும். திருக்குறளில் அறம், பொருள், இன்பம் (தர்மம், அர்த்தம், காமம்) என்று மூன்று பிரிவுகள் உண்டு இந்த நூல் திருக்குறளை ஆதாரமாகக் கொண்டிருப்பதால், இதற்கும் அதைப்போல அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பிரிவுகள் உண்டு. நூலில் பூர்த்தி ஏற்படுவதற்காக மூன்றும் பிரிவு சேர்க்கப்பட்டுள்ளது என்பது கவனிக்கத் தக்கது.

திருக்குறளில் சிறுவர்களுக்கு உபயோகப்படும்படியான பாடல்களை வெகுவாய் உபயோகித்திருக்கிறபடியால், இந்தத் தாலாட்டுக் கண்ணிகளை ஸ்திரீகள் உபயோகித்தல் மிகவும் நல்லதென்பது நம்மபிப்பிராயம். மாதிரிக்காக சில கண்ணிகளை இங்கு குறிப்பிடுகிறோம்.

திருமண வாழ்த்தில் தலைவ (புருஷ) னுடைய இயல்பும் தலைவியினுடைய இயல்பும், தெளிவாய் விவரிக்கப்பட்டிருக்கின்றன. இதன் விலை $1\frac{1}{2}$ அணா தான். வேண்டுவோர் ஆசிரியருக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

அகரம் எழுத்தின் முதல் ஆகிறதற்குந் தன்மையைப்போல்
சகம் எல்லாம் தோற்றுவிக்கும் சாமியை நீ கைதொழுவாய்.
உள்ளத்துறவுடைய உத்தமர் சீர் ஓதில் முந்நீர்ப்
பள்ளத்திலும் பெரிதாம் பாராய் பசுங்கிளியே.
தன்னொழுக்கம் குன்றாமல் தன் கணவனைப் பேணும்
பொன்னே பெண்ணவாள் எனப் போற்றுவார் புண்ணியரே.
ஒழுக்கம் உடையவரே உத்தமர்; மேலான குலம்.
இழுக்குடையார் எல்லாம் இழிந்தகுல மாவர்கண்டாய்.
பிறர்பொருளை இச்சித்தல் பேதமையாம். பின்னும் அதே
அறவழிக்கும் நங்குடியை. ஆர் அமுதே நீயறிவாய்.
உன் குற்றம் நீயுணர்ந்தால் ஊரார்தம் மேற்பழியை
அன்பற்றுக் கூறுவையோ! ஆய்ந்துரையாய் கண்மணியே.
இல்லாருக் கீவதுடன் ஏற்பதிகழ் வென்றறிதல்
நல்லாரியல் பெனவே நன்கறிவாய் கண்மணியே.

எப்பொருள் எதன்மையதாய்த் தோன்றிடினும் அப்பொருளின்
மெய்ப்பொரு ளாராய்ந் துணர்தல் மெய்யறிவாம் கண்மணியே.

முறைசெய்து காப்பாற்று மன்னவனே மக்களுக்கோர்
இறை என்னலாகும்; அவன் எவ்வுயிர்க்கும் தாயாமே.

பெரியோர்களைத் துணையாய்ப் பேணிக் கொள்வோர் இடத்தில்
அரியபொருள் எல்லாம் அமைந்திடுங்காண் ஆரமுதே.

ஊக்க முடையார்க் கொருக் காலுங் கேடிலையே
ஆக்கம் அதுவாம் எனவே ஆய்ந்தறிவாய் மாங்குயிலே.

கற்றோர் சபைதனில் நீ கற்றபொருள் நன்குரைத்து
முற்றும் அவர்கூற, முழுதும் உணர் கண்மணியே.

தூங்கும் போதெல்லாம் என் தோள்மேலிருந்து, விழித்
தாங்கு நெஞ்சினுள் ஒளிப்பர் அன்புடையார் ஆர் அமுதே.

MISCELLANEOUS NEWS.
நானா ஸங்கதி.

Steam Laundry in Calcutta.

கல்கத்தாவில் நீராவியால் துணி வெளுத்தல். ஸ்காத்லாந்தில் உள்ள ஒரு கம்பெனி கல்கத்தாவில் நீராவியால் துணிவெளுக்கும் சாலையொன்று ஏற்படுத்தத் தயாராய் இருக்கிறார்களென்றும் அதைப்பற்றி அந்த முனிஸிபாலிட்டியார் யோசனை செய்து வருவதாயும் தெரிகிறது.

A Swadesi Steamship Company.

ஒரு ஸ்வதேசி கப்பற் கம்பெனி.—பம்பாயில் ஏற்கெனவே இந்தியன் ஸ்டீம் நாவிகேஷன் கம்பெனி என்று ஒரு கப்பல் கம்பெனி ஸ்தாபிக்க முயற்சிசெய்து அதற்கு தேசத்தில் பங்குகள்சேர்த்துக்கொண்டிருந்தார்கள். அந்த முயற்சியைப்பற்றி ஸமீபத்தில் ஒரு ஸமாசாரமும் தெரியவில்லை. இப்போது மறுபடியும் ஒரு கம்பெனி புதிதாய் ஸ்தாபிக்கப்படப்போவதாகத் தெரியவருகிறது. இது முழுவதும் ஸ்வதேசிக் கம்பெனியாயிருக்குமென்றும், 50 லக்ஷம் ரூபாய் முதலென்றும், ஹிந்துக்களின் போக்குவரத்துக்கு வேண்டிய வஸதிகள் கப்பலில் அமைக்கப்படுமென்றும், இங்கிலாந்தில் ஹிந்துக்களுக்காக ஹோட்டல்கள் ஸ்தாபிக்கப்படுமென்றும் சொல்லப்படுகிறது. இந்தக் கம்பெனி இங்கிலாந்தில்மூன்று ஸ்டீமர்கள் வாங்க ஏற்பாடு செய்து விட்டதென்றும் சொல்லப்படுகிறது.

Sowbhaghiavati and M.R.Ry.

ஸௌபாக்யவதியும் ம-ா-ா-ஸ்ரீ.—ஸௌபாக்யம் என்றால் மிகுபாக்யமென்று அர்த்தம். ஆகையால் ஒரு பெண்ணைப் பார்த்து ஸௌபாக்கியவதியென்று மங்களம் கூறினால், அவளுக்கு ஸகல பாக்யமும் உண்டாகக் கடவது என்று வாழ்த்தலாகும். அதாவது, அவளுக்குக் குறையற்ற செல்வமும் பூர்ண ஸௌக்யமும் புத்ரஸந்தானமும் பெருக வேண்டுமென்று ஆசீர்கூறுவதாம். அவள் ஆயுளைப்பற்றி நாம் ஒன்றும் ஆசைப்படவேண்டியதில்லை. அவள் புருஷன்மாத்திரம் பூரண ஆயுசுள்ளவனாயிருந்தால் அதுவே போதுமானது. அதைவிடப்பாக்யம் அவளுக்கு வேறு ஒன்றுமில்லை. அல்லது அவனுக்கு முன் செத்தாலோ, அவ்வளவுக்கு ஸுக்ருதந்தான்.

ஸாதாரணமாய் எல்லாருடைய பேருக்குமுன்னும் உபயோகிக்கப்படும் ம-ா-ா-ஸ்ரீ யென்ற பதத்திற்கு மகாபாக்யம் என்றர்த்தம். ஆகையால், அதுவும் ஒரு வாழ்த்துதலே அல்லாமல் வேறொன்றுமில்லை. ஆகையால், சிரஞ்சீவி, ஸௌபாக்யவதி, ம-ா-ா-ஸ்ரீ என்ற இந்த மூன்று சொற்களும் ஐரோப்பிய பாஷைகளிலுள்ள ஸார், மிஸ்டர், மாடெம் முதலான சொற்களைப்போல மரியாதையை மாத்திரம் குறிக்கும் சொற்களாயிராமல், ஒரு வேண்டுகோள்போலும் பிரார்த்தனைபோலும், அல்லது வாழ்த்துதல்போலும் இருக்கின்றனவென்று நாம் அறியவேண்டியது. மேலும் இந்த ஆசிகூறும் மொழிகள் இந்தியர்களுடைய மேலான மரியாதையைக் காட்டுகிறது மாத்திரமல்லாமல், தம்மவர்களும் பிறரும் ஸுகமாய் வாழவேண்டுமென்று அவர்களுக்கிருந்த மேலான வாஞ்சையையும் பிற ஸ்நேகத்தையும் குறிப்பிடுகின்றன.

Chingleput Municipality.

செங்கல்பட்டு முனிஸிபாலிட்டி.—செங்கல்பட்டு யூனியனாக இருந்தது முனிஸிபாலிட்டியாக மாற்றப்பட்டிருக்கிறதெனத் தெரிகிறது. இனிமேல், முனிஸிபல் நிர்வாகிகளின் முயற்சியால், தகுந்த ஜலவஸதி முதலியன உண்டாக்கப்படவேண்டும்.

The Congress.

காங்க்ரேஸ் மகாஸபை.—காங்க்ரேஸ் மகாஸபை பங்கிப்பூரில் இந்த மாதம் 26, 27, 28 இந்தத் தேதிகளில் நடைபெறும்.

A New Tamil Dictionary.

தமிழில் ஒரு புதிய அகராதி.—சென்னை கவர்ன்மெண்டார் வேண்டிய பொருளுதவியைச் செய்ய, சென்னை யூனிவர்ஸிடியார் தமிழில் ஒரு புதிய அகராதியைத் தயார் செய்து ப்ரசுரிக்கும் வேலையை மேற்பார்வை பார்த்து நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வேலையைப்பார்க்க 5 மெம்பர்கள் கொண்ட ஒரு கமிட்டியும் ஏற்பாடாயிருக்கிறது. அந்த அகராதியைத் தயார் செய்து ப்ரசுரிக்க 5 வருஷகாலம் பிடிக்குமென்றும், ஏறக்குறைய வருஷமொன்றுக்கு லட்சம் ரூபாய் செலவாகுமென்றும் மதிப்பிடப்பட்டிருக்கிறது.

Coronation Day.

முடிசூட்டு வைபவ தினம்.—நாளது டிஸம்பர்

மாஸம் 12௳ வ்யாழக்கிழமை சக்ரவர்த்தி முடிசூட்டின் வருஷதின மாதலால் அன்றைக்கு ஜார்ஜ் சக்ரவர்த்தி, சக்ரவர்த்தி தம்பதிகளின் மனம் இந்தியாவினிடத்தில் விசேஷமாய்ச் சென்றிருக்கிற தென்றும், டெல்லி முடிசூட்டு மகோத்ஸவம் இந்தியர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களேயும் நிச்சயமாய்க் கொடுக்கப்போகிற புதிய சகாப்பதத்தின் ஆரம்பமாகவே பாவிக்கும்படி எல்லாம் வல்ல கடவுள் அனுக்ரஹிப்பாரென அவர்கள் நம்பியிருப்பதாகவும், ராஜப்ரதிநிதிக்கு சுப ஸமாச்சாரம் அனுப்ப, அவர் ஜார்ஜ் சக்ரவர்த்திக்கு அதற்காக நன்றி செலுத்தி டெல்லி முடிசூட்டு மகோத்ஸவதினத்தை என்றைக்கும் இந்தியர் நினைத்துக் கொண்டிருப்பார்களென்றும், போன வருஷம் முழுதும் இந்தியர் அனுபவித்த ஸுபிக்ஷமும் க்ஷேமமும் சக்ரவர்த்தியின் விஜயத்தால் இந்தியாவுக்கு விளேய விருக்கும் முன்னேற்றத்தைக் குறிப்பிடும் ப்ரதம பலன்களாகக் கருதப்படுமென்றும் பதில் தந்தி அனுப்பினர்.

French Aviators.

சென்னேக்கு வரப்போகும் ககன ஸஞ்சாரிகள்.- ஆகாய விமானம் நடத்துவதில் பேர்பெற்றவர்களான மான்ஷ்யர் ஜீயார்ஜ் வர்மிக், மா. மாரிஸ் கிளிஷா, மா. மார்க் பவுர்ப் என்ற மூன்று ப்ரான்சியர்கள், ஸிலோனுக்கு வந்திருக்கிறார்களாம். தேச ஸஞ்சாரம் செய்யப் புறப்பட்டிருப்பதாகவும், ஸுமார் 8-நாள் வரையில் ஸிலோனில் தங்கியிருந்து, பிறகு சென்னேக்கு வந்து அங்கிருந்து, பம்பாய், ஆஸ்ட்ரேலியா முதலிய விடங்களுக்குப் போக உத்தேசித்திருப்பதாகவும் சொன்னார்களாம். அவர்கள் தங்களோடு கூட ஆகாயரதங்கள் கொண்டுவந்திருக்கிறார்களாகையால், ஒவ்வோரிடத்திலும், விமானத்தை நடத்திக் காட்டுவார்கள்.

The Third Tanjore District Social Conference.

தஞ்சாவூர் ஜில்லா 3-வது ஆசாரச் சீர்திருத்தக் கான்பரேன்ஸ்.—23-11-12 மாலே 4-30 பட்டுக்கோட்டையில் கூடியது.

மிஸ்டர் டி. விஜயராகவாசாரியர் அந்தக் கான்பரென்ஸின் ப்ரெஸிடெண்டாயிருந்து, அந்தக் கான்பரென்ஸில் பின்வரும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

பெண் கல்வி.—நமது பெண் பாலர்களின் கல்வி இன்னும் மேன்மேலும் பரவுவது நமது ஜனங்களின் ஸ்திரமான அபிவ்ருத்திக்கு அத்யாவச்யமென்றும் நமது தேசத்தில் ஆசாரவிஷயங்களிலுள்ள கெடுதல்களுக்கு முக்ய காரணமான நமது குடும்பங்களிலுள்ள ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் விவேக ஏற்றத் தாழ்ச்சியை நீக்க எல்லா பாகங்களிலும் பெண் பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கைகளேயும் அவைகளின் வகுப்புகளேயும் உயர்த்த நாமெல்லோரும் ஏகோபித்து முயற்சி செய்யவேண்டுமென்பதும் இந்த ஸபையின் அபிப்ராயம்.

விவாக சீர்திருத்தம்.—பால்ய விவாகம் குறையவேண்டுமென்பதும் எல்லா ஜாதியர்களிலும் பெண்களுக்கு 12-வயதும் பிள்ளேக்கு 18-வயதும் ஆகும் வரையிலாவது விவாகம் செய்யப்படாமல் இருப்பதற்கு பூர்ண ப்ரயத்னம் செய்யப்படவேண்டும். வதூவரர்களின் ருது சாந்தி அவர்கள் முறையே 15-வயதும் 20-வயதும் அடையும் வரையிலாவது நிறுத்திவைக்கப்படவேண்டும். இந்த க்ரமத்தை யாவரும் தங்கள் குடும்பங்களில் அனுஷ்டானத்தில் நிச்சயமாய் அப்யஸிக்க ஸங்கல்பஞ்செய்து கொள்ளவேண்டும். இந்த வயது க்ரமங்களின் ரீதியானது ப்ரௌடா விவாகம் நன்மை பயக்கத்தக்கதென்றும் சாஸ்த்ர ஸம்மத முள்ளதென்றும் அங்கீகரிக்கப்படும்வரையிலும் கொஞ்சம் கொஞ்சமாய் உயர்த்தப்படவேண்டும். வதுக்களின் பெற்றோர்களிடத்திலிருந்து தற்காலத்தில் வாங்கும் எதிர் ஜாமீன், கன்னியா சுல்கம், என்னும் பணத்தண்டுதல்களானது வதுக்களின் பெற்றோர்களுக்குத் தாங்க முடியாத கெடுதியாக இருக்கிறது. கல்யாணத்தின் உயர்ந்த தன்மையை தாழ்த்தி விடுவதோடுகூட இதர அநேக கெடுதல்களேயும் வ்ருத்தி செய்கிறது. ஆகையால் இக்கொடிய வழக்கத்தைத் தடுக்கவரன்களின் பெற்றோர்கள் தங்கள் புத்ரர்களுக்கு தாங்கள் பணம் வாங்கமாட்டோம் என்று ஸங்கல்பித்துக் கொள்ளவேண்டும். நான்கு ஜாதியின் ஒவ்வொரு பெரிய வகுப்பின் அநேக உட்பிரிவுகளுக்குள்ளேயும் ஒவ்வொரு வகுப்பினரும் அந்த ஜாதியின் இதர உட்பிரிவுகளோடு கல்யாணஞ் செய்யக்கூடாதென்று இருக்கும் வழக்கத்திற்கு சாஸ்தரத்தில் ஆதாரமில்லே. அந்த வழக்கத்தை விட்டுவிடுவதில் வரனே ஏராளமான குடும்பங்களிலிருந்து நிச்சயம் செய்துகொள்ளும்படியான ஸௌகர்யமும் இன்னும் அநேக வித

மான நன்மைகளும் உண்டாகும். வதுக்களின் பெற்றோர்களிட மிருந்து வரம்பு கடந்து அவர் தாங்க முடியாதபடி பணம் பிடுங்கும் வழக்கமும் குறைந்து விடும். ஆகையால் ஒவ்வொரு ஜாதியின் அநேக உட்பிரிவுகளுக்குள்ளேயும் விவாக ஸம்பந்தமானது அபிவ்ருத்தியாக வேண்டும் என்று இந்த ஸபை அபிப்ராயப்படுகிறது.

இதர மதங்களுக்குச் சென்றவர்களைத் திரும்ப சேர்த்துக் கொள்ளுதல்.—இதர மதங்களுக்குச் சென்ற பிறகு மறுபடி ஹிந்து மதத்திற்குத் திரும்பி வந்து விடவேண்டுமென்று விரும்புகிறவர்களை அப்படிச் செய்ய ஹிந்துக்கள் இடங்கொடுக்க வேண்டுமென்பதும், அப்படிச் செய்வதானது ஹிந்து ஜன ஸமூகத்தின் அபிவ்ருத்தியை அதிகமாக்குவதோடுங்கூட அவர்களின் ஸகோதர உணர்ச்சியையும் தழைத்தோங்கச் செய்யு மென்பதும், இந்த ஸபையின் அபிப்ராயம்.

மைனர் பெண்களின் ரக்ஷணார்த்தம் கொண்டு வரப்பட்டிருக்கும் மசோதா.—பெண்களை துர்விஷயத்தில் இழுக்காமல் ரக்ஷிப்பதற்காக ராஜப்ரதிநிதியின் சட்ட நிருபண ஸபையில் கனம் தாதாபாய் அவர்கள் கொண்டுவந்திருக்கும் மசோதாவின் நோக்கம் ஸரியென்பதும், அவ்வித சட்டம் அத்யாவசியமென்பதும், இந்த ஸபையின் அபிப்ராயம்.

பஞ்சமர் முதலிவர்களின் நிலைமையை உயர்த்தல்.—பஞ்சமர் முதலிய கீழ் ஜாதியார்களின் நிலைமையை உயர்த்துவது நமது தேசாபிமானிகளின் கடமையாதலால், அவர்கள் நிலைமையை மேன்மைபடுத்த எவ்விதத்திலும் முயலவேண்டும்.

The Bombay Postal Special,

பம்பாய் போஸ்டல் ஸ்பேஷல்.—மேல்நாடுகளுக்கு அனுப்பப்படும் தபால்களை சீக்ரத்தில் கொண்டு போய்ச் சேர்ப்பதற்காக ப்ரதி வெள்ளிக்கிழமையிலும் சென்னையிலிருந்து ஒரு ஸ்பெஷல் வண்டி பம்பாய்க்குப் புறப்பட்டுப்போகும்.

மேற்படி தபால் வண்டிக்கு எந்தெந்த நேரம்வரையில் சென்னை தபால் ஆபீஸ்களில் கடிதங்கள் எடுக்கப்படுமென்பதை கீழே குறித்திருக்கிறோம்.

மௌண்டுரோட்	காலை 10-மணி.
ஸ்பென்ஸர் பில்டிங்	காலை 9-55-மணி.
ராயப்பேட்டை	காலை 9·50-மணி.
ராயபுரம்	காலை 9-45-மணி.

OPENINGS FOR BUSINESS.
வ்யாபாரம் நடக்கக்கூடிய இடங்கள்.

Rice Starch.

அரிசிமா ஸத்து.—ஒரு ஆஸ்ட்ரியா கம்பெனிக்கு அரிசிமா ஸத்து இறக்குமதி செய்பவருடைய விலாஸம் தேவையாம். (B. 170.)

Peas.

பட்டாணி.—கனடாவிலுள்ள டொராண்டோ நகரத்து கம்பெனி ஒன்றுக்கு பட்டாணி ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம் (B. 171.)

Mother of Pearl.

சிப்பி.—இட்டாலியிலுள்ள ஒரு கம்பெனிக்கு கல்கத்தாவில் சிப்பி விற்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 172.)

Cloth Cuttings.

துணியில் வெட்டுத் துண்டுகள்.—ஒரு இட்டாலி தேசத்துக் கம்பெனிக்கு பருத்தி, கம்பளி வஸ்த்ரங்களில் நறுக்கப்பட்டு வீணாய்ப்போகும் துண்டுகளை ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 173.)

Irish Linen Fabrics.

லினன் வஸ்த்ரங்கள்.—பெல்பாஸ்டிலுள்ள ஒரு கம்பெனிக்கு லினன் வஸ்த்ரங்களை இந்தியாவில் இறக்குமதி செய்ய ஏஜெண்டுகள் தேவையாம். (B. 174.)

Tramway Manufactures.

ட்ராம்வே தொழில் பொருள்கள்.—ட்ராம்வே கண்ட்ராக்டர்களும், இஞ்சினியரிங் ஸாமான்கள் செய்பவர்களுமான ஒரு இங்கிலீஷ் கம்பெனிக்கு தங்கள் ஸாமான்களை விற்பதற்கு ஸோல் ஏஜெண்டுகள் ஏற்படுத்த எலெக்ட்ரிக் இஞ்சினியரிங் கம்பெனிகளின் விலாஸம் தேவையாம். (B. 176.)

Corundum.

கொரண்டம் என்னும் ரத்னம்.—ஒரு லண்டன் கம்பெனிக்கு கொரண்டம் ஏற்றுமதி செய்பவர்களுடைய விலாஸம் தேவையாம். (B. 177.)

MADRAS MARKET REPORTS.

மதராஸ் மார்க்கெட் நிலவரங்கள்.

தென்னிந்தியா சேம்பர் ஆப் காமர்ஸ் என்று சொல்லப்படும் வர்த்தக சங்கத்தாரின் டிஸம்பர்மாஸம் 4-ம் உ ரிப்போர்ட்டுப்படி

Produce Market.—விளைபொருள்கள்.

			ரூ.
ஆவாரம்பட்டைபாரம் 1-க்கு		...	22 முதல் 33
கொன்னைப்பட்டை	ஷை	...	18 முதல் 19
கடப்பை கடுக்காய்	ஷை	...	15 முதல் 20
சேலம் ஷை	ஷை	...	28 முதல் 30
நல்லெண்ணெய்	ஷை	...	110 முதல் 115
புங்கம் எண்ணெய்	ஷை	...	95
எட்டிக்கொட்டை	ஷை	...	16 முதல் 18
விளக்கெண்ணெய்	ஷை	...	76 முதல் 77
கொட்டை முத்து 165 ராத்தல்			
பந்தர் பச்சை அரிசி 44 படி		...	8 முதல் 9½
நெல்லூர் அரிசி 31 படி		...	7-12 முதல் 8
வெங்காயம் (கடப்பை) பாரம்		...	14
ஷை (பல்லாரி)	ஷை	...	7
நீலகிரி உருளைக்கிழங்கு		...	24

Metals.—உலோகங்கள்.

			ரூ.
பித்தளைத் தகடுகள் 'Rex' ம் இங்கிலீஷ௱ம் பாரம்		...	242
செப்புத் தகடுகள் பாரம்		...	317
செப்புக்கட்டி	ஷை	...	
நாகம்	ஷை	...	90
ஷை (உள்ளூர்)	ஷை	...	82
ஈயம்	ஷை	...	75
சாரீயம்	ஷை	...	73
வெள்ளீயம்	ஷை	...	237 வராகன்

Iron.—இரும்பு.

மருக்கி சட்டம் 2 செ. பாரம்			ரூ 24 முதல் 29
சீமை			39 முதல் 40
மருக்கி தகடு	6—9, 12—13,		28 முதல் 38
பீப்பாய்க் கட்டு		...	32—35
8 பட்டை எஃகு		...	24—25
எஃகு வில்கட்டு		...	26—27
திரணைக் கம்பிமருக்கி 2 செ.		...	27 முதல் 30
சீமை		...	42—49

மகாமகோபாத்தியாய
டாக்டர். உ. வே. சாமிநாதையர்
நூல் நிலயம்,காலவஷ்திதி.
சென்னை-600090.

SEASON.

Rainfall.

மழை.—1912௵ ஏப்ரல்௴ 1உ யிலிருந்து 1912௵ டிஸம்பர்௴ 29உ வரையில் பெய்த மழையின் அளவு, இந்தக் காலத்தில் ஸராஸரியில் பெய்திருக்க வேண்டிய மழையின் அளவும், கீழே அங்குலம் ஸெண்டுகளாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

மழை பெய்த ஊரின் பெயர்.	பெய்த மழை அங்குலம்.	பெய்திருக்க வேண்டிய மழை அங்குலம்
கோபால்பூர்	37·33	43·56
வால்டேர்	30·96	35·08
காக்கினடா	26·19	37·83
மசூலிப்பட்டணம்	42·91	39·11
நெல்லூர்	44·48	33·02
மதராஸ்	43·86	47·87
கூடலூர்	47·88	48·10
நாகப்பட்டணம்	40·04	50·37
பாம்பன்	27·59	33·81
கொழும்பு	96 17	74·28
திருவநந்தபுரம்	89·61	60·32
கொச்சி	143·19	110·31
கள்ளிக்கோட்டை	139·64	115·71
மங்களூர்	144·71	126·84
மெர்க்காரா	133·12	125·78
ஐதராபாத்	23·40	30·21
பல்லாரி	22·41	19·60
கர்நூல்	19·17	26·36
கடப்பை	28·20	30·00
ஹாஸ்ஸான்	40·65	35·36
பெங்களூர்	41·35	34·58
கொடைக்கானல்	62·75	54·41
உதகமண்டலம்	52·41	52·34
கோயம்புத்தூர்	29·55	20·63
வேலூர்	42·22	42·72
சேலம்	32·86	38·97
திருச்சினப்பள்ளி	32·08	31·01
புதுக்கோட்டை	36·74	31·15
மதுரை	33·28	34·68
திருநெல்வேலி	23·93	23·50